
உயிராக வா நிலா
ஷெண்பா

# உயிராக வா நிலா

## அத்தியாயம்–1

"பயணிகளின் கனிவான கவனத்திற்கு..." என்ற ரயில் நிலைய அறிவிப்பை கவனித்தபடியே நடைபாதை சீட்டை வாங்கிக்கொண்டு கோவை நகரின் மிதமான குளிர் உடலில் ஏற்படுத்திய உற்சாகத்தை அனுபவித்தபடி துள்ளலுடன் சேரன் எக்ஸ்ப்ரஸ் வந்து நிற்கும் நடைபாதைக்கு வந்து நின்றவனின் பார்வை நொடிக்கொருதரம் தன் கைக்கடிகாரத்தையும், ரயில் வருகிறதா என்றும் மாறிமாறி பார்த்துக்கொண்டு இருக்க அவனின் அவஸ்தை புரியாத சேரன் எக்ஸ்ப்ரஸ் அவன் பொறுமையை வெகுவாக சோதித்துவிட்டு மெல்ல ஆடி அசைந்து தனக்குரிய இடத்தில் வந்து நின்றது.

இறங்கியவர்களுக்கு வழிவிட்டு நின்றவன் இறங்க வேண்டியவர்கள் இறங்கியதும், ரயிலில் தாவி ஏறி அவளின் இருக்கை எண்ணின் அருகில் சென்று நின்றான். முகத்தை கழுவிவிட்டு வெண்ணிற பூந்துவாலையில் மென்மையாக ஒற்றியபடி அமர்ந்திருந்தவள், தன் எதிரில் வந்து புன்னகையுடன் நின்றவனை பார்த்ததும் ஆச்சர்யத்தில் கண்கள் விரிய இதழ்கள் சிரிப்பில் மலர்ந்தது.

" குட் மார்னிங் மேடம்" என புன்னகையுடன் சல்யூட் அடித்தவனை, தன் கருவண்டு விழிகளை அகல விரித்து குறும்புடன், "குட் மார்னிங் ரிஷி சார்"

சிரிப்புடன் அவளருகில் அமர்ந்தவன், "என்ன மேடம் ட்ரிப் எப்படி இருந்தது ?"

"ரொம்ப நல்லா இருந்தது. பிரெண்ட்ஸ் எல்லோரும் சேர்ந்து நல்லா என்ஜாய் பண்ணினோம். உங்களை எல்லோரும் ரொம்ப விசாரிச்சாங்க. உங்க வேலையை ஒதுக்கி வச்சிட்டு கல்யாணத்துக்கு வரக்கூடாதான்னு கல்யாண பொண்ணு ரொம்பவே கோவிச்சிகிட்டா"

"அதனால் என்ன அவங்களை நம்ம வீட்டு விருந்துக்கு நாம ரெண்டு பேரும் நேரில் போய் அழைத்துவிட்டு வரலாம். டோன்ட் வொர்ரி. சரி சரி கிளம்பு கிளம்பு உனக்காக தான் நேத்து மீட்டிங் முடிந்து வீட்டுக்கு கிளம்பாமல் இருந்தேன்" என சொல்லிக்கொண்டே அவளின் ட்ராவல் பேகை வாங்கி தோளில் மாட்டிக்கொண்டு முன்னால் நடக்க தன் கைப்பையுடன் அவனை தொடர்ந்தாள்.

"அத்தையும், மாமாவும் எப்படி இருக்காங்க?"

"நல்லா இருக்காங்க. ரெண்டு பேருக்கும் நீ அப்படி என்ன சோப்பு போட்டு வச்சிருக்கன்னு எனக்கு புரியவே இல்லை. தினம் போனில் காலைல அரைமணி நேரம் தூங்கும் முன்னால் ஒருமணி நேரம் பேச்சுன்னு நாலு நாள் தள்ளிட்டு பார்க்கலை, பேசலைன்னு கவலைவேற" என பேசிக்கொண்டே காரை செலுத்த

"ஆமாம் அத்தை, மாமா மட்டும் தான் பேசினாங்களா? நீங்க பேசலையா? அத்தையாவது ரெண்டு முறைதான். ஆனால் நீங்க ஒருநாளைக்கு மூணு, நாலு முறை" என விரல் விட்டு எண்ணுவது போல கிண்டலாக சிரிக்க

"டேய் ரிஷி தேவையா உனக்கு இதெல்லாம். உன் வாயே உனக்கு முதல் எதிரி" என தனக்கே



சொல்லிக்கொள்ள நித்தி மௌன புன்னகையுடன் அவனை பார்த்துக்கொண்டு இருந்தாள்.

நான்கு நாட்கள் கதையை பேசி சிரித்தபடி கோத்தகிரியில் இருந்த வைதேகி இல்லத்தின் முன்பாக வண்டியை நிறுத்தினான்.

வீட்டிற்கு வந்த நித்தி ஓடி சென்று, "அத்தை" என வைதேகியை அணைத்துக்கொள்ள கூந்தலை பரிவுடன் தடவியவர் நித்தியுடன் பேசிக்கொண்டே உள்ளே சென்றார். குளித்துவிட்டு வந்தவள் டைனிங் ஹாலில் வந்து அமர வைதேகி பார்த்துபார்த்து பரிமாறினார்.

"ம்ம் நித்தி வந்தாச்சா? இனி புருஷன், பிள்ளை எல்லாம் உங்க அம்மா இரண்டாம் பட்சம்" என்று சிரிப்புடன் வந்தார் சகாதேவன்.

"எங்களை ஏதாவது சொல்லலைனா உங்களுக்கு பொழுதே போகாதே" என்றபடி தன் கணவருக்கும் பறிமாறியவர் நித்தியின் தட்டில் இன்னும் இரண்டு இட்டிலியை வைத்தார்.

"அத்தை ப்ளீஸ்..., அத்தை இத்தனை இட்டிலியும், தோசையும் சாப்பிட்டால் அவ்ளோதான். நல்லா குண்டு பூசணிக்கா மாதிரி ஆகிடுவேன்" என சிணுங்கலுடன் பேசியபடி வைதேகியின் விருந்தோம்பலில் திக்குமுக்காடியவள் சொல்ல,

"இப்போவே பூசணிக்கா தான் இனியுமா நீ பூசணிக்கா ஆகணும்" என கிண்டலாக சிரிக்க,

"அவளுக்கு என்னடா வஞ்சிக்கொடி மாதிரி இருக்கா, பூசணிக்காய்னு சொல்கிறாயே" என அங்கலாய்த்துக்கொண்டார். அவனுக்கு பொய் கோபத்துடன் ஒழுங்கு காட்டியவளுக்கு புரையேறியது.

"பார்த்தும்மா, மெதுவா சாப்பிடு. பாரு புரையேருது?" என தன் மருமகளிடம் தண்ணீர் டம்ளரை எடுத்து அவளுக்கு குடிக்க கொடுத்தவர், தன் மகன் புறம் திரும்பி, "சாப்பிடும் போது சும்மா இருக்க மாட்டியா?" என மகனை குற்றம்சாட்டிக்கொண்டே கண்கள் கலங்க இருமியவளின் தலையில் தட்டி முதுகை வருடிய வைதேகி, "யாரோ உன்னை நினைக்கிறாங்க நித்திம்மா" என சொல்ல தன் முத்து பற்கள் தெரிய சிரித்தாள்.

"ஹலோ மேடம் யாராவது நினைத்தால் தான் உனக்கு புரையேறணும்னு இல்லமா, யாராவது திட்டினா கூட புரை ஏறும்" என்றான் கிண்டலாக.

"இந்த அத்தானுக்கு என்னை ஏதாவது சீண்டிக்கொண்டே இருக்கணும் இல்லைனா நேரமே ஓடாது" என்று சொல்லிவிட்டு அவனை பார்த்து கழுத்தை சிலுப்ப

அன்புடன் அவள் தலையை வருடிய வைதேகி, "நம்ம நித்தியோட குணத்துக்கு யாருக்குடா அவளை பிடிக்காமல் போகும்?" என்று பாசத்துடன் சொல்ல வைதேகியின் பதிலில் லேசாக முகம் சுருங்கியவள் தன்னை சமாளித்துக் கொண்டு தட்டை காலி செய்துவிட்டு எழுந்தாள்.

மாலை அலுவலகத்தில் இருந்து திரும்பிய ரிஷி, ஹாலில் அமர்ந்திருந்த தந்தையிடம் தாங்கள் புதிதாக கட்ட இருக்கும் ரிசார்ட்டின் மாடல்களை லாப்டாப்பில் காட்டி அதை பற்றி விவரித்துக்கொண்டு தன் தந்தையின் ஆலோசனையையும் கேட்டுக்கொண்டு இருந்தான்.

"சரி ரிஷி அம்மாவிடமும், நித்தியிடமும் பேசி அவங்களுக்கு எந்த மாடல் பிடிக்குதுன்னு கேட்டு



முடிவுசெய்திடலாம். நான் நம்ம க்ளப் வரை போய் வரேன்" என்று கிளம்பினார்.

டைனிங்கில் நின்று கண்ணாடி பாத்திரங்களை துடைத்துக்கொண்டு இருந்த நித்திலாவின், அருகில் இருந்த சேரை தன் புறமாக திருப்பி போட்டு புன்னகையுடன் அமர்ந்தவனை, "என்ன இன்னைக்கு ஒரே சிரிப்பு?" என ஓரக்கண்ணால் ரிஷியை பார்த்துக்கொண்டே கேட்டாள்.

"துன்பம் வரும்போது சிரிக்கணுமாம், வள்ளுவர் சொல்லி இருக்கார்" என்றவனை பாத்திரத்தை துடைத்துக்கொண்டே நிமிர்ந்து புரியாமல் பார்த்தாள்.

"போனவாரம் நாலு நாள் இங்கே இல்லாத துன்பம் ஒண்ணு இன்னைக்கு காலைல ட்ரெயின் பிடிச்சு வந்து இறங்கி இருக்கு, அதான் அந்த துன்பத்தை மறக்க சிரிச்சிட்டு இருக்கேன்" என குறும்பாக உரைத்தான்.

அவனை முறைத்தவள், "நான் உங்களுக்கு பிரச்சனையா? நாலு நாள் உங்களை தட்டி கேட்க ஆள் இல்லாமல் ரொம்ப தைரியம் ஆகிடுச்சி" என்றவள் வைதேகி வருவதை கண்டதும் மீண்டும் தன வேலையை தொடங்கினாள்.

ரிஷி வேண்டுமென்றே, "என் தைரியத்துக்கு என்ன குறை மேடம்? இந்த அளவுக்கு தைரியமாக இல்லைனா உன்னை மாதிரி ஒரு வாயாடியை கட்டி மேய்க்க முடியுமா?" அவனின் சீண்டல் வேலை பிரமாதமாக வேலை செய்ய, "நீங்க கட்டி மேய்க்க நான் என்ன கழுதையா? குதிரையா?" என்றாள் தலையை சிலுப்பிக்கொண்டு.

"சே சே உன்னை போய் அப்படியெல்லாம் சொல்வேனா நித்தி"

"அதானே பார்த்தேன்" என சிரிப்புடன் அங்கிருந்து அகன்றவளை, குறும்பு பார்வை பார்த்தபடி,"கழுதை, குதிரையெல்லாம் பாவம் இதை கேட்டால் ரொம்ப பீல் பண்ணும்"என சத்தமாகவே முணுமுணுக்க வைதேகி சட்டென சிரித்துவிட்டார்.

"என்னது" என திரும்பியவள் வைதேகி சிரிப்பதை பார்த்ததும்,"அத்தை நீங்க... ஹூம்....."என்றவள், அருகில் இருந்த சோபாவில் சென்று கோபத்துடன் அமர்ந்தாள்.

அவளின் கோபத்தை ரசித்தவன் மேலும், "ராதே உனக்கு கோபம் ஆகாதடி" என்று அவள் அமர்ந்திருந்த சோபாவின் பின்புறம் வந்தவனின் கைபேசி அழைக்கவும் "ஒன்மினிட்" என இருவரிடமும் கேட்டுக்கொண்டு வெளியே சென்றான்.

சிரிப்புடன் தன் அத்தையை பார்த்தவள் அவர் கண்களை துடைத்துக்கொள்வதை கண்டதும்,"அத்தை என்ன இது?" என பாசத்துடன் கடிந்துக்கொண்டு அவர் கழுத்தை கட்டிக்கொண்டாள்.

"நீ வந்ததுக்கு பிறகு பெண் குழந்தையே இல்லை என்ற கவலை எங்களுக்கு போய்டுச்சி. நான் நினைப்பது மட்டும் நடந்தால்,...... நடந்தால் என்ன? நடக்கும் என நம்பிக்கை வந்தாச்சு" என சேலைத்தலைப்பில் கண்களை துடைத்துக்கொண்டார்.

அவர் சொல்ல வந்ததை புரிந்துக்கொள்ளாமல் தன் ஆசை அத்தையின் கண்ணீரை துடைக்கும் பொருட்டு, "டோன்ட் வொர்ரி அத்தை, எல்லாம் நல்லபடியா நடக்கும்" என சொல்லிவிட்டு கிச்சனுக்கு செல்பவளையே புன்னகையுடன் பார்த்தார்.



போன் பேசிவிட்டு வந்த ரிஷியுடன் மீண்டும் கேலியும் கிண்டலுமாக பேச ஆரம்பித்தது இரவு வரை தொடர்ந்தது. அதே சந்தோஷத்துடன் உறங்க சென்றவளுக்கு இனிவரும் நாளில் தன் தூக்கம் தொலைத்துவிட்டு தவிக்கபோவதும் அவளுக்கு தெரியவில்லை. தவிக்கவைக்க ஒருவன் வரப்போவதையும் அவள் அறியவில்லை.

"நித்தி ரெடியா? கிளம்பலாமா?" என்று கேட்டவனின் குரல் கேட்டு, "கிளம்பலாம். நான் தயார்" என்று சொல்லிக்கொண்டே வந்தவள் வைதேகியின் அருகில் வந்து,"அத்தை நான் கிளம்பறேன். நீங்க உங்க உடம்பை பார்த்துக்கோங்க" என பரிவுடன் சொன்னவளை பாசம் பொங்க பார்த்தார் வைதேகி.

"இன்னைக்கே ஹாஸ்ட்டலுக்கு போகணுமா இன்னும் ரெண்டு நாள் இருந்துட்டு போயேம்மா. நீ இருந்த வரைக்கும் வீடே கலகலன்னு இருந்தது. இவனுக்கு வேலை வேலைன்னு ஓடணும், உங்க மாமா பிரெண்ட், க்ளப்னு வீட்டிலேயே தங்குவதில்லை. நான் ஒருத்தி தனியா கிடந்து அல்லாடணும்"

இப்படி ஆரம்பிக்கும் அம்மா கடைசியில் எங்கே வந்து முடிப்பார் என்று உணர்ந்த ரிஷி, "அம்மா அவ இங்க இருந்தாலும் ஒண்ணுதான் ஹாஸ்ட்டலில் இருந்தாலும் ஒண்ணுதான். இப்போ அவ யாரு? 'இன்டீரியர் டிசைனர்'. அவங்களுக்கும் வேலை இருக்குமா. அதோட நம்ம ரிசாட்டுக்கு இன்டீரியர் பண்ண போறதே அவதானே"

"ஆமாம் அத்தை நானும் அடிக்கடி வந்து உங்களை பார்த்துவிட்டு போறேன். இப்போ கிளம்பட்டுமா?" என பிரியா விடைபெற்று கிளம்பினாள்.

"நித்தி, சொன்னதெல்லாம் நினைவு இருக்கு இல்லையா? புதன்கிழமை, நம்ம வீட்டில் மீட்டிங் இருக்கு. நம்ம ரிசாட்டோட மாடல், என்னென்ன பெசிலிட்டீஸ், டிசைன் வேணும்னு நாம டீடைலா அவங்களுக்கு சொல்லிடணும். அவர் வந்து பேசி முடித்து ஒருவாரத்தில் பூஜை போட்டு வேலையை ஆரம்பிக்கணும்"

"நோ வொர்ரீஸ். எல்லாம் நோட்பண்ணி, லேப்டாப்பில் பீட் பண்ணி பிரிண்ட் அவுட் கூட எடுத்துட்டேன். நமக்கு ஒண்ணு, பில்டர்ஸ்க்கு ஒண்ணு. ஏன் அத்தான் இவங்களை ஹோட்டல்லையே மீட் பண்ணி பேசலாம் இல்லையா? எதுக்கு வீடு வரை கூட்டி வரீங்க. அதோடு இன்னும் நல்ல பேமஸ் பில்டரா பார்த்து இருக்கலாமே" என்றாள்.

புன்னகைத்தவன், "இது நம்ம கனவு ப்ராஜெக்ட். நிச்சயம் நல்ல பில்டர் கைல தான் பொறுப்பை கொடுப்பேன். மூணே வருஷத்தில் அசுர வளர்ச்சி. நல்ல பேரோட வருவது இந்த காம்படேடிவ் வால்டுல எவ்வளோ கஷ்டம். டெல்லில நம்ம ஆஷிஷ்ஷோட ஹோட்டல் இவங்க கட்டிகொடுத்தது தான். பார்த்தவுடனேயே முடிவு பண்ணிட்டேன் நம்ம ரிசாட் இவங்களை வச்சி தான் கட்டணும்னு. புல் டீலிங்கும் போன் அண்ட் நெட் மூலமே பேசி முடிச்சிட்டேன். ஆஷிஷும் நம்மை பற்றி சொன்னதில் அவங்களும் நேரில் பார்த்துட்டு முடிவு சொல்வதாக சொல்லி இருக்காங்க" என்றான்.

"நான் ஊரிலிருந்து வருவதற்குள் இவ்ளோ வேலையும் முடிச்சிட்டீங்க. வர ஆர்க்கிடெக்டுக்கு தமிழ் தெரியுமா? இல்ல அதுக்கு தனியா ட்ரான்ஸ்லேட்டர் வைக்கணுமா?" என்றாள் சிரிப்புடன்.

"அவரும் தமிழ் தானாம். எந்த பயமும் வேண்டாம்"என சொல்லவும் ஹாஸ்ட்டல் வரவும் சரியாக



இருந்தது. காரை நிறுத்தி, அவளை இறக்கியவன், அங்கிருந்து உடனடியாக விடைபெற்று கிளம்பினான்.

புதன்கிழமை மதியம் தன் கைபேசியின் அழைப்பை எடுத்தவன், "ஹலோ ரிஷி சார் ஹவ் ஆர் யூ?" என்றவளின் குரலைகேட்டதும்

சிரிப்புடன், "என்ன மேடம் இவ்ளோ பவ்யமா பேசறீங்க? ஏதாவது ஏடாகூடமா வேலை செய்து வச்சிருக்கீங்களா என்ன?"

"ம்ம்...! நான் இப்போ ஊட்டிக்கு போயிட்டு இருக்கேன்"

சிரிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தவன் அவள் பதிலை கேட்டதும், "ஊட்டிக்கா....? எதுக்கு? இன்னைக்கு எந்த ப்ரோக்ராமும் வச்சிக்காதே, நைட் மீட்டிங் இருக்குன்னு சொல்லி தானே இருந்தேன்?" என்றான் சற்று எரிச்சலுடன்.

"ப்ளீஸ் அத்தான். கொஞ்சம் அட்ஜஸ் பண்ணிகோங்க. ஊட்டில நான் இன்டீரியர் வொர்க் செய்த த்ரீஸ்டார் ஹோட்டல் ப்ரோபரெட்டர் நேரிலே வந்து என்னை அவங்க ஹோட்டல் லஞ்சுக்கு இன்வைட் பண்ணி இருக்கார். அதோடு இன்னும் ரெண்டு மூணு க்ளயன்ட்ஸ் என்னை மீட் பண்ணி பேசணும்னு சொல்லி இருக்காங்களாம். ஒசில லஞ்சையும் முடிச்சிக்கிட்டு, அப்படியே ஒரு பிஸ்னஸ் ஆர்டரையும் பிடிச்சிட்டு வந்திடலாம்னு போயிட்டு இருக்கேன். எப்படியாவது நான் ஏழு மணிக்குள்ள வர பார்க்கிறேன் ப்ளீஸ்" என்றாள் கெஞ்சலுடன்.

அவளின் கெஞ்சல் மொழியில் சற்று இளகியவன் ,"ஓகே ஓகே, உன்னுடைய பிஸ்னஸ்க்காக நீ போற ஆல் த

பெஸ்ட். ஆனால் சீக்கிரம் வந்திடு. அப்படி நேரம் ஆகும் என தெரிந்தால் எனக்கு போன் செய். நான் கார் அனுப்புகிறேன்" என்றதில் அவனின் அக்கறை தெரிந்தது.

"அதெல்லாம் ஒன்னும் பிரச்சனை இல்லை. அவங்களே காரில் கூட்டிவந்து விட்டுடுவாங்க. நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன். பை"

பதிலுக்கு, "பை" என சொல்லி புன்னகையுடன் போனை வைத்தான்.

வாசலையே பார்த்தபடி இருந்த வைதேகி, "ரிஷி அவளுக்கு போன்செய்து பாரேன். மணி ஏழரை ஆகுதேப்பா" என்று கவலையுடன் சொல்ல

"வந்திடுவாம்மா" என சமாதானம் சொன்னபோதும் அவளின் போனுக்கு தொடர்ந்து முயன்றுக்கொண்டு இருந்தான். ரிங் போனதே தவிர எடுக்கவில்லை என்றதும் ரிஷி சலிப்புடன் போனை வைத்தான்.

அதேநேரம் வாசலில் வந்து நின்ற காரை கண்டதும் வந்தவனை வரவேற்க வாசலுக்கு விரைந்தான்.

"ஹலோ மிஸ்டர்.ரஞ்சன், வெல்கம்" என்ற ரிஷியிடம் கைகுலுக்கியவன், பின்னாலேயே வந்த ரிஷியின் பெற்றோரை பார்த்து, "வணக்கம்" என புன்னகையுடன் இருக்கைகளை கூப்பி வணங்கினான்.

அனைவரும் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்க, சகாதேவன், "நீங்க நார்த்ல இருந்தாலும் தமிழ் நல்லாவே பேசுறீங்களே"

"நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் திருநெல்வேலி. சென்னையில் படித்தேன். கொஞ்சம் நாள் ஜெய்பூர்ல வேலை செய்திட்டு இருந்தேன். பிறகு அங்கேயே சொந்தமாக பிஸ்னஸ் ஆரம்பித்தேன். இன்னைக்கு ஓரளவிற்கு எனக்குன்னு ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கேன்" என்றான் புன்னகையுடன்.



"அட நீங்க திருநெல்வேலியா..? அப்போ ரொம்ப நெருங்கிட்டோம். எங்க அத்தையும் திருநெல்வேலி தான்" என ரிஷி சொல்ல

"ஓஹ்..! அப்படியா?" என்ற ரஞ்சனை

"உங்க கூட பிறந்தவங்க?" தன் கேள்வியால் தன் பக்கம் திருப்பினார் வைதேகி

"நான் ஒரே பையன். அப்பா இல்லை அம்மா மட்டும் தான். தனியாக விட்டுவிட்டு வருவது இது தான் முதல்முறை. அதுக்காகவே நான் வெளியூர் வேலை எதையுமே எடுத்து செய்வதில்லை. ஆனால் ரிஷி சார் என்னிடம் பேசியதும் ஏனோ என்னால் மறுக்கமுடியாமல் இங்கே வர சம்மதித்தேன். எல்லாம் பேசிமுடித்து ஆரம்பகட்ட வேலை முடிக்கும் வரை இருந்துவிட்டு பிறகு எங்க எஞ்சினியர் யாரையாவது வரவைத்து ஒப்படைத்து விட்டு போகலாம்னு இருக்கேன்" என்றான்.

"மிஸ்டர்.ரஞ்சன் உங்க வேலை முடியும் வரை நம்ம கெஸ்ட் ஹவுசிலேயே தங்கலாமே. உங்க மதரையும் கூட்டிவந்து வச்சிக்கலாம். என் மனைவிக்கும் பொழுது போய்டும். உங்க அம்மாவிற்கும் துணையாக இருக்கும்" என்றார் சகாதேவன்.

"ரொம்ப தேங்க்ஸ் சார். ஆனால் இந்த மிஸ்டரை மட்டும் கட் பண்ணிடுங்களேன்" என தழைந்த குரலில்

சொல்ல

"அப்போ நீங்களும் சாரை விட்டுட்டு, அங்கிள்ன்னு கூப்பிடலாமே" என்றார் சகாதேவன் சொல்ல,

"அப்படியே என்னையும் ரிஷின்னே கூப்பிடலாம் ரஞ்சன்" என்றான் ரிஷி.

ரஞ்சனும் சிரிப்புடன் அதை ஆமோதித்துக் கொண்டான். அதன்பின் அனைவரும் ரிசாட் பற்றி பேசிக்கொண்டு இருக்க, ரிஷி மட்டும் கையில் இருந்த வாட்ச்சை பார்ப்பதும், வாசலை பார்ப்பதுமாக இருந்தவன் தன் மொபைலை எடுத்துக் கொண்டு சற்று தள்ளிவந்தான்.

இரண்டு மூன்று அழைப்பிற்கு பதிலில்லாமல் போக ரிஷியின் முகத்தில் சற்று கவலை ஏற்பட மீண்டும் நித்தியின் மொபைலுக்கு முயல, மறுபக்கம் போனை எடுப்பதை உணர்ந்தவன், "நித்தி ஆர் யூ ஆல்ரைட்?" என்று பதட்டமான குரலில் விசாரித்தான்.

"சாரி ரிஷி மொபைலை வைப்ரேஷன்ல போட்டிருந்தேன் கவனிக்கவில்லை" என மன்னிப்பு கேட்கும் குரலில் சொன்னதும் நிம்மதியாக மூச்சுவிட்டான்.

"ரொம்ப சாரிவழியில் ட்ராபிக்ஜாம் பத்து நிமிடம் நான் வீட்டிற்கு வந்திடுவேன்".

"ஒகே ஒகே. ரஞ்சன் வந்தாச்சு. நாங்க பேசிட்டு இருக்கோம். நீ வா" என்றவன் உள்ளே வந்தான்.

**ஹா**லில் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதை பார்த்தவள் பக்கவாட்டு கதவு வழியாக மற்றொரு அறைக்குள் நுழைந்து முகத்தை கழுவிக்கொண்டு, கலைந்த தலையை ஒதுக்கிவிட்டு



பின்வாசல் வழியாக சமையலறைக்குள் நுழைந்ததும், "ஹப்பா...! என்ன ட்ராபிக், என்ன புகை, வரவர ஊட்டி கூட சென்னை மாதிரி சூடாகிட்டு வருது. இந்த புகைல கண்ணெல்லாம் ஒரே எரிச்சல்" என புலம்பியபடி வந்தவளை சமையலைறையில் இருந்த வைதேகி திரும்பி பார்த்தார்.

"என்ன நித்திம்மா, கொஞ்சம் சீக்கிரம் வரக்கூடாதா? ரிஷி வேற தவிச்சி போய்ட்டான்" என்றார்.

"யாரு உங்க பிள்ளையா? சரி நம்பிட்டேன்" என சிரித்தாள்.

"சரி வா" என ஹாலிற்கு சென்றவரை பின்தொடர்ந்தாள்.

அவளை பார்த்த சகாதேவன், "என்னம்மா வழியில் ட்ராபிக்கா?" என்றவர் "ரஞ்சன், இவள் என் மருமகள்" என்று அறிமுகம் செய்துவைத்தார்.

அதுவரை அவளையே வைத்தவிழி அகலாமல் பார்த்துக் கொண்டிருந்தவன் புன்னகையுடன் தன்பக்கம் திரும்பிய நித்திலாவை திகைத்த பார்வை பார்த்தபடி, "நி....நித்.....தி.லா...!!" என பேசமுடியாமல் எழுந்து நின்றான்.

"ஹலோ நிரஞ்சன் சார் நீங்களா? எப்படி இருக்கீங்க?" என கேட்டு இனிய சந்தோஷத்தில் இருந்தவனை அதிர்ச்சிஅடைய வைத்தாள்.

ஒருநொடி நிரஞ்சனின் முகம் திகைப்பையும், புருவசுளிப்பையும் வெளிப்படுத்த அடுத்தநொடியே தன்னை கட்டுபடுத்திக்கொண்டு சமாளித்து நின்றான்.

"ஹே நித்தி, ரஞ்சனை உனக்கு தெரியுமா?" ஆச்சர்யத்துடன் கேட்டான் ரிஷி

"பாட்டிவீட்டுக்கு எதிர்வீடுதான் சார் வீடு. லீவுக்கு போகும்போது பார்த்திருக்கேன். அவ்வளவுதான்" என அவ்வளவுதானில் அழுத்தம் கொடுத்து முடித்தவள் நிரஞ்சனை ஒரு அசாத்திய பார்வை பார்த்துவிட்டு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

## அத்தியாயம்–2

தான் தங்கி இருந்த ஹோட்டல் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்த நிரஞ்சனின் முகம் குழப்பம், வேதனை,கோபம், ஏமாற்றம், அதிர்ச்சி என தொடர்ந்து ஒரு நிலையில் இல்லாமல் அவன் முகபாவனைகள் மாறிமாறி கடைசியாக இறுகிப்போனவனாக காட்சி அளித்தான். நித்திலா.., நிலா.., என புலம்பியவனின் மனம் முழுதும் ஆக்கிரமித்து இம்சித்துக்கொண்டு இருந்தாள்.

மாலை ரிஷி வீட்டில் நடந்த நிகழ்ச்சி ஒவ்வொன்றும் அவன் நினைவில் வந்து சென்றது. தாமதமாக வந்த நித்திலாவை விசாரித்த சகாதேவனின் கேள்விக்கு பதில் சொன்ன நிமிடம் அவள் குரலை கேட்டு அவனையும் மீறி சடாரென திரும்பியவன் அமர்ந்திருந்த இருக்கையின் நுனிக்கு வந்தது உண்மை தானே.

வந்தவளை கண்டவனுக்கு, இனிய இன்ப அதிர்ச்சி. இதழ்களில் விரிந்த புன்னகை மேலும் வலுபெற்று சிரிப்பாக மாற தன் சொர்கத்தை கண்ட சந்தோஷம். தான் இனி காணவே போவதில்லை என நினைத்தவள், தன்னை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டவள் என நினைத்து அனுதினமும் தனக்குள் உருகிக்கொண்டு இருந்தவன், தன்னை அந்த துன்பத்திலிருந்து மீட்டுக்கொள்ள தன் உழைப்பில் நேரத்தை கடத்தியவனுக்கு இன்று



கிடைத்திருக்கும் பதவி, வசதி மரியாதை எல்லாம் வந்தும் தன் தேவதை இருக்குமிடம் தெரியாமல் வெறுமையாக இருந்த அவன் மனம் இன்று சந்தோஷத்தில் நிரம்பி வழிந்துக்கொண்டு இருக்க அந்த கணம் அடைந்த எல்லையில்லா மகிழ்ச்சி, அத்தனை நாள் முதுகில் சுமந்திருந்த பாரம் இறக்கிவைக்கப்பட்ட நிம்மதி.

ஆனால் அந்த நிம்மதியும் சந்தோஷமும் அடுத்த நொடியே யார் இந்த சந்தோஷத்திற்கு காரணமோ அவளாலேயே அதல பாதாளத்தில் தள்ளப்பட்டதே. அவள் தன்னை யார் என காட்டிக்கொள்ளாமல் இருந்திருந்தால் கூட அவனுக்கு இத்தனை வேதனை தெரிந்திருக்காதோ. ஆனால்"நிரஞ்சன் சார்"என்ற வார்த்தைகளிலேயே அவனை அவளால் ஒதுக்கி வைக்க முடிந்ததே எப்படி?

எப்படி நிலா எல்லாவற்றையும் மறந்தாய்? எல்லாவற்றையும் உன்னால் மறக்க முடிந்ததா? என்னால் முடியவில்லையே. ஒரு நாளா இரண்டு நாளா முழுதாக நெடிய, கொடிய நான்கு வருடம் உன்னை பிரிந்து தவிக்கும் என் நினைவு உனக்கு இல்லையா? நான் மட்டுமே இதையெல்லாம் எண்ணி எண்ணி மருகி இருந்தேனா? என்னை பார்க்கும் போதெல்லாம் உன் கண்களில் தோன்றிய வெளிச்சம். முகத்தில் தெரிந்த சந்தோஷம், இதழ்களில் மலரும் புன்னகை, நான் உன்னிடம் நேரடியாக பேசும் போது உன் கன்னசிவப்பு அதை மறைக்க நீ படும்பாடு என உன்னை நான் கணித்ததெல்லாம் உண்மை தானே. ஆனால் இன்று உன் முகத்தில் அப்படி எந்த சந்தோஷமும் என்னை கண்டதும் வந்ததாக தெரியவில்லையே.

ரயில் பயணத்தில் எதிர்வரிசையில் இருப்பவரிடம் ஹலோ சொல்வது போல தானே ஒரு பாவனை தெரிந்தது.

ஆனால் உன்னிடம் ஏதோ ஒரு மாற்றம் ஆனால் என்ன என்று தான் என்னால் உணரமுடியவில்லை. ஒருவேளை நான்கு ஆண்டுகளுக்கு முன் உனக்கு என் மீது ஏற்பட்டது வெறும் ஈர்ப்புதானா? என எண்ணியவனுக்கு அந்த நினைவே கசந்தது. இல்லை. நீ என் நித்திலா..., என் நிலா உன்னை உனக்காகவே கூட நான் இழக்க விரும்பவில்லை. தயாராகவும் இல்லை. போதும் இந்த பிரிவு.

நான்கு ஆண்டுகள் தேடி இருக்கும் இடம் தெரியாமல் இனி சந்திக்கவே போவதில்லையோ என்று நினைத்த நேரத்தில் எதிர்பாராத இந்த சந்திப்பு எதற்காக? இந்த வேலையை ஒதுக்க நினைத்தும் எந்த சக்தி தன்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தது? உன்னை சந்திக்க வேண்டும் என்ற விதி இருந்ததால் தானே. இது தாங்கள் இணைவதற்கு இறைவன் விதித்த வழி என்று நம்பினான். இனியும் அவளைவிட்டு பிரிந்து செல்லமுடியாது. இங்கிருந்து செல்வதானால் அது என் நிலாவுடன் தான் என்ற உறுதியுடன், ரிஷியின் ரிசாட் வேலை முழுமையாக முடித்துக்கொடுத்துவிட்டு செல்வதாக முடிவெடுத்து தன் மொபைலை எடுத்து ரிஷியின் எண்ணை அழுத்தினான்.

நிரஞ்சன் கிளம்பி சென்ற பிறகு தன் அறைக்கு வந்த நித்திலா ஓய்ந்து போனவளாக கட்டிலில் அமர்ந்தாள். இத்தனை நாள் மனதில் இருந்த உறுதியெல்லாம் அவனை கண்டதும் தவிடுபொடியானது. இயலாமையில் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கன்னத்தில் வழிந்து கைகளில்பட்டதும் அழக்கூடாது என்று நினைத்து கண்களை துடைத்த போதும் தன்னைமீறி நிரஞ்சனின் நினைவுகள் அவளை சுற்றி வந்து கண்ணீரை வரவழைத்தது.



மாலை தன் வேலையை முடித்துக்கொண்டு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த காரிலேயே அவசரம் அவசரமாக வீடு திரும்பியவள் காரை தெருமுனை பிள்ளையார் கோவில் அருகிலேயே நிறுத்தி இறங்கியவள், எல்லாம் நல்லபடியாக முடியவேண்டும் என்ற வேண்டுதலுடன் வேகமாக வந்தவள் வாசலில் நின்று ரிஷியுடன் கைகுலுக்கிக்கொண்டு இருந்தவனை கண்டதும் அதிர்ந்து போனாள். தான் காண்பது உண்மைதானா? இல்லை பிரமையா? என கண்களை ஒருமுறை அழுந்த மூடி திறந்து பார்த்தபோது ரிஷியின் பெற்றோருடன் பேசிக்கொண்டே பின்னந்தலையை தடவியபடி உள்ளே செல்பவனை பார்க்க அவ்வளவு நேரம் இருந்த உண்மையா? பிரமையா? என்ற சந்தேகமும் அவன் செயலில் அவன்தான் என்று உறுதிப்பட உள்ளுக்குள் நொறுங்கியவள் மதில்சுவற்றின் மீதே சாய்ந்து நின்றாள்.

யாரை இனி பார்க்கவேகூடாது என தினமும் கடவுளை வேண்டிக்கொண்டாளோ, யாரை மறக்கவேண்டும் என்று நினைத்தும் இன்றுவரை மறக்கமுடியாமல் தவிக்கிறாளோ அவன் அவளின் கண்முன்னே நின்றிருக்க, தன்னிலை புரியாமல் கண்கள் கண்ணீரை அணையுடைக்கவா என கண்ணிமைகளின் விளிம்பில் நின்று அவளை பயமுறுத்திக்கொண்டு இருக்க இந்த மனநிலையோடு அவன் முன் நிற்கமுடியாது. நின்றால், தன்னை கட்டுபடுத்திக்கொள்ள முடியாமல் அவன் எதிரிலேயே அழுதுவிடுவோம் என புரிய அங்கு நிற்கமுடியாமல் வந்த வழியே நடந்தவள் தெருமுனை பிள்ளையார் கோவில் பிரகாரத்தில் சென்று அமர்ந்தாள்.

தன்னையும் மீறி மௌனமாக அழுதவள் இப்படியே

வந்த சுவடு இல்லாமல் திரும்பி சென்றுவிடலாமா என்று தோன்றிய எண்ணத்தையும் மறுநொடியே மாற்றிக்கொண்டாள். இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளை எப்படியும் நிரஞ்சனை சந்தித்தாக வேண்டும் என புரிய நேரம் செல்வது தெரியாமல் அமர்ந்திருந்தாள்.

"அக்கா உங்க போன் ரொம்ப நேரமா அடிக்குது" என யாரோ ஒரு சிறுமி அவளை உலுக்கி சொல்ல நினைவு திரும்பியவள் தன்னை சிறிது ஆசுவாசபடுத்திக்கொள்ள எடுத்துக்கொண்ட நேரத்திற்குள் அழைப்பு வந்து நின்றுபோய் இருந்தது.

அடுத்த அழைப்பிற்கு செவிமடுத்து அவள் பேசும்முன்னே கேட்ட ரிஷியின் பதட்டமான குரலில் வெட்கியவள் மன்னிப்புக்கேட்டுக்கொண்டு சற்றுநேரத்தில் வருவதாக சொல்லி போனை வைத்தாள். தன்னை சமன்படுத்திக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தவள் முன்னறையிலேயே முகத்தை கழுவி கொண்டு நிரஞ்சன் முன்பு சென்று நிற்கும் போது தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டக்கூடாது என மனதை கல்லாக்கிக்கொண்டு முகத்தை துடைத்துக்கொண்டு வைதேகியுடன் ஹாலுக்கு சென்றவள், சகாதேவன் அவனை அறிமுகபடுத்திய போதும் தன்னால் இயல்பாக பேச முடிந்ததை நினைத்து அவளையே மெச்சிக்கொண்டாள்.

தன் பேச்சு அவனுக்கு நிச்சயம் அதிர்ச்சி என்பதை அவனின் அந்த ஒரு நொடி திடுக்கிடலும், புருவசுளிப்புமே அவனின் மனதை அறிய போதுமானதாக இருந்தது. நிச்சயம் அதிர்ச்சியாக தான் இருக்கும். என் நேசத்தை வெளிப்படையாக சொல்லாதபோதும் நிச்சயம் அவன் அதை உணர்ந்திருப்பான். அப்படியும் அவன் என்னை வேண்டாம்



என்று சொல்லி ஒதுக்கினானே. அந்த நொடி என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை அந்த அதிர்ச்சி எப்படி இருக்கும் என்பதை இப்போது அவனும் பட்டிருப்பானே என்ற எண்ணம் வர அதுவும் அவளை சந்தோஷபடுத்தவில்லை. அவன் முகம் சுருங்கியதை தன்னால் தாங்கமுடியவில்லையே என்ற எண்ணத்தில் தன் மீதே எரிச்சலாக வந்தது.

அதன்பிறகு நிரஞ்சன் கிளம்பி செல்லும் வரை இருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பதை நேரடியாக பேசுவதை தவிர்த்துக்கொண்டனர். இன்று ஒருநாளுக்கே இந்த பாடு அவன் இன்னும் ஒரு மாதமாவது இங்கே இருப்பானே எப்படி சமாளிப்பது கடவுளே என்று நினைத்துக்கொண்டே தன்னையும் மறந்து அமர்ந்திருந்தவள் எப்போது உறங்கினாளோ காலையில் எழும் போது சூரியன் சுள்ளென தன் கதிர்களால் சுட்டெரித்துக்கொண்டு இருந்தான்.

இருள் சூழ்ந்திருந்த இரவு மெல்ல வெளிச்சம் பரவி விடிந்ததை போல அவளுக்குள்ளும் ஒரு தெளிவு ஏற்படத்தான் செய்தது. எதையும் முதல்முறை எதிர்ப்பாராமல் சந்திக்கும் போது உண்டாகும் அதிர்ச்சி அதிகமாக இருக்கும். அதுவே தெரிந்து சந்திக்கும் போது தன்னை தன் மனதை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நிச்சயம் முடியும். எந்த இடத்திலும் தன் மனதை நிரஞ்சன் அறிந்துக்கொள்ள இடம்கொடுக்க கூடாது. தன் மனம் இன்னும் அவன் மீது கொண்டுள்ள காதலை வெளிப்படுத்தும்படி நடந்துக்கொள்ளகூடாது, நிரஞ்சனையும் ஒரு எல்லைக்கு மேல் நெருங்கவிடக்கூடாது என்ற முடிவுடன் கீழே இறங்கிவந்தாள்.

இவ்வளவு யோசித்தவள் நிரஞ்சனை நெருங்க விடக்கூடாது என்று எண்ணினாலும் அவன் தன்னை நெருங்காமல் இருப்பானா என்று எண்ணிப்பார்க்கவே இல்லை. ஆனால் அவன் அவளை நோக்கி அடிமேல் அடியாக வைத்து நெருங்கிவரத்தான் செய்தான்.

நிரஞ்சன் வந்து சென்ற மறுநாள் காலையில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவளிடம் சகாதேவன் பேச்சுவாக்கில் நிரஞ்சன் ரிசாட் வேலை முழுவதையும் முடித்துகொடுத்துவிட்டு செல்லபோவதாகவும், தான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, நம் கெஸ்ட் ஹவுசில் தங்க சம்மதித்திருப்பதாகவும் சொல்ல வாயில் வைத்த உணவை மென்று உண்ண முடியாமல் தொண்டையை அடைப்பது போல இருந்தது நித்திலாவிற்கு. தண்ணீரை குடித்து உணவை விழுங்கியவள் ஆரம்பகட்ட வேலை முடித்துகொடுத்துவிட்டு சென்றுவிடுவேன் என்றவன் ஏன் தன் மனதை மாற்றிக்கொண்டான் ? என்ன காரணம் ? என மண்டையை குடைந்த கேள்விகளுக்கு விடை கிடைக்காமல் அறிந்துக்கொள்ள எந்த முயற்சியையும் எடுக்காமல் விடைபெற்றுக்கொண்டு ஹாஸ்ட்டலுக்கு வந்தவள் தன் வேலை நடக்கும் இடத்திற்கு செல்வதும் தன் அறைக்கு வருவதுமாக இருந்தாலும் மனம் குழப்பத்துடனேயே இருந்தது.

நடுவில் வைதேகியின் தொலைபேசி அழைப்பு அவளை வீட்டிற்கு வரசொல்லி சொல்ல வெறுப்பாக இருந்தாலும் யார் மீதோ இருக்கும் கோபத்தை தன் மீது பாசத்தை பொழியும் இவர்களிடம் எதற்கு காட்டவேண்டும் என்று தன்னையே கேட்டுக்கொண்டவள். ஒரு முடிவுடன் ரிஷியிடம் பேச முழுதாக மூன்று நாட்களுக்கு பிறகு வீட்டிற்கு வந்தாள்.



சோர்ந்த முகமும், மூன்றே நாளில் துவண்ட கொடியைபோன்ற தோற்றத்துடனும் அவளை கண்ட வைதேகி,"என்ன நித்திம்மா உடம்பு சரி இல்லையா ?" என பரிவுடன் நெற்றியை தொட்டுப்பார்க்க அதுவரை இருந்த எரிச்சல் சலிப்பு எல்லாம் அந்த ஒரு அரவணைப்பான பேச்சில் போன இடம் தெரியாமல் மறைந்தது.

"அதெல்லாம் ஒன்னும் இல்லை அத்தை, கொஞ்சம் வேலை அதிகம்" என மனதை மறைத்து சொன்னவள் வைதேகியின் தோளில் சலுகையுடன் சாய்ந்துக்கொண்டாள். வைதேகி கேட்ட கேள்விகளுக்கு தன் போக்கில் பதில் சொல்லிக்கொண்டு இருக்க மனம் மட்டும் மூன்று நாட்களுக்கு முன் நடந்தவைகளை அசைபோட்டுக்கொண்டு இருந்தது.

"சொன்னா யாருக்கு புரியுது. அவன் என்னடான்னா இன்னும் கொஞ்சம் நாள் ஆகட்டும்னு சொல்றான், உங்க மாமா என்னடான்னா அவனுக்கு தெரியாததான்னு என் வாயை அடைக்கிறார். நீயும் வீட்டோடு இருன்னா வேண்டாம்னு சொல்லிட்டு ஹாஸ்ட்டல்ல போய் தங்கி இருக்க. வயசு பொண்ணை தனியா விட்டுட்டு நான் இல்ல வயித்தில் நெருப்பை கட்டிட்டு இருக்கேன். நடக்க வேண்டியது காலாகாலத்தில் நடந்தால் தானே நிம்மதி" என சொல்லிக்கொண்டு இருக்க தன் நினைவுலகிற்கு வந்தவள் என்ன விஷயம் என்று புரியாமல் நிமிர்ந்து அமர்ந்தாள்.

"நான் வேற உன்னிடம் புலம்பிகிட்டு, நீயும் என்ன செய்வ. இரு நான் போய் உனக்கு டிபன் ஏதாவது செய்கிறேன்" என்று எழுந்து சென்றார்.

இருந்த குழப்பத்தில் எதுவும் மனதில் பதியாமல்" அத்தான் எங்கே அத்தை ?"

"கெஸ்ட் ஹவுசில் இருக்கான். ரஞ்சன் வந்து தங்க போகிறார் இல்லையா? அது தான் அங்கே சுத்தம் செய்ய சொல்லி மேற்பார்வை பார்த்துக்கொண்டு இருக்கிறான். நீ போய் பேசிட்டு இரு நான் டிபன் கொடுத்தனுப்பறேன்"என சமையலறைக்கு சென்றுவிட நித்திலா ரிஷியை காண கெஸ்ட் ஹவுசிற்கு சென்றாள்.

ரிஷி மாடியில் இருப்பதாக வேலையாள் சொல்ல மாடிக்கு சென்றவளை பார்த்த ரிஷி புன்னகையுடன், "வாங்க நித்தி மேடம். என்ன மூணு நாளா ஆளையும் பார்க்க முடியலை, போன் செய்தாலும் பிஸின்னு வருது. இல்லைனா வேலையா இருக்கேன்னு பதில் சொல்லி கட் பண்ணிடறீங்க. இன்னும் கொஞ்சம் நாள் ஆனால் அப்பாயின்மெண்ட் வாங்கி தான் பார்க்கணும் போல"என சிரிக்க நித்திலாவும் கடமைக்காக புன்னகைத்தாள்.

"அத்தான் நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்"என தயங்கி சொன்னவளை கண்டவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இதுவரை அவள் இப்படி தயங்கியோ, சுற்றிவளைத்தோ பேசி பார்க்காதவன், தன் தந்தையின் இறப்பின் போது கவலை இருந்தாலும் அதை தனக்குள் புதைத்துக்கொண்டு தைரியமாக நின்றவள். இன்று தயங்குவதை காண அவளை கூர்ந்த பார்வையுடன் அளவிட்டான்.

"அ.. அத்தான் நான் என் ஆபீசை மூடிட்டு கொஞ்சம் நாளைக்கு ஏற்கெனவே என்னை கூப்பிட்ட சென்னை வேலையில் போய் சேரலாம்னு பார்க்கிறேன். ஒரு ரெண்டு வருஷம் அங்கே வேலைசெய்தால் இன்னும் நல்லா என்னோட வொர்க்கை இம்ப்ரூவ் பண்ணிக்கலாம்னு பார்க்கிறேன்"என தடுமாறி சொல்லிமுடித்தபோது ரிஷி எரிச்சலின் உச்சத்தில் இருந்தான்.



முடிந்த அளவிற்கு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு, "என்ன விளையாடுறியா? இது இன்னைக்கு பேசி முடிவெடுத்த விஷயம் இல்லையே எப்போதோ பேசி முடிவெடுத்தது. அதோடு இது நம்ம ட்ரீம் ப்ராஜெக்ட். இருக்கும் வேலையில் இப்போ இந்த வேலையை ஆரம்பிக்கனுமா என யோசித்தபோது நீ தானே நான் பார்க்கிறேன் முடிந்த போது நீங்க வந்து பாருங்கன்னு கொடுத்த நம்பிக்கையில் இவ்வளவு தூரம் வந்திருக்கோம். இப்போ கடைசி நேரத்தில் நீ இப்படி சொன்னா எப்படி? இதை நான் எதிர்பார்க்கல நித்தி. அப்படி உனக்கு பிடிக்காதது போல ஏதாவது இருந்தால் சொல்லு அதை மாற்ற முயற்சி பண்ணலாம். ஆனால் இன்னொருமுறை இந்த வார்த்தையை சொல்லாதே"

நித்திலா விடாமல், "இல்லை அத்தான் நான்..." என்று தடுத்து பேசியவளை முறைத்தபடி நின்றவனை கண்டதும் பாதியில் நிறுத்தியவள் அங்கிருந்து செல்ல திரும்பி நடந்தாள்.

"நித்திலா நில்லு"என அவளின் எதிரில் வந்து நின்ற ரிஷி,"நித்தி உன் ப்ராப்ளம் தான் என்ன? அன்னைக்கு ஊட்டி போய் வந்ததிலிருந்தே நீ ஆளே சரியில்லை. வாட் இஸ் ஈட்டிங் யூ?"என ஆதரவுடன் அவள் கரம்பற்றி கேட்க

"அதெல்லாம் ஒன்னும் இல்லை. நீங்க உங்க ஆர்கிடெக்டிடம் சொல்லி அவங்களையே இன்டீரியர் பண்ண சொல்லுங்க"

ரிஷி அவளிடம் தணிந்த குரலில், "இங்கே பார் நித்தி அம்மா தனியா நீ பெங்களூர் போய் இன்டீரியர் படிக்கவே விடமாட்டேன்னு சொன்னவங்களை நானும் அப்பாவும் கஷ்டப்பட்டு சம்மதிக்க வச்சோம். அதுவும் இனி வெளியூர் எங்கேயும் போய் வேலை பார்க்கிறேன், படிக்கிறேன்னு

சொல்லகூடாதுன்னு உன்னிடம் சம்மதம் வாங்கியதுக்கு பிறகு அரைமனதாக ஒத்துகிட்டாங்க. பிறகும் நீ இங்கே வந்ததும் ஹாஸ்ட்டலில் தங்கிக்கிறேன்னு சொன்னதும் அம்மா அப்பாவுக்கு கொஞ்சமும் பிடிக்கலை. ஆனாலும் உனக்காக உன் சௌகர்யத்துக்காக அப்பாவே அம்மாவிடமும் ஏதோ சொல்லி சமாதானபடுத்தி உன்னை ஹாஸ்ட்டலில் தங்க சம்மதிக்கவச்சார். இந்த ரெண்டு விஷயத்திற்கும் நான் ஏதும் சொல்லவில்லை ஆனால் நீ இப்போ சென்னைக்கு வேலைக்கு போறேன்னு சொல்வது எனக்கே பிடிக்கல. உனக்கு வேலை செய்யனும்னு தோணினால் இங்கேயே ஒரு நல்ல வேலை கிடைக்கும், இந்த ரிசாட்டுக்கு இன்டீரியர் நீ பண்ணனும்னு உன்னைவிட எனக்கு ரொம்ப ஆசை. அதனால் நீ தான் பண்ணனும். ஓகே"என சொல்லி தோளை தட்டிக் கொடுத்தவனையே திணறலுடன் பார்த்தபடி நின்றாள்.

"நீ எனக்காக இன்னொரு ஹெல்பும் பண்ணனும். தினமும் ஒரு பத்து நிமிடம் வந்துட்டு போயேன் அப்படி உன்னால் முடியவில்லை என்றாலும் பரவாயில்லை ஒரு ரெண்டு நிமிடம் அம்மாவிடம் போன் செய்தாவது பேசு. உன்னை நினைத்து அவங்களுக்கு ரொம்பவே கவலை நித்தி, ப்ளீஸ்" என்றவன் அவள் பதிலுக்கு காத்திருக்காமல் திரும்பி நடந்தான்.

ரிஷியின் சொல்படி நித்திலா தினமும் அரைமணிநேரம் வீட்டிற்கு வந்து வைதேகியிடம் பேசிவிட்டு சென்றாள். ஊருக்கு சென்ற நிரஞ்சனும் திரும்பிவந்து கெஸ்ட் ஹவுசில் தங்கிக்கொள்ள நித்திலாவின் பாராமுகம் மட்டும் அவனால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. தன்னிடம் அவளுக்கு என்ன தயக்கம்? ஏன் தன்னிடம் இப்படி விலகி போகிறாள்?



இன்னும் எத்தனை நாளைக்கு இந்த ஒதுக்கம்னு பார்த்திடுவோமே? என்ற எண்ணம் தோன்ற கூடவே அவளை நினைத்து புன்னகையும் எழுந்தது.

நம்மிடம் தான் இப்படி இருக்கா அம்மாவிடமும் இப்படி ஒதுங்கி போவாளா? அம்மா வந்ததும் நித்திலாவை பார்த்தால் அவங்களுக்கு நிச்சயம் சந்தோஷமாக இருக்கும் அதனால் தானே அவள் இங்கே இருப்பதை கூட அம்மாவிடம் சொல்லாமல் சர்ப்ரைஸா வச்சிருக்கேன் என தன் எண்ணப்போக்கில் யோசித்துக் கொண்டிருந்த வனுக்கு தான் சொன்ன வார்த்தைகள் தான் அவளை தன்னிடம் நெருங்கவிடாமல் வைத்திருக்கிறது என்ற உண்மை மட்டும் தெரியவில்லை.

பூமி பூஜைக்காக நிரஞ்சனும், ரிஷியும் முன்பே கிளம்பி சென்றுவிட தன் அத்தை மாமாவுடன் வந்து இறங்கியவளை கண்ட நிரஞ்சனின் கண்களில் ஒரு மின்னல் தோன்றி மறைய அவனின் பார்வை அவளை ரசனையுடன் வருடியது. முதல்முறையாக நித்திலாவை புடவையில் பார்த்தவனால் பார்வையை அவளிடமிருந்து விலக்கமுடியவில்லை. அடர்பச்சைநிற மைசூர்சில்க் புடவையில் கழுத்தை ஒட்டிய ஒற்றைகல் வைத்த டாலர் செயின் காதில் குட்டி ஜிமிக்கி அணிந்து தன் கண்களுக்கு தேவதையாக தோன்றியவளை தன் மனப்பெட்டகத்தில் சிறை பிடித்துக் கொண்டிருந்தவனை ரிஷியின் குரல் கலைக்க ஒரு பெருமூச்சுடன் ரிஷியை நோக்கி சென்றான்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அழகான மான்குட்டி போல துள்ளி குதித்தபடி ஓடிவந்து தன் அம்மாவின் கழுத்தை கட்டிக்கொண்டு சிரிப்புடன் வாய் ஓயாமல் வளவளத்துக்கொண்டு இருந்தவளா? இன்று

புடவையில் அடக்கமாக தேவைக்கு மட்டுமே பேசி, சிரித்து நாசுக்காக மற்றவரிடம் நடந்துக்கொள்வதை பார்த்தவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

பூஜை முடித்தபின்னர் அனைவருக்கும் இனிப்பை கொடுத்துக்கொண்டு வந்த நித்திலா கடைசியாக ரிஷியுடன் பேசிக்கொண்டிருந்த நிரஞ்சனை பார்த்துக்கொண்டே வர அவளின் வருகையை அறிந்து அவள்புறம் திரும்பிய நிரஞ்சனை கண்டதும் தன் பார்வையை அவசரமாக அவனிடமிருந்து விலக்குவதற்குள் அதை கண்டுக்கொண்டவனாக நிரஞ்சனின் உதட்டில் புன்னகை மேலும் விரிய அந்த புன்னகையில் நித்திலா தலைக்குப்புற விழுந்தாள். அடுத்த நொடியே அவள் முகத்தில் கடுமை ஏற வேண்டா வெறுப்பாக அருகில் சென்றவள் ரிஷியின் எதிரில் இனிப்பு நிறைந்த தட்டை நீட்ட, "ரஞ்சனுக்கு முதலில் கொடு நித்தி" என்றான்.

நிரஞ்சனின் கண்களை பார்க்காமலேயே தட்டை நீட்ட அவள் முகமாற்றத்தை கண்டவன் என்னவென்று புரியாமல் குழப்பத்துடன் இனிப்பை எடுத்துக்கொண்டு "தேங்க்ஸ்" என்ற குரலுக்கு அவளையும் அறியாமல், "வெல்கம்" என சொல்லி விட்டு நகர்ந்தாள்.

"ஹே நித்தி என்ன இப்படி ஓட்டம்? வந்து கொஞ்சம் நேரம் இப்படி உட்கார்" என அருகில் இருந்த சேரை இழுத்து அவளுக்கு போட்டான் ரிஷி

"இல்லை அத்தான் வந்திருக்கவங்களை கவனிக்கணும்" என அங்கிருந்து விலக

"அதெல்லாம் அம்மா பார்த்துபாங்க" என சொல்ல அவளும் வேண்டாவெறுப்பாக அமர்ந்தாள். நிரஞ்சனும், ரிஷியும் தங்கள் இளமைப்பருவம், கல்லூரிக்காலம், தங்கள் தொழிலில் வந்த நாட்டம் என சுவாரஸ்யமாக பேசிக்கொண்டிருக்க, நித்திலா எதையும் கவனிக்கும் மன நிலையில் இல்லை.



மனம் முழுதும் வேதனை சூழ்ந்திருந்தது. தனியாக யாரும் பார்க்காத இடத்திற்கு சென்று வாய்விட்டு அழவேண்டும் போல தோன்றிய எண்ணத்தை அடக்கிக்கொண்டாள். சே எதுக்கு இப்போ எனக்கு அழுகை வரணும்? யாராவது எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என ஆத்திரத்துடன் கண்களில் கசிந்த கண்ணீரை மற்றவர் அறியாமல் சுண்டி எறிந்தாள்.

"நித்திலா..." என அழைத்த சகாதேவன் குரல் கேட்க "நித்தி நானும் அத்தையும் ஒரு பங்க்ஷன் போகணும். உன்னை ரிஷி ஹாஸ்ட்டலில் விட்டுவிடுவான். சரியாம்மா" என கேட்க "சரி" என தலையசைத்து அவர்களுக்கு விடைகொடுத்தாள்.

அதன்பிறகு வந்து இறங்கிய கட்டுமான பொருட்களை சரிபார்த்து, சில ஆரம்ப கட்ட வேலைகளை பற்றி பேசிக்கொண்டு இருக்க நித்திலாவும் வேலை மும்முரத்தில் தன் மனநிலையை சற்று திசை திருப்பினாள்.

எதேச்சையாக தன் கைக்கடிகாரத்தை பார்த்த ரிஷி, "மை காட், இன்னும் அரைமணி நேரத்தில் நான் டீ எஸ்டேட் மீட்டிங்கில் இருக்கணும். நித்திலா குயிக் கிளம்பு உன்னைவிட்டுட்டு நான் கிளம்பனும் எப்படியும் இன்னைக்கு லேட்" என பரபரத்தவனிடம்

"நான் ஏதாவது ஆட்டோவில் போய்டுவேன் அத்தான் நீங்க கிளம்புங்க" என சொல்ல ரிஷி அதற்கு சம்மதிக்கவில்லை.

"வேண்டாம் வேண்டாம். லேட் ஆனாலும் பரவாயில்லை நானே உன்னை கூட்டிபோய் விட்டுட்டு போறேன்'' என காரை நோக்கி சென்றவனை"ரிஷி"என நிரஞ்சனின் குரல் தடுத்தது.

"இப் யூ டோன்ட் மைன்ட் நான் நித்திலாவை ஹாஸ்ட்டலில் விட்டுவிடுறேன். நீங்க கிளம்புங்க" என சொல்ல

"தேங்க்ஸ் ரஞ்சன். நித்தி நீ ரஞ்சன் கூட கிளம்பு நான் ஈவ்னிங் வந்து போன் செய்றேன். பை நித்தி பை ரஞ்சன்" என்று சொல்லிக்கொண்டே அவசரமாக காரை கிளப்பி சென்றான். நித்திலா வெறித்த பார்வையுடன் நின்றிருந்தாள்.

## அத்தியாயம்–6

ரிஷி கிளம்பி செல்வதை வெறித்து பார்த்துக்கொண்டு நின்றிருந்த நித்திலாவிற்கு உள்ளுக்குள் கோபம் கனன்றுக்கொண்டு இருந்தது. தன்னை ஒருவார்த்தை கேட்காமல் இருவருமே பேசி முடிவெடுத்து தன்னை எவ்வளவு தைரியமாக தனியாக ஒரு அந்நியனுடன் விட்டுசெல்லும் ரிஷியை நினைக்கநினைக்க அவளுக்கு கோபத்தில் மூக்கு நுனி சிவந்தது. அதற்கு மேல் தன்னை அழைத்துச்செல்ல தானே முன்வந்த நிரஞ்சனின் மேல் சொல்லமுடியாத அளவிற்கு வெறித்தனமாக கோபம் வந்தது.

இவனுக்கு ரொம்பத்தான் அக்கறை. நான் தனியா போனால் இவனுக்கு என்ன வந்தது? அன்னைக்கு என்னை வேண்டாம்னு சொன்னவன் இன்னைக்கு எதற்கு இப்படி அக்கறை இருப்பது போல நடிக்கணும் என எரிச்சல் ஏற்பட கையை பிசைந்தபடி நின்றிருந்தாள். இது சாதாரண ஒரு உதவி என்றோ இதற்கு அக்கறை தனியாக தேவை



இல்லை என்று நினைக்க அவள் கோபம் இடம் கொடுக்கவில்லை. நித்திலாவின் முகமாற்றமும், கோபமும் புரியாமல் நிரஞ்சன் தன் காரை கொண்டுவந்து நித்திலாவின் அருகில் நிறுத்தி கார் கதவையும் திறந்துவிட்டான்.

நிமிர்ந்து ஒருமுறை காரை பார்த்தவள் உன் காரும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம் என கதவை அறைந்து சாத்திவிட்டு சென்றுவிடலாமா என்ற எண்ணம் வர கதவை பிடித்துக்கொண்டே நின்றிருந்தாள்.

"நித்திலா கெட் இன்" என்ற நிரஞ்சனின் கம்பீரமான குரல் வர மறுபேச்சில்லாமல் தன் எண்ணத்தை தற்காலிகமாக ஒதுக்கி தள்ளிவிட்டு நிரஞ்சனின் அருகில் அமர்ந்தாள்.

வந்த நாள் முதலாக நித்திலாவிடம் தனியாக பேச துடித்துக்கொண்டு இருந்தவனுக்கு அதற்கான வாய்ப்பு மட்டும் கிடைக்கவே இல்லை. இப்போது அந்த வாய்ப்பு கிடைத்ததும் சட்டென பற்றிக்கொண்டான். ஐந்து நிமிடம் மௌனத்திலேயே கழிய நித்திலாவின் பார்வை நிரஞ்சனின் வலிய கரங்களின் மீது படிந்தது. அந்த கரத்தின் அரவணைப்பில் தான் நின்றிருந்த நாள் நினைவில் வந்து அவளை அலைகழித்தது.

அவனறியாமல் ஓரப்பார்வையால் அவனை பார்த்தாள். அலைஅலையாய் இருந்த அவன் கேசம் உன் விரல்களால் என்னுடன் கொஞ்சம் விளையாடேன் என்று காற்றில் அசைந்து அவளை அழைப்பது போல தோன்ற தன் நினைவை நினைத்து திடுக்கிட்டவள் மேலும் அதிர்ந்தாள். ஏனெனில் அவள் கரம் உயர்ந்து அவன் தோள் வரை சென்றிருந்ததை உணர்ந்து கையை விலக்கிக்கொள்ளும் முன் அவளின் அசைவை உணர்ந்து திரும்பிய நிரஞ்சனின்

பார்வையை தவிர்த்து தன் கைவளையபலை எண்ணுவது போல விரலால் வளையலை அளைந்தாள்.

சிறிது நேரத்தில் தனக்கு பரிச்சயமான நித்யமல்லியின் வாசனை மூக்கை துளைக்க வெளியே பார்த்தவள் தன் ஹாஸ்ட்டல் வந்துவிட்டதை உணர்ந்து, தான் வழி சொல்லாமலேயே எப்படி இங்கே வந்தான் என கேள்வியுடன் பார்க்க, அதை புரிந்துக்கொண்டவனாக, "நான் ஊருக்கு கிளம்பும் முன் உன்னை பார்க்க ஒருமுறை வந்தேன். ஆனால் நீ இல்லை" என சொல்ல நித்திலாவுக்கு பக்கென்றது.

எதுக்கு என்னை பார்க்கணும்? என யோசனையுடன் பார்வை அவனை தாண்டி வெளியே போக ஹாஸ்ட்டலை தாண்டி கார் செல்லவும், "நான் இறங்க வேண்டிய இடம் இது தான் நிறுத்துங்க" என சொல்லியும் அவள் சொன்னதை காதில் வாங்காமல் தெரு முனையின் எதிரில் இருந்த பூங்காவின் அருகில் நிறுத்தி இறங்கினான்.

விரிந்த கருவிழிகளை உருட்டி நிரஞ்சனை வெறித்தபடி இறங்கியவளிடம், "உன்னிடம் பேசணும். வா" என சொல்லிவிட்டு செல்ல என்ன தைரியம் இவன் சொன்னதும் நான் பின்னாலேயே வந்துவிடுவேன்னு எவ்வளவு நம்பிக்கை? என்றவளுக்கு வந்தது கோபமா ஆச்சர்யமா என அவளாலேயே அறியமுடியவில்லை. என்ன தான் பேசப்போகிறான் என்று பார்த்துவிடுவோம் என்று அவனை பின்தொடர்ந்தாள்.

நேரம் மதியத்தை நெருங்கிக்கொண்டு இருக்க அந்த குளிர் காற்றிலும் சூரியனின் வெப்பத்தை உணர முடிந்தது. சுற்றிலும் இயற்கை எழில் மனதை கொள்ளைகொள்ளும் காட்சிகள் இருந்தாலும் எதுவும் அவள் மனதில்



பதியவில்லை. இருவரையும் தவிர ஆள்நடமாட்டமே இல்லாமல் பூங்கா வெறிச்சோடி இருந்தது. "உட்கார் நித்திலா" என அருகிலிருந்த நீள பெஞ்சை காட்ட ஒருஓரமாக அவள் அமர்ந்ததும் மறுபுறம் அவன் அமர்ந்தான்.

அவளின் பார்வை தூரத்தில் தெரிந்த மலைமுகட்டை வெறிக்க, நிரஞ்சனோ அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான். வாடி கூம்பி இருந்த முகத்தை பார்த்தவனுக்கு ஏன் இப்படி இருக்கா? என கேள்வி எழ நித்திலா அவன் புறம் திரும்பாமலேயே "என்னிடம் ஏதோ பேசணும்னு சொன்னதாக ஞாபகம்" என்றாள் வெற்றுக்குரலில்.

அவனும் பார்வையை அகற்றாமல் விடேற்றியாக பேசுபவளையே பார்த்தவன் தொண்டையை செருமிக்கொண்டு, "கேட்க கஷ்டமாக தான் இருக்கும், பட் ப்ளீஸ்" என பீடிகையுடன் ஆரம்பித்தவன் திரும்பி தன்னை பார்த்தவளிடம், "சாரி மாமாவும், பாட்டியும் இறந்த விஷயம் எனக்கு தெரியவே தெரியாது. நான்கு மாதம் கழித்து ஊரிலிருந்து வந்ததும் தான் கேள்விப்பட்டேன்" என சொல்லும் போதே தன் தந்தையின் நினைவில் கண்கலங்கியவளின் வலக்கரத்தை ஆதரவாக பற்ற முயல நித்திலா சட்டென தன் கரத்தை விலக்கி இருகைகளாலும் கண்களை துடைத்துக்கொண்டாள்.

நீட்டிய தன் கரத்தை மடக்கியபடி முகம் சுருங்க தன் பேச்சை தொடர்ந்தான். "விஷயம் கேள்விப்பட்டதும் ஓடிவந்தேன். ஆனால் உன்னை உன் உறவினர்கள் யாரோ அழைத்து சென்றுவிட்டதாக மட்டும் தெரிந்தது. நீ யாருடன் எங்கே இருக்கேன்னு எதுவுமே தெரியவில்லை. நீ கோத்தகிரியில் தான் இருக்கேன்னு முதலிலேயே தெரிந்திருந்தால்..." என சொல்லிக்கொண்டு போனவனை

"போதும்" என கைநீட்டி தடுத்தபடி எழுந்து நின்றாள். அவள் பின்னோடு எழுந்தவனை நேராக பார்த்தவள், "போதும் நீரு... பழைய சம்பவம் எதையும் நினைத்து பார்க்க கூட எனக்கு பிடிக்கவில்லை. அதுவும் நாலு வருஷத்துக்கு முன் நடந்த எதையும் நினைக்ககூடாதுன்னு உறுதியோடு இருக்கேன் தயவு செய்து அதெல்லாம் நினைவுபடுத்திடாதீங்க" என அழுதவளின் அருகில் சென்று அவள் தோள்களை பற்றினான்.

"நித்திலா சாரிடா, வெரிசாரி.." என அவள் தோள்களை பற்ற, "நோ..."என வேகமாக அகன்றாள். "நோ...! நான் நினைக்க விரும்பாததுன்னு சொன்னது நாலு வருஷத்துக்கு முன்னால் எனக்கு இருந்த உறவுகள், சொந்தம், பந்தம், என் உயிராக நினைத்த உ....."என்றவள் சமாளித்து நிறுத்தி"எல்லாவற்றையும் சேர்த்துதான்"என்று கதறினாள்.

"நித்திலா உனக்கென்ன பைத்தியமா? எல்லாத்தையும் மறக்கனும்னா.. நீ என்ன சொல்ற? புரிந்துதான் பேசறியா?" என கோபத்துடன் கேட்க

"ஆமாம் ஆமாம் ஆமாம்" என்றவள் பூங்கா வாயிலை நோக்கி விறுவிறுவென நடந்தாள்.

அவளை பார்த்தவன், " அப்போ உனக்கு எந்த பழைய உறவும், சொந்தமும் வேண்டாம். அதில் எங்க அம்மாவும் அடக்கம் தானே" என்று உரக்க கேட்க நித்திலா சட்டென நின்றாள்.

தன்னை நீரு.. என அழைத்ததை வைத்தே அவள் மனதில் இன்னும் தான் இருப்பதை உணர்ந்துக் கொண்டவன் சரியான நேரத்தில் தன் அடுத்த அஸ்திரத்தை எய்தான். என்ன தான் அவள் சொன்னாலும் தன் அம்மாவை நேரில் பார்த்தால் சரியாகிவிடும் என்று எண்ணியவனாக,"நாளைக்கு அம்மா அதாவது உன் அத்தை வராங்க. அவங்களிடமும் சொல்லு எனக்கு எந்த உறவும், சொந்தமும் வேண்டாமென்று"என சொன்னதும் ஒரு நிமிடம் தயங்கி நின்றிருந்தவள் சிலிர்த்துக்கொண்டு விரைந்தாள்.



நிரஞ்சன் எரிச்சலுடன்,"நித்திலா முட்டாள். எதையோ நினைத்து மனதில் போட்டு உன்னையும் வருத்தி மத்தவங்களையும் வருத்துறியே?" என கவலையுடன் பார்த்தான்.

## அத்தியாயம்–7

அறைக்கு வந்தவள் தன் அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் அழ ஆரம்பித்தாள். கட்டிலின் அருகில் இருந்த மேஜை இழுப்பறையிலிருந்து எடுத்த டைரியை பிரிக்க அதில் இருபத்துநான்கு வயது இளைஞனாக சிரித்தபடி இருந்த நிரஞ்சனின் போட்டோவை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். மறக்கவேண்டும் என்ற நினைவெல்லாம் வெள்ளமென மனதில் பாய்ந்தது. நித்திலா மீண்டும் தன் இனிய வசந்த காலமான இளமை பருவத்திற்கே சென்றாள்.

ராமகிருஷ்ணன்–பானுமதியின் தவப்புதல்வியாக பிறந்த நித்திலாவை பாராட்டி சீராட்டி வளர்த்து வந்த நேரம் கண்பட்டது போல சாதாரண காய்ச்சலில் ஆரம்பித்து பத்தே நாளில் பானுமதியின் உயிரை பறித்துவிட ராமகிருஷ்ணன் துவண்டுபோனார். திருமணமான மூன்றே ஆண்டுகளில் தன் இல்லறவாழ்வு முடிந்துவிட தன் மனைவியின் மறுப்பதிப்பான தங்கள் மகள் நித்திலாவை நல்லபடியாக வளர்ப்பது ஒன்றே குறிகோளாக கொண்டு தனக்கு

மறுமணம் செய்துவைக்க முயன்ற மாமியாரிடம் தகுந்த முறையில் சொல்லி புரியவைத்து மகளின் மேல் பாசத்தை கொட்டி வளர்த்து வந்தார்.

பெண் குழந்தை என்ற காரணத்திற்காகவும் தான் அடிக்கடி வேலை விஷயமாக வெளியூர் செல்லும் நேரத்தில் மகளை தனியாக விடமுடியாது என்றும் புரிந்து மகளை தன் மாமியாரின் பொறுப்பில் அவர் வீட்டிலேயே வளர்த்துவர செய்தார். நித்திலாவின் குழந்தை பருவம் பாட்டிவீட்டில் மிகவும் சுகமாக சுவாரஸ்யமாக கழிய பல காரணங்கள் இருந்த போதும் முக்கியமான இரு காரணம் எதிர்வீட்டில் இருந்த அம்மாவின் தோழி சரஸ்வதி அவர் மகன் நிரஞ்சன்.

பானுமதிக்கு கல்யாணம் ஆகும் முன்பே எதிர்வீட்டு மருமகளாக வந்த சரஸ்வதியை அண்ணி என்று அழைத்து பாசத்துடன் பழகிய பானுவை சரஸ்வதிக்கு மிகவும் பிடிக்கும். பானுவின் மரணம் அவர்களுக்கு பெரிய இழப்பாக தெரிந்தாலும் நித்திலா அந்த குறையை நிவர்த்தி செய்வது போல சச்சு அத்தை என சரஸ்வதியை சுற்றிவருவாள். அவளைவிட ஐந்து வயது பெரியவனான நிரஞ்சன் அவளுக்கு விளையாட்டு தோழனாக மாறிப்போனான்.

பத்து வயது வரை பாட்டிவீட்டில் வளர்ந்தவளுக்கு பெரும்பாலும் ஊண் உறக்கம் எல்லாமே சரஸ்வதியின் வீட்டிலேயே என்பது எழுதப்படாத சட்டமாக மாறிப்போனது. ஒருவயதுக்கு மேல் நிரஞ்சனும், நித்திலாவிடம் பேசுவது விளையாடுவது என குறைத்துக்கொள்ள அப்போதெல்லாம் நித்திலாவிற்கு அழுகையாக வரும். ஆனால் சில நாட்களில் இது பழக்கம் ஆகிவிட அவளின் பெரும்பாலான நேரம் சரஸ்வதியுடனும், பாட்டி கமலத்துடனும் கழிந்தது.



இந்நிலையில் நித்திலாவின் தந்தை தன் தொழிலை கொஞ்சம் வளர்த்துவிட நித்திலாவை தன்னுடன் அழைத்து செல்வதாக கூற, கமலமோ நித்திலாவை தனியாக விட மனமில்லாமல் தன் தோப்பை குத்தகைக்கு விட்டுவிட்டு மாப்பிள்ளை பேத்தியுடன் தங்கிக்கொண்டார். தன் தந்தையுடன் இருக்க போகிறோம் என்று சந்தோஷம் வந்தாலும் இனி சரஸ்வதியையும் நிரஞ்சனையும் பார்க்க முடியாதே என்ற ஏக்கம் உள்ளுக்குள்ளேயே வளர ஆரம்பத்தில் எதிலும் பிடிப்பில்லாமல் இருந்தாள்.புது பள்ளிக்கூடம் புதிய நண்பர்கள் என்று மாறமாற அவளின் மனநிலையும் கொஞ்சம் கொஞ்சமாக மாறியது.

ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்துக்கொண்டு இருந்தவள் தன் வீட்டினுள் சென்றவனை பார்த்ததும் சந்தோஷத்துடன் ஓடிவந்து அவன் முதுகில் தட்டி, "ஹே எப்போ வந்த ? அத்தை எங்கே ?" என கேட்க தன்னை யார் அடித்தது என்று திரும்பியவனின் முகத்தை பார்த்ததும் அவளின் உற்சாகம் மொத்தமும் வழிந்தது.

நீண்ட விழிகளில் கேள்வியும், பயமும் தொக்கி நிற்க இரட்டை ஜடையுடன் குண்டு கன்னமுமாக கொழுக்மொழுக்கென பொம்மை போல இருந்தவளை பார்த்து மென்மையாக சிநேகத்துடன் சிரித்தான். எதிரில் நின்றவளுக்கோ நெடுநெடுவென உயரமும், ஒத்த உடல்வாகும் இருந்ததை வைத்து தவறுதலாக எண்ணி அவன் முதுகில் தட்டியதை நினைத்து சஞ்சலத்துடன் பார்த்தவளுக்கு அவன் நிரஞ்சன் இல்லை என்று தெரிந்ததும் ஒரு சோர்வும் வந்து ஒட்டிக்கொண்டது.

அவளின் முகபாவம் எதிரில் இருந்தவனுக்கு பாவமாக தெரிய நட்புடன், "ஹாய் நான் ரிஷி. நீ நித்திலா தானே ?" என சிரித்துக்கொண்டே கேட்டதும்

"என் பேர் உங்களுக்கு தெரியுமா?" என விழிவிரிய புன்னகையுடன் கேட்டதும் ஆம் என தலையசைத்தவனுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. வராந்தாவில் பேச்சுக்குரல் கேட்டதும் அங்குவந்த ராமகிருஷ்ணன், "நித்தி இங்கே வாடா, உன்னை பார்க்க யார் வந்திருக்காங்கன்னு பாரேன்" என அழைத்ததும் உடன் சென்றவள் ஹாலில் அமர்ந்திருந்தவர்களை கண்டதும் யாரென்ற பாவனையுடன் தந்தையை பார்த்தாள்.

"நித்தி கண்ணு இங்கே வாம்மா" என அருகில் வந்து அவள் கைப்பற்றிய வைதேகி லேசாக கண்கலங்க நித்திலா தலைசாய்த்து பார்த்தபடி நின்றாள்.

"நித்தி நான் உனக்கு அத்தை முறை. உங்க அப்பாவுக்கு அக்கா. இவர் உங்க மாமா. இவன்.." என்றதும்

"தெரியும் தெரியும் ரிஷி அண்ணா" என்று முல்லை சிரிப்பை உதிர்க்க

"அவன் உனக்கு அத்தான் கண்ணம்மா. அண்ணா இல்லை" என வைதேகி சிரிப்புடன் சொல்ல அத்தானா என அந்த புதிய வார்த்தையை மனதிற்குள் அப்படின்னா என்ன? என யோசனையுடன் பொழுது கழிய வந்த உறவினர்களும் கிளம்பி சென்றுவிட இரவு பாட்டியின் அருகில் படுத்திருந்தவள் "பாட்டி அத்தான்னா என்ன பாட்டி?" என்றாள்.

"அத்தையோட பையன் அத்தான்" என்றார் சுருக்கமாக. அதற்குமேல் விளக்கம் சொல்லாமல் பாட்டியும் உறங்கிவிட அத்தையோட பையன் அத்தான்னா கூப்பிடணும் அப்போ சச்சு அத்தையும் எனக்கு அத்தை தானே அப்போ நீருவை இனி அத்தான்னு தான் கூப்பிடணும் என எண்ணிக்கொண்டே உறங்கிவிட்டாள்.



நாட்களும் வேகமாக ஓட ஆரம்பித்தது. கமலம் பாட்டி ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறைக்கு தங்கள் கிராமத்திற்கு சென்றுவர நித்திலாவும் உடன் கிளம்பிக்கொள்வாள். வைதேகி போன் செய்யும் போதும் நித்திலாவை ஊருக்கு வரசொல்லி அழைக்கும் போதும் மிஞ்சிபோனால் மூன்று நாட்களே தங்குபவள் பாட்டியுடன் கிராமத்திற்கு செல்வதற்கு மட்டும் அவருக்கு முன்னால் தயாராகி நிற்பாள்.

தன் கல்லூரி படிப்பையும் முடித்தவள் பாட்டியுடன் கிராமத்திற்கு கிளம்பிவிட்டாள். இடையில் இரண்டு ஆண்டுகள் நிரஞ்சன் வேலை காரணமாக ஜெய்பூரில் இருக்க அவளால் பார்க்க முடியாமல் போய்விட்டது. இம்முறை அவன் வருவதை அறிந்தே அவனை காணப்போகும் ஆவலுடன் அவன் வருவதற்கு முன்னே தான் அங்கு சென்றுவிட வேண்டும் என்று முன்னறிவிப்பு ஏதும் இல்லாமல் கிளம்பிவிட்டாள்.

**வா**சலில் விடாமல் கேட்ட காலிங் பெல் சத்தத்தில் கிச்சனில் இருந்த வேலை யை பாதியில் விட்டுவிட்டு வந்த சரஸ்வதி எரிச்சலுடன், "யாரது இப்படி பெல்லை அழுத்துவது" என முணுமுணுத்துக்கொண்டே வந்து கதவை திறந்தவர் நின்றிருந்தவளை கண்ட சரஸ்வதி, "நித்திலா கண்ணு...!! எப்படி தங்கம் இருக்க?" என கைபிடித்து அழைத்து சென்று முற்றம் போல அமைத்திருந்த இடத்தில் இருந்த சோபாவில் அமரவைத்தார்.

மிடுக்குடன் உள்ளே சென்று அமர்ந்தவள், "இதுல ஒன்னும் குறைச்சல் இல்லை. நேரா பார்த்ததும் அம்மு, தங்கம்னு கொஞ்ச வேண்டியது. நடுவில் ஒருமுறை ஊருக்கு வந்து என்னை பார்க்கணும்னு தோணுச்சா

உங்களுக்கு. நேரில் பார்த்ததும் பொங்கும் பாச வெள்ளத்தை பாரேன்" என பொய்க்கோபத்துடன் சொன்னாள்.

"நான் எங்கேடா வருவது? உனக்குத்தான் தெரியுமே மாமா இறந்ததுக்கு பிறகு நான் நிரஞ்சன் இல்லாமல் எங்கேயும் வரமாட்டேன்னு" என சோர்வுடன் சொல்ல அவரின் முகவாட்டம் கவலை தர நித்திலா தன் அத்தையின் கழுத்தை கட்டிக்கொண்டு கன்னத்துடன் கன்னம் பதித்துக்கொண்டவள், "சாரி சச்சு அத்தை வெரி சாரி. உங்க செல்ல நித்திலாவை ப்ளீஸ் பண்ண கூடாதா"

சரஸ்வதி அவள் கன்னத்தில் முத்தமிட்டு"என் ராஜாத்தி உன்னை ஏன்டா நான் கோவிக்க போறேன்"

"சரி சரி இது தான் சாக்குன்னு அப்படியே வெறும் வயித்தோட அனுப்பிடாதீங்க. மணி நாலாக போகுது ஒரு காபி கொடுத்தா குடிச்சிட்டு கொஞ்சம் நேரம் பேசிட்டு போவேன். காரைவிட்டு இறங்கி நேரா இங்கே தான் ஓடிவரேன்"

"அதுக்கென்ன டபுள் ஸ்ட்ராங்கா பில்டர் காபியே போட்டுத்தரேன்" என சமையலறைக்கு செல்ல பின்னாலேயே வளவளத்துக்கொண்டு அக்கம்பக்கம் நடந்த கதை, கல்லூரி கதை, யார் யாருக்கு என்னென்ன நடந்தது, எந்த வீட்டில் ஆடு குட்டிபோட்டது? எந்த வீட்டில் மாடு கன்னுபோட்டது என்று எல்லாம் பேசிமுடித்து மெல்ல, "உங்க வீட்டு நெட்டை விஸ்வாமித்திரர் எப்படி இருக்கார்?" என ரகசிய குரலில் விசாரித்தாள்.

"ஏய் வாயாடி அவன் என்ன விஸ்வாமித்திரனா?"

"ஆஹா..!! இல்லை நெட்டை துர்வாசர்னு சொல்லி இருக்கணும்" என சொல்லி பயப்படுவது போல நடிக்க



அவள் காதை பிடித்து திருகிய சரஸ்வதி, "அடிக்கழுதை, என் பிள்ளைய வம்பு இழுக்கலைனா உனக்கு பொழுதே போகாதே?

"ஆ..ஆ..!! அத்தை..ப்ளீஸ் என் காது வலிக்குது. உங்க பிள்ளை இந்திரன் சந்திரன் போதுமா" என வலிக்காவிட்டாலும் வலியில் துடிப்பது போல துள்ளி குதித்தாள்.

"அப்படி வா வழிக்கு" என்றவர் "உனக்கு தெரியுமா நித்திலா நிரஞ்சன் வண்டி வாங்கப்போறான்" என்றார் பெருமையாக

"அப்படியா... ஆமாம் இப்போல்லாம் மாட்டுவண்டி ரொம்ப சீப்பா கிடைக்குதாம்" என சிரிக்காமல் சொல்ல

"திமிர்பிடிச்சவளே என் பிள்ளை கார் வாங்க போறான்னு சொல்வதுக்கு பதிலா வண்டி வாங்கப்போறான்னு சொன்னா மாட்டுவண்டி வாங்க சொல்ற" என மிரட்டும் தொனியில் சொன்னவர் அவரையும் மீறி சிரிக்க நித்திலாவும் உடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

"அத்தைக்கு கொஞ்சம் வேலை இருக்குடா. நீ டிவி பார்ப்பதுன்னா பாரேன். நான் வேலையை முடிச்சிட்டு வரேன்"

"என்கிட்டே சொல்லுங்க அத்தை ரெண்டு பேரும் சேர்ந்தே செய்யலாம்"

"இப்போதான் வந்திருக்க இன்னைக்கு ரெஸ்ட் எடு. நாளையிலிருந்து செய்யலாம். புக் படிக்கறதுன்னா மேலே ரூம்ல இருக்கு எடுத்துக்கோ" என்றார்.

சரி என்றவள் மாடியில் இருந்த புத்தக அறைக்கு சென்றாள். புத்தக அலமாரி சுத்தமாக கற்பூரம் வசம்பெல்லாம் போட்டு அழகாக பராமரிக்கப்பட்டு இருந்தது. நாமளும் இங்கே மருமகளாக வந்தபிறகு இதே போல எல்லாத்தையும் பத்திரமாக வச்சிக்கணும் என எண்ணிக்கொண்டே ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு திரும்பியவளுக்கு அங்கே ஷெல்பில் இருந்த நிரஞ்சனின் சமீபத்திய போட்டோ ஒன்று கண்ணில்பட இதயம் தாளலயத்துடன் வேகமாக முரசுக்கொட்ட புன்னகை நிரம்பிய இதழ்களுடன் கண்களில் ஆர்வத்துடன் எடுத்தாள்.

நிரஞ்சன் நேராகவே நிற்பது போல நினைத்துக்கொண்டவளுக்கு வெட்கத்தில் கன்னங்கள் இளம் சிவப்பை பூசிக்கொள்ள போட்டோவை பார்த்து, "சரியான உம்மனாமூஞ்சி கொஞ்சம் சிரிச்சா மாதிரி போஸ் கொடுக்க கூடாதா? உர்ருன்னு" என்றவள் பிரேமில் இருந்த போட்டோவை உருவி எடுத்து புத்தகத்தில் வைத்துக்கொண்டு அந்த பிரேமை தூக்கி பரண் மீது போட்டாள்.

பிரேமை மேலே போட்டுட்டோமே அத்தை இல்லை நீரு கேட்டால் என்ன சொல்வது? என எண்ணம் தோன்ற ஆமாம் அப்படி யார் கேட்க போறாங்க? நீரு என்ன இங்கே நின்னு எல்லாத்தையும் பார்த்துட்டா இருக்கார், அப்படியே கேட்டா "நிஜமே இங்கே இருக்க உன் நிழல் எதற்கு அன்பே?" அப்படின்னு கேட்டுவிட வேண்டியது தான் என எண்ணியவளுக்கு அப்படியெல்லாம் கேட்பாயா? ஒருமுறை அத்தான்னு அவனை கூப்பிட்டுட்டு நீ வாங்கி கட்டிக்கிட்டதெல்லாம் போதாதா? என்று மனம் உரைக்க அன்று அவன் மிரட்டிய மிரட்டலில் நடுங்கி போய் ஓடிய



ஓட்டம் நினைவு வர அப்போது முதல் துர்வாசர் என்ற பட்ட பெயருக்கு ஆளானான் என எண்ணி நகைத்தாள்.

சிரிப்புடன் மெல்லிய குரலில், "இப்போ ஏதாவது மிரட்டுவாரா..? மிரட்டினா அப்படியே ஓடி போய் ரெண்டு கையாலும்.." என சொல்லிக்கொண்டே இருகைகளையும் விரித்துக்கொண்டு திரும்பியவளுக்கு கைகள் தன்னிச்சையாய் கீழிறங்க காலெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. கைகள் ஜில்லென்று ஆகிவிட கண்கள் படபடவென அடித்துக்கொள்ள, படிக்கும் அறைக்கும் தன் அறைக்கும் இடையிலிருந்த கதவில் சாய்ந்து நின்றிருந்தவன் நிமிர்ந்து நேரான நடையில் தன்னை நோக்கி வருவதை கண்ட நித்திலாவுக்கு இதயம் தாறுமாறாக அடித்துக்கொண்டது. இவன் எப்போது ஊரிலிருந்து வந்தான்? அத்தையும் சொல்லவே இல்லையே என எண்ணிக்கொண்டே அவனை பார்த்துக்கொண்டு இருக்க அவன் கண்களும் அவள் கண்களை விட்டு ஒரு கணமும் அப்படி இப்படி அகலவில்லை.

## அத்தியாயம்–8

அவனின் அருகாமையில் யோசிக்கும் திறம் கூட இல்லாமல் அவன் விழிகளின் ஈர்ப்பில் பார்வையை விலக்கமுடியாமல் நின்றாள். ஸ்டோன்வாஷ் ஜீன்சும், மெருன்நிற டி–ஷர்ட்டிலும் அவன் ஆண்மையின் கம்பீரம் மேலும் வெளிப்பட அவளருகில் வந்து நின்றவன் 'க்கும்' என தொண்டையை செரும, 'ஹுங்க்' என்ற சத்தத்துடன் பூமிக்கு தரையிறங்கியவளுக்கு வெட்கமும், இவன் எப்போது வந்தானோ, தான் பேசியதெல்லாம் கேட்டானோ என்ற தவிப்பும் சேர்ந்துக்கொள்ள அங்கிருந்து நகரமுயன்றாள்.

"எப்படி இருக்க நித்திலா?" என்று ஆழ்ந்த குரலில் கேட்டான்.

உன் நினைவோடு இருக்கேன் என சொல்லமுயன்ற மனதையும் நாவையும் அடக்கி, "நல்லா இருக்கேன். நீங்க?" என மெல்லிய குரலில் கேட்டாள். கேட்டவளின் பார்வையோ அவன் கண்களை பார்க்காமல் எங்கேயோ வெறிக்க

"நேரா பார்த்தால் நான் எப்படி இருக்கேன்னு தெரியும். எங்கேயோ பார்த்துக்கேட்டால்...?" என்றதும் விழிகளை உயர்த்தி பார்த்தாள். இரண்டாண்டுகளில் எவ்வளவு மாற்றம்? முகத்தில் படிப்பின் களை, வேலை செய்த அனுபவத்தால் வந்த தெளிவும், பக்குவமும், ஏற்கெனவே திருத்தமாக இருந்தவனுக்கு அவன் அணிந்திருந்த ரிம்லெஸ் கண்ணாடி இன்னும் அழகை கூட்டி இருந்ததோ? அவனின் அருகாமை தந்த நெகிழ்வில் உடம்பெல்லாம் இலவம்பஞ்சைப்போல லேசாகி எங்கோ பறப்பது போல இருந்தது

"ஹலோ" என்றவன் சிரிப்புடன், "எக்ஸாம் எப்படி எழுதி இருக்க?" என்றான்.

தன்னை கண்டுக்கொண்டானோ என கன்னம் சிவக்க "நல்லா எழுதி இருக்கேன்"

"மேற்கொண்டு என்ன படிக்க போற?"

"இன்டீரியர் டிசைனிங்"

"ஒஹ்..!! ஏன் எம்.எஸ்சி படிக்கலையா?"

"ஊஹூம்..! இன்டீரியர் படிச்சா உங்களுக்கு ஹெல்ப் பண்ணலாமே?"



"என்னது? எனக்கு ஹெல்ப்பா?" என நெற்றி சுருங்க கேட்டதும்

தன் வாய் துடுக்கை எண்ணி தன்னையே நொந்துக்கொண்டவள், "இல்ல... இன்டீரியர் படிச்சா உங்க கம்பெனிலயே வேலைக்கு சேர்ந்துக்கலாமே. எனக்கும் வேலை தேடுவது மிச்சம் இல்லையா?" என மென்று முழுங்க

"யாரு நீயா? உன்னை நான் என் கம்பெனில வேலைக்கு வச்சிக்கிட்டு என்னால் ஒழுங்கா எப்படி வேலை பார்க்க முடியும்? நீ ஒரு சாட்டர் பாக்ஸ் ஆச்சே" என்றவனின் பார்வை டேபிள் மீது இருந்த புத்தகத்தின் மீது விழுந்தது.

ஹய்யோடா...! இவர் நாளைக்கே கம்பெனி ஆரம்பித்து இந்தியா பூரா கிளை பரப்ப போறாரு. நான் சேர்ந்தா இவர் கம்பெனி நடக்காதாம். ரொம்ப தான் என நினைத்துக்கொண்டே உதட்டை சுழித்து அவனை பார்க்க, அவன் சிரிப்புடன் "அது சரி இங்கே என்ன செய்திட்டு இருந்த?" என இயல்பாக பேசிக்கொண்டே டேபிள் மேல் அவள் வைத்திருந்த புத்தகத்தை எடுத்தான்.

திகைத்தவள், "ஹய்யோ...!! இது நான் படிக்க எடுத்த புக்" என அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டு ஓடினாள்.

"ஹே நிலா.." என மென்மையாக அவன் அழைத்த பெயர் அவள் காதுகளில் விழவே இல்லை. விழுந்திருந்தால் பின்னாளில் வந்த அத்தனை பிரச்சனையையும் மனக்கசப்பையும் தவிர்த்திருக்கலாம்.

இரண்டு நாட்களுக்கு பின் பாட்டி செய்து வைத்திருந்த முறுக்கு, அதிரசத்தை தூக்கில் போட்டு

எடுத்துக்கொண்டு நிரஞ்சனின் வீட்டிற்கு சென்றாள். கதவு திறந்தே இருக்க நம்ம அத்தை வீடுதானே என்று கதவை தட்டாமல் வீட்டினுள் நுழைந்தாள். ஹாலிலும் யாரும் இல்லாமல் இருக்க அத்தை என குரல்கொடுக்க எண்ணியவளின் காதுகளில் குசுகுசுவென் பேச்சு சத்தமும், சிரிப்பும் கேட்க சத்தம் டைனிங் ஹாலிலிருந்து வருகிறது என உணர்ந்து அங்கே சென்று எட்டிப்பார்த்தாள்.

அங்கே நிரஞ்சன், அவன் அருகில் யாரிவள்..? மொழுமொழுன்ற சருமமும், கழுத்துவரை வெட்டப்பட்ட முடியும், உடலை இறுக்கி பிடித்த டாப்சுமாக அவளை பார்த்தவுடனே நித்திலாவிற்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. போதாக்குறைக்கு நிரஞ்சன் எதையோ சுட்டிக்காட்டி சொல்ல "நீரு.." என அவன் தோளில் தட்டி சிரித்தவளின் தலையில் ஓங்கி ஒரு குட்டு குட்டவேண்டும் போல நித்திலாவிற்கு ஆத்திரம் வந்தது. மூஞ்சிய பாரு. நல்லா மைதாமாவு மூட்டை மாதிரி என முணுமுணுத்துக்கொண்டே சமையலைறையில் வேலை செய்துக்கொண்டு இருந்த சரஸ்வதியின் அருகில் சென்று நின்றாள்.

"வாம்மா உன்னை காணுமேன்னு நினைச்சிட்டே இருந்தேன்" என அடுப்பில் பால் பாத்திரத்தை வைத்துக்கொண்டே சொல்ல

"நீங்க இப்படி உட்காருங்க அத்தை நான் செய்றேன்" என சரஸ்வதியின் கையை பிடித்து அருகில் இருந்த சேரில் அமரவைத்துவிட்டு என்ன போடணும்? காபியா?"

"ரஞ்சனுக்கு காபியும், அந்த பொண்ணுக்கு ஹார்லிக்சும் போடு கண்ணம்மா. அப்படியே உனக்கும் சேர்த்து போட்டுக்கோ"



"எனக்கு வேண்டாம். நான் இப்போதான் சாப்பிட்டேன்" என்றவள் கொதித்த பாலை இறக்கியபடி,"யாரு அத்தை அந்த பொண்ணு?"

"நிரஞ்சன் கூட வேலை செய்யும் பையனோட தங்கச்சி. நம்ம ஊரை சுத்தி பார்க்க வந்திருக்கா" என சொல்ல தன் அத்தைக்கு காபியை கொடுத்துவிட்டு ஹார்லிக்சுடன் டைனிங்கிற்கு சென்றாள். நிரஞ்சனும், மொழுமொழு மைதாமாவும் அவள் வந்தது கூட அறியாமல் என்னவோ மும்முரமாக பேசிக்கொண்டு இருக்க நித்திலா எரிச்சலுடன் டங்கென ஹார்லிக்ஸ் இருந்த கப்பை அந்த பெண்ணின் எதிரில் வைத்தவள் காபி கப்பை பவ்யமாக அதிலிருந்த காபி சிறிது கூட அசையாத வண்ணம் நிரஞ்சனின் முன் வைத்தாள்.

அந்த பெண்ணின் பார்வை குறுகுறுவென தன்னை துளைப்பதை பார்த்தும் பார்க்காதது போல நிரஞ்சனின் பக்கம் தலையை திருப்ப அவன் முறுவலித்தது போல இருக்க அவனை நன்றாக பார்க்க நிரஞ்சனும் அவளை நேருக்கு நேராக பார்த்து,"என்ன?" என வெற்றுப்பார்வையும், ஒற்றை வார்த்தையுமாக கேட்டதும் அனிச்சம் மலராக வாடியவளின் பார்வை பக்கத்தில் இருப்பவளை பார்க்க அவளோ சுவாரஸ்யமாக இவளை கவனிப்பது போல தோன்றியது.

எரிச்சலுடன் "ஒண்ணுமில்லை. அத்தை காபி கொடுக்க சொன்னதால் வந்தேன்" என்று வெடுக்கென சொல்லிவிட்டு நடந்தவளின் காதில் இருவரும் சிரிக்கும் சத்தம் கேட்டதும் தன்னிடம் மட்டும் ஒரு வார்த்தை பேச ஆயிரம் முறை யோசிப்பான், இப்போ சிரிப்பை பாரு என மனதிற்குள் புகைந்துக்கொண்டே சமையலறைக்கு வந்து

சரஸ்வதிக்கு சமையலுக்கு உதவிக்கொண்டு இருந்தாள். எல்லாவற்றையும் கொண்டுவந்து டைனிங்கில் அடுக்கியவள் வெளியே வந்தாள். ஐயோ அத்தையிடம் சொல்லாமல் வந்துவிட்டோமே என்று திரும்ப உள்ளே சென்ற நேரம், "நித்திலா எங்கேப்பா? அவளை இங்கயே சாப்பிட சொல்லலாம்னு நினைத்தேன்"

"அவ அப்போவே போயிட்டாளே" என்றான் விட்டேற்றியாக.

"அவளுக்கு பால்பாயசம் பிடிக்கும்னு எடுத்திட்டு வந்தேன். சொல்லாமலேயே கிளம்பிட்டாளா? நான் அப்புறம் அவளுக்கு வீட்டுக்கு கொடுத்து விடுறேன்"

"பால் பாயசமா...? சாந்த்க்கு ரொம்ப பிடிக்கும் நீங்க நித்திலாவுக்கு அப்புறம் வேற கொடுங்க" என்றவன் இரண்டு கப்பை எடுத்து "நித்திலாவோட பங்கையும் சேர்த்து நீ சாப்பிடு சாந்த்" என சிரித்தான்.

ஆற்றங்கரையில் வந்து அமர்ந்தவளுக்கு மனம் ஆறவே இல்லை. தனக்காக அத்தை ஆசையாக எடுத்துவைத்ததை அவளுக்கு கொடுத்துவிட்டானே என்று காந்தியது. வெறுப்புடன் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆற்றுநீரில் போட்டுக்கொண்டு இருந்தாள்.

"இந்தக்கரையிலிருந்து அந்த கரைக்கு பாலம் கட்டப்போறியா?" என நிரஞ்சனின் குரல் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து நின்றாள்.

"உட்கார். ஏன் எழுந்துட்ட?"

தனியாக வந்திருக்கிறானா? அந்த சாந்த் வரலையா என பின்னால் திரும்பி பார்த்துவிட்டு நித்திலா அமர்ந்ததும் நிரஞ்சனும் அவளருகில் அமர்ந்த போதும் அவளை உரசாத அளவிற்கு இடைவெளிவிட்டு அமர்ந்தான். "பாட்டிவீட்டுக்கு போய் இருந்தேன். நீ அங்கே வரலைன்னு சொன்னாங்க. நீ இங்கே தான் இருப்பன்னு நினைத்து வந்தேன்" என சொல்லிக்கொண்டே சிறிய டிபன் பாக்சை கொடுத்தான்.



"பால்பாயாசம் உனக்கு பிடிக்குமேன்னு அம்மா கொடுத்து அனுப்பினாங்க" அதானே பார்த்தேன் அதனால் தானே என்னை தேடி வந்தாய் என நினைத்த போதும் அவனே கொண்டுவந்து கொடுத்தானே என எண்ணி சந்தோஷத்துடன் அவன்புறமாக, "எடுத்துக்கோங்க" என நீட்டினாள்.

"நீ சாப்பிடு அம்மா உனக்காக கொடுத்து அனுப்பினாங்க" என்றான்.

சுற்றி பார்த்தவள், அருகிலிருந்த ஆலம் இலைகளை பறித்து ஆற்று நீரில் கழுவி கிண்ணம் போல செய்து அதில் பாயாசத்தை ஊற்றி எடுத்துக்கொண்டு டிபன் பாக்ஸில் இருந்ததை நிரஞ்சனிடம் கொடுத்தாள்.

"கொஞ்சமாவது எடுத்துக்கோங்க உங்களை பார்க்கவச்சி சாப்பிட்டா எனக்கு வயிறுவலிக்கும்" என ஒன்றும் அறியாதவள் போல முகத்தை வைத்துக்கொண்டு சொல்ல சிரித்தவன் அவளிடமிருந்து வாங்கி ஒருவாய் குடித்துவிட்டு, "இப்போ நீ குடி வயிறு வலிக்காது" என்றான் சிரிப்புடன்.

"ம்ம்" என பாயாசத்தை குடித்தவளுக்கு அது அமுதமாக இனித்தது.

## அத்தியாயம்–9

நிரஞ்சன் வீட்டு வராண்டாவில் கால்வைக்கும் போதே "சொன்னா கேளு சாந்த்" என நிரஞ்சனின் குரல் எரிச்சல், சலிப்பு, இழுத்து பிடித்த பொறுமை என கலவையாக ஒலித்தது. நித்திலாவின் கால்கள் அங்கேயே ப்ரேக் பிடித்தது போல நின்றது.

"நீங்க கடைசில என்னை இப்படி ஏமாத்திட்டீங்க?" என கொஞ்சியபடி படியில் இறங்கிக்கொண்டு இருந்த நிரஞ்சனின் தோளை பின்னாலிருந்து பற்றிக்கொண்டு வந்தவளை கண்ட நித்திலாவிற்கு ஜிவ்வென ஏறியது.

"ப்ளீஸ்மா இன்னைக்கு ஒரு நாள் நீ தனியா சுத்திபாரேன். திடீர்னு ஒரு வேலை நான் போய் வந்து ஈவினிங் உன்னை கூட்டி போகிறேன்" என கொஞ்சிக்கொண்டே வந்தவளை கெஞ்சிக்கொண்டு இருந்தான். அங்கு நடக்கும் நாடகத்தையெல்லாம் காண சகிக்காமல் அவர்கள் இருவரும் இருப்பதை காணாதவள் போல அவர்களை தாண்டி சென்றவளை, "நித்திலா.." என அழைத்தான்.

நின்றவள் திரும்பாமலேயே கண்கள் விரிய தன்னையா அழைத்தான் இந்த விஸ்வாமித்திரன், என எண்ணியவள் மறுநொடியே விஸ்வாமித்திரனா...? இவன் சாமியார் வேஷமெல்லாம் என்னிடம் மட்டும் தான் என தன் போக்கில் எண்ணிக்கொண்டு இருந்தவளை, "நித்திலா கொஞ்சம் இங்கே வாயேன்" என மீண்டும் நயமாக கேட்ட அவன் குரலில் அவனை நோக்கி சென்றாள்.

"என்ன அத்.." என்றவள் கப்பென வாயை மூடிக்கொண்டு, "சொல்லுங்க" என்றாள்.



"சாந்த் ஊரை சுத்தி பாக்கணுமாம் நீ கூட்டிட்டு போய் சுத்தி காட்டு" என்றான்

தோடா நான் என்ன கைடா? என கோபம் வந்தாலும் சொன்னவன் நிரஞ்சன் என்பதால் வந்த எரிச்சலை உள்ளடக்கி சுத்தி காட்டணுமா என் கூட வான்னு கூட்டிட்டு போய் பின்னால் மரம் உடைக்கும் இடத்திலிருக்கும் சுத்தியை எடுத்து இதான் சுத்தி இதை சுத்திசுத்தி வந்து பாரு என சொன்னால் இவளுக்கு எப்படி இருக்கும் என நினைத்தவளுக்கு அவளையும் அறியாமல் புன்னகைத்து நிரஞ்சனுக்கு தன்னை காட்டிகொடுத்துவிட அவனும் இவள் என்ன நினைத்திருப்பாள் என யூகித்தவன் புன்னகைத்துவிட்டான்.

"இங்கே பாரு உன் வாலாட்டத்தை அவளிடம் காட்டாதே ரொம்ப அப்பாவி பொண்ணு" என்று நித்திலாவிடம் எச்சரிப்பது போல சொல்லிவிட்டு, "வரேன் சாந்த். நாளைக்கு குற்றாலம் போகலாம்" என சொல்லிவிட்டு கிளம்பி செல்ல நித்திலாவிற்கு சுர்ரென ஏறிவிட்டது.

இவ அப்பாவி பொண்ணா? நான் என்ன அனுமானா அவளிடம் வாலாட்ட? என நினைத்துக்கொண்டே பார்க்க நிரஞ்சனின் பின்னாலேயே சென்றவளை பார்த்தவள், "பொம்பள பிள்ளையா கொஞ்சம் அடக்க ஒடுக்கமா நிக்கிறாளா பாரேன். எப்போ பாரு அவன் கழுத்தை கட்டிகிட்டே தொங்குறாளே. இந்த நிரஞ்சனுக்கும் என்னை கண்டா தான் பிடிப்பதே இல்லை. நல்லவேளை அத்தை இந்த கூத்தயெல்லாம் பார்க்கல" என புலம்பிக்கொண்டே அவள் பின்னால் ஓடாத குறையாக ஓடினாள்.

தோப்பு, வயல்வெளி, ஆற்றங்கரை என ஊரெல்லாம் சுற்றினார்கள். நகரத்திலேயே பிறந்து வளர்ந்தவளுக்கு

இந்த கிராமத்து சூழல் தனி இன்பத்தை கொடுத்தது. மாந்தோப்பில் தொங்கிய மாங்காயை பறித்து உண்டாள், வயல்வெளியில் செருப்பு போட்டு நடக்ககூடாது என சொனதற்கு விளக்கம் கேட்டு, விளக்கம் சொன்னவளை மேலும் கேள்வி கேட்டு, நித்திலாவிற்கு போதும்போதும் என்று ஆகிவிட்டது. வாய்க்காலில் மாடுகளை கழுவிக்கொண்டு இருக்க தானும் செய்கிறேன் என ஓடிசென்று மாட்டை கழுவ

நித்திலா,"அதெல்லாம் செய்யாதே, மாடு புது ஆளுன்னு மிரண்டு உன்னை உதைக்க போகுது" என சொல்லி தரதரவென இழுத்துக்கொண்டு சிறிது தூரம் வருவதற்குள் துணி துவைத்துக்கொண்டு இருந்தவர்கள் எதிரில் ஓடிசென்று அவர்கள் அடித்து துவைப்பதை பார்த்துக்கொண்டு இருந்தாள்.

"நித்தி எவ்வளோ அழகா ரிதமிக்கா இருக்கு இல்ல இவங்க துணி அடித்து துவைப்பது" என சிரிப்புடன் சொன்னவளை பார்த்த நித்திலா இவள் உண்மையிலேயே வெகுளி போல என்று நினைத்துக்கொண்டு சிரித்தாள்.

"என்ன நித்திலா சிரிக்கிறீங்க ? நான் நடந்துக்கொண்டதை பார்த்தா ? நான் பட்டணத்திலேயே வளர்ந்ததால் இந்த சந்தோஷத்தையெல்லாம் அனுபவித்ததே இல்லை. எனக்கு அம்மா கிடையாது அம்மா ஜெய்பூர். எங்க அப்பா தமிழ். அப்பா எதுக்கும் பிரயோஜனம் இல்லை. ஒரு அண்ணன். அண்ணனும் எல்லோரிடமும் ஒதுக்கமா தான் இருப்பான். வேலைக்கு போக ஆரம்பிச்சதும் அண்ணனுக்கு நிரஞ்சனோட பிரெண்ட்ஷிப் கிடைத்தது. என் வாழ்க்கையும் கொஞ்சம் சந்தோஷமாக மலர ஆரம்பிச்சதுன்னும் சொல்லலாம். எதிலேயும் பற்றில்லாமல் இருந்த அண்ணனும் கொஞ்சம் சகஜமாக ஆரம்பித்தான். அடிக்கடி நிரஞ்சன் வீட்டுக்கு வருவார். என் பேர் இந்துமதி. அவங்க ஆபீஸ்ல இதே பேர்ல ஒருத்தர் இருக்காங்களாம். அதனால் இந்துமதின்னா நிலான்னு அர்த்தம் நான் இனி உன்னை சாந்த்னு கூப்பிடறேன்னு கூப்பிட ஆரம்பிச்சார்" என தங்கள் இருவரின் பேச்சு, பல நாட்கள் நிரஞ்சன் அவள் வீட்டிலேயே தங்கியது, இருவரும் சேர்ந்து எங்கேல்லாம் சுற்றினார்கள் என சிரிப்புடன் சொல்லிக்கொண்டு இருந்தவளுக்கு தான் இன்னொருவளின் மனதை காயப்படுத்துகிறோம் என தெரியாமல் சொல்லிக்கொண்டு இருந்தாள்.



நித்திலாவிற்கோ உள்ளம் வலித்தது. தன்னிடம் இப்படி ஒதுங்கி செல்பவன் இவளிடம் சகஜமாக இல்லையில்லை உரிமையுடன் பேசிபழகுகிறான் என உள்ளுக்குள் சோர்ந்தாள். இரவெல்லாம் குழம்பிய மனநிலையுடனே கழித்தாள்.

**கா**லையில் தன் அறையில் இருந்த அலமாரியை சுத்தம் செய்துக்கொண்டு இருந்தவளை, "நித்தி" என அழைத்துக்கொண்டே உள்ளே வந்த இந்து பொறுமையாக திரும்பிபார்த்த நித்திலாவிடம், "இன்னும் கிளம்பலையா ? "

"எங்கே ?" என்று கேட்டவள் மீண்டும் தன் கவனத்தை வேலையில் செலுத்த

"நேத்து சொன்னேனே இன்னைக்கு குற்றாலம் போகலாம்னு ?" சொன்னாளா என்ன ? என நித்திலா விழிக்க, "இதெல்லாம் வை அப்புறம் வந்து செய்துக்கலாம். நீ வந்தால் தான் ஜாலியா இருக்கும்" என கை பிடித்து அழைத்தாள்.

அவள் கையை மெல்ல விலக்க முயற்சித்தபடி,"இல்ல இந்து நீங்க போய் வாங்க. நான் வரலை. எனக்கு வேலை இருக்கு பாட்டியும் தனியா இருப்பாங்க" என்று வரவிருப்பம் இல்லை என சொல்லாமல் சொன்னாள்.

"அதெல்லாம் நான் பாட்டிகிட்ட சொல்றேன்" என்று நித்திலாவை இழுத்துவராத குறையாக அழைத்துவர, "ப்ளீஸ் இந்து நான் வரலைன்னு சொல்றேன் இல்ல" என சொல்லிக்கொண்டே ஹாலிற்கு வந்தவள் அங்கு பாட்டியுடன் பேசிக்கொண்டு இருந்த நிரஞ்சனை கண்டதும் மூச்சடைக்க நின்றாள்.

ஆகாயநீலநிற டி–ஷர்ட்டும், அடர்நீலநிற ஜீன்சுமாக இந்த டி–ஷர்ட் சென்றவருடம் அவன் பிறந்த நாளுக்காக ஆசைஆசையாக வாங்கி அனுப்பிவைத்தது. அதை அணிந்து இப்போது தான் பாக்கிறாள். அப்போது சரியாக இருந்திருக்கும். இப்போது உடலுடன் ஒட்டினார் போல ஆனால் அதுவும் அவனுக்கு அழகாக பொருந்தி இருந்தது. தான் வாங்கி கொடுத்த டி–ஷர்ட்டை அணிந்திருப்பதை பார்த்ததும் அவளையும் அறியாமல் புன்னகையில் இதழ்கள் மலர்ந்து விரிந்தது. நிமிர்ந்து பார்த்த நிரஞ்சன் என்ன என்பது போல புருவத்தை உயர்த்தி மென்மையாக புன்னகைத்தான். அவன் செய்கையில் சிலிர்த்து சிவந்து இதயம் படபடக்க நின்றாள்.

"நித்தி வீட்டுக்கு வந்தவங்களை வாங்கன்னு கூப்பிடுவதில்லையா?" என்று பாட்டி சொன்னதும்

"பாட்டி நான் என்ன அந்நியனா? வாங்கன்னு கூப்பிட என்ன நித்திலா?" என்றதும்

"ஆ...!!" என திணறியவளை பார்த்து நமுட்டு சிரிப்பு சிரித்தான். என்ன இன்னைக்கு இத்தனை நாளாக



நேரடியாக இப்படி பேசி சிரிக்காதவன் இன்று என்ன ஆயிற்று ?என வியந்து நின்றாள்.

"சாந்த் கிளம்பலாமா ? நேரமாகுது"

"கிளம்பலாம் ஆனா நித்திலா வரலைன்னு சொல்றாங்க. நீங்க சொல்லுங்க பாட்டி" என இந்து பாட்டியிடம் முறையிட நிரஞ்சன் நித்திலாவின் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

"போய் வா நித்தி. இந்து ஆசையா கூப்பிடுகிறாளே"

"இ..ல்ல பாட்டி. நீங்க தனியா இருப்பீங்க. எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு" என நிரஞ்சனின் புறம் செல்லமுயன்ற பார்வையை அடக்கி பாட்டியை பார்த்தே சொல்லிமுடித்தாள்.

"நான் என்ன சின்ன குழந்தையா? சரசு எனக்கு பேச்சு துணைக்கு இருக்கா. ஏதாவது வேணும்னா நான் வேலம்மாவை கேட்டுக்கறேன். நீ கிளம்பி போய் வா" என்றார்.

தவிப்புடன் நின்றவளை பார்த்துக்கொண்டே, "கவலைபடாம வரசொல்லுங்க பாட்டி. உங்க பேத்தியோட வால்தனத்தை பார்த்து நாங்க பயப்படமாட்டோம்" என சிரித்தவனை விழிமலர்ந்து பார்த்தாள். அவனின் இயல்பான பேச்சும், தான் அன்பளிப்பாக கொடுத்த டி–ஷர்ட்டை அணிந்திருந்தது, தன்னை பார்த்து குறும்பாக சிரிப்பது என வித்தியாசமான நிரஞ்சனை கண்டு பிரமித்து நின்றாள். ஒருவழியாக நித்திலாவை கிளப்பிக்கொண்டு காருக்கு வர இந்து முன்னால் சென்று டிரைவர் சீட்டின் அருகில் அமர்ந்துக்கொண்டாள்.

"சாந்த் நீ நித்திலா கூட உட்கார்ந்துக்கோ" என்ற நிரஞ்சனின் சொல்லுக்கு

"நான் முன்னால் உட்கார்ந்தா வேடிக்கை பார்க்க வசதியாக இருக்கும் ப்ளீஸ்" என சொல்ல நிரஞ்சன் பின்னால் நித்திலாவின் அருகில் அமர்ந்தான். நித்திலாவிற்கு உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது. முகத்தில் தெரிந்த சந்தோஷம் உதட்டில் புன்னகையாக மலர்ந்தது. நிரஞ்சனின் நிதானம், அன்பான சுபாவம், மென்மையான குணம், பொறுமை, என ஒவ்வொரு குணமும் நித்திலாவின் மனதில் நிரஞ்சனின் மீது நேசத்தை விளைவிக்க மொட்டுவிட்டு மலர துடித்துக்கொண்டு இருந்த காதல் இன்று அவனின் அருகாமை தந்த இதம் ஒரு இனிமையான தருணத்தை அவளுக்கு உணர்த்திக்கொண்டு இருந்தது.

அவனின் உள்ளத்தில் இருப்பதை அறிந்துக்கொள்ள இதுவரை அவன் இடம் கொடுக்கவில்லை. இருந்த போதும் தன் காதலை அவன் உணர்ந்திருப்பான் என்று நம்பினாள். அதன் எதிரொலியாக இப்போது நடந்துக்கொள்வதாக நினைத்து புன்னகையுடன் வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தாள். அப்படியே திரும்பி நிரஞ்சனை பார்த்திருந்தால் அவன் கண்கள் சொன்ன காதலை உணர்ந்திருப்பாள், அவன் மனதை சொல்லாமலே புரிந்துக்கொண்டு இருப்பாள். ஆனால் விதி வலியது. வாழ்க்கையில் ஒவ்வொன்றும் நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும் என காய்களை நகர்த்திக்கொண்டு இருந்தது.

## அத்தியாயம்–10

மூவரும் குற்றால நாதர் கோவிலுக்கு சென்று வணங்கிவிட்டு அருவிக்கு வந்தனர். சீசன் ஆரம்பிக்க சில நாட்களே இருந்த போதும் அருவியில் நீர் பொங்கி வழிந்துக்கொண்டு இருந்தது. கூட்டமும் இருந்தது. மூவரும் கிளம்பி ஒவ்வொரு அருவிக்கும் சென்று பார்த்துக்கொண்டு இருந்தனர். ஐந்தருவிக்கு வந்த போது



மதியத்திற்கு மேல் ஆகிவிட்டது. கொண்டுவந்த உணவை உண்டுவிட்டு வெள்ளரிபிஞ்சை அருகில் ஓடிய தண்ணீரில் கழுவிய நித்திலா இரண்டடி கூட நடந்து இருக்க மாட்டாள் எங்கிருந்தோ நான்கைந்து குரங்குகள் அவளை நோக்கி ஓடிவர பயத்துடன் அலறி வெள்ளரி பிஞ்சுகளை அங்கேயே போட்டுவிட்டு ஓடியவள் எதன்மீதோ மோதிக்கொண்டாள்.

பயத்தில் இதயம் படபடக்க கண்களை திறக்காமல் இறுக மூடி இருந்தவளின் காதில் "நித்திலா" என மிக மென்மையாக மெதுவாக அழைப்பது கேட்டும் கண்களை திறக்காமல் நின்றவளை இரு கைகள் சுற்றிவளைத்து இறுக அணைப்பது தெரிய கண்களை திறந்து பார்க்க தோன்றினாலும் அந்த அணைப்பில் தன்னை மறந்து தன் கரமும் உயர்ந்து அணைப்பது புரிந்தும் புரியாமலும் நின்றாள். திடீரென தன்னை சுற்றி அணைத்திருந்த கைகளின் இறுக்கம் தளர கண்ணை திறக்க தான் நிரஞ்சனை பற்றியபடி நிற்பது உணர்ந்து விலகியவள் அவன் கண்களை பார்க்கும் சக்தி இல்லாமல் நிற்க, "நித்தி என்ன ஆச்சு ? ஏன் கத்தின ?" என்றபடி இந்து வந்தாள்.

பேசவே மறந்தவளை போல நின்ற நித்திலாவிற்கு உதவியாக, "குரங்கை பார்த்து பயந்து கத்தி இருக்கா சாந்த்" என்றதும் நிம்மதி பெருமூச்சுவிட்ட இந்து அவள் கைப்பற்றி தாங்கள் இருந்த இடத்திற்கு அழைத்துவந்தாள். அதன் பிறகு நித்திலா நிரஞ்சனை நேராக பார்க்கவே இல்லை. அந்த அணைப்பு அவளுக்கு சில விஷயங்களை உணர்த்தி சந்தோஷத்தை கொடுத்த போதும், தான் இவ்வளவு பலகீனமானவளா என்று சிறு சங்கடமும் எழத்தான் செய்தது.

அன்றுமுழுதும் கிடைத்த நிரஞ்சனின் அருகாமை தந்த மகிழ்ச்சி, மதியம் நடந்த நிகழ்ச்சி என நித்திலா

விண்ணில் பறந்துக்கொண்டு இருக்க நிரஞ்சனின் கேலி பேச்சும், பார்வையும் அவளை சலனபடுத்தி இருந்தது. வானத்தில் பறந்த தன் மனதை பெரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டு இருந்தாள். மாலை வீடு திரும்பும் முன் நிரஞ்சன் தங்கள் குலதெய்வம் கோவிலுக்கு அழைத்து சென்றான். பெண்கள் வரிசையில் நின்று தரிசனம் முடித்த நித்திலா கண்களை மூடி கூடியவிரைவில் நிரஞ்சனுடன் உரிமையாக தான் இந்த கோவிலுக்கு வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டு கொடுத்த பிரசாதத்தை நெற்றியில் வைத்துக்கொண்டே திரும்பியவள் பார்வை அப்படியே நிலைகுத்தி நின்றது.

காலையிலிருந்து பொங்கிய உற்சாகமெல்லாம் வடிந்தது. இறக்கை இல்லாமல் பறந்த மனம் சொத்தென விழுந்தது. நிரஞ்சனின் நெற்றியில் விபூதியை வைத்த இந்து கண்ணில் படாமல் இருக்க நெற்றியில் குறுக்காக கைவைத்து ஊதிவிட்டதை பார்த்து வெறித்து நின்ற நித்திலா கண்களில் பார்வை மங்கலாக தெரிவதை புரிந்துக்கொள்ளவும் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் நான் தான் உன் கண்ணை மறைத்தேன் என்பதை சொல்வது போல அவள் கன்னத்தில் வழிய அவசரமாக துடைத்தபடி இருவரையும் பார்க்காமல் வேகமாக காரின் முன்பக்க சீட்டில் கண்களை மூடியபடி அமர்ந்துக்கொண்டாள்.

பின்னாலேயே வந்த நிரஞ்சனும், இந்துவும் குழப்பத்துடன் அவளை பார்த்தனர். மூவரும் வீடுவந்து சேர்ந்ததும் நித்திலா விறுவிறுவென வீட்டை நோக்கி சென்றாள். தன்னை அழைத்த பாட்டியின் அழைப்பிற்கு கூட செவி சாய்க்காமல் தன் அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டு தன் கால்கள் ஓயும்வரை



அறைக்குள்ளேயே நடந்தாள். ஆனால் மனம் மட்டும் ஓயவில்லை.

ஒருவேகத்துடன் நிரஞ்சனின் வீட்டிற்கு சென்று தோட்டத்தில் உலவிக்கொண்டு இருந்த இந்துவின் எதிரில் நின்றாள்.

“ஹே நித்தி தூங்கலியா? ஈவ்னிங் ஏன் டல்லா இருந்த ?” என்ற இந்துவை முறைத்து பார்த்த நித்திலா ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பேசினாள்.

“இங்கே பார் இந்து. இது கிராமம். நீ சிட்டியிலே வளர்ந்த பொண்ணு. உங்க நார்தல வேணும்னா இதெல்லாம் சகஜமாக இருக்கலாம். இங்கே எல்லாமே இல்லை மறைவு காய் மறைவு தான். வந்தாயா, பத்து நாள் இருந்து, நல்லா மூக்கை பிடிக்க விருந்து சாப்பிட்டுவிட்டு,ஊரை சுத்தி பார்த்துட்டு கிளம்பி போற வழியை பார். அதை விட்டுட்டு என்னை பார் என் அழகை பார்னு விளம்பரம் போட்டு காட்டாதே” என்றவள் இந்துவின் திகைத்த பார்வையை கண்டும் காணாமல் திரும்பி நடந்தாள். நான்கடி சென்றவள்,“ அப்புறம் இன்னொரு முறை நீரு நீருன்னு கொஞ்சும் வேலையெல்லாம் வேண்டாம். எனக்கு மட்டும் தான் அந்த உரிமை இருக்கு” என்று சொல்லிவிட்டு தன் வீட்டை நோக்கி சென்றாள்.

அடுத்துவந்த மூன்று நாட்களில் நித்திலா முடிந்த அளவிற்கு இந்துவை சந்திக்காமல் ஒளிந்தாள். ஊருக்கு வந்தவளை தான் அதிகமாக பேசிவிட்டோமோ? என்ற நெருடலும் ஒரு காரணம். தன்னிடம் பழகியவரை இந்து வெகுளி. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல அவளின் சாதாரண செய்கை கூட தனக்கு சந்தேகத்தை கொடுக்கிறதோ என்று எண்ணியவளுக்கு அறைக்குள் அமரவே முடியவில்லை.

வெளியில் நிரஞ்சனின் குரல் கேட்க கீழறையில் இருந்தவள் ஜன்னல் திரையை லேசாக விலக்கி பார்த்தாள். இந்துவுடன் வெளியே கிளம்ப பைக்கை ஸ்டார்ட் செய்தவனின் பார்வை மாடியில் இருந்த தன் அறை ஜன்னலை சில நொடிகள் பார்த்துவிட்டு முகம் முழுதும் இறுக்கத்துடன் செல்வதை பார்த்தவளுக்கு எரிச்சலாக இருந்தது. தான் இந்துவை சந்தித்து பேசியதை கேள்விபட்டது தான் அவன் முக இறுக்கத்துக்கு காரணம் என உள்ளுக்குள் வெதும்பினாள். அவ்வளவு நேரம் தனக்கே சமாதானம் சொல்லிக்கொண்டவள் மீண்டும் குழம்பிப்போக வீட்டையே சுற்றிசுற்றி வந்தாள்.

சிறிது நேரம் பொறுத்து சரஸ்வதியை தேடி சென்றவள் வீட்டின் பின்புறமிருந்த தோட்டத்தில் இருந்தவருடன் பேசிக்கொண்டே வீட்டினுள் வர ஹாலில் நின்றிருந்தவனை கண்டு அதிர்ந்தாள். முகம் கோபத்தில் சிவக்க, இறுகிய தாடை அவன் கோபத்தை கட்டுபடுத்தியபடி நிற்பதை அவளுக்கு உணர்த்த உள்ளுக்குள் பயந்து போனாள். முன்னால் நின்றிருந்த சரஸ்வதியின் புடவையை பற்றியபடி அவர் பின்னால் முகம் மறைய நின்றாள்.

“என்ன நிரஞ்சன் ஏதாவது மறந்து விட்டுட்டு போயிட்டியா ?இந்து எங்கே ?” என்றார் சரஸ்வதி.

தன் பார்வையை நித்திலாவிடமிருந்து விலக்கியவன், “வெப் கேம் வச்சிட்டு வந்துட்டாளாம் அதை எடுக்க வந்தோம்” என்று சொல்லிமுடிக்க இந்து வெப் காமெராவுடன் வந்து சேர்ந்தாள். மீண்டும் நித்திலாவை பார்த்தவன் இந்துவின் மணிக்கட்டை பற்றி வேகமாக திரும்பி நடந்தான். நித்திலாவிற்கு மூக்கு விடைக்க கோபம் கொப்பளித்தது. ஓடிவந்து வாசலில் நிற்கவும் நிரஞ்சன்



க்ளட்ச்சை விடுவிக்க தெருவில் புழுதி பறக்க பைக் பறந்தது. இந்து திரும்பி தன்னை பார்ப்பது புரிய நித்திலா செய்வதறியாமல் நின்றாள்.

“நீயும் தேன்மலை போய் இருக்கலாமே நித்தி. நீ ஏன் வரலைன்னு நிரஞ்சன்கிட்ட சொல்லிட்ட ?” என்று சொன்னது வேறு அவளுக்கு அடிவயிற்றில் கலக்கத்தை ஏற்படுத்தியது.

“அதுவந்து இன்னும் ரெண்டு நாளில் ஊருக்கு கிளம்பணுமே. அதனால் எங்கும் போகவேண்டாம்னு போகவில்லை” என்றவள் ஆற்றங்கரை பிள்ளையார் கோவிலுக்கு சென்று அமர்ந்துக்கொண்டாள்.

“ஆள் வளர்ந்திருக்காளே தவிர கொஞ்சம் கூட பொறுப்பே இல்லை. மணி நாலாக போகுது இன்னும் வரக்காணோம்” என்ற கமலம் பாட்டியின் குரலை கேட்டபடி உள்ளே வந்த சரஸ்வதி, “என்னம்மா யாரை பேசிட்டு இருக்கீங்க ?” என்றபடி கமலம் பாட்டி அருகில் அமர்ந்தார்.

“வா சரசு வேற யாரை திட்ட போறேன். இந்த நித்திலா காலைல உன் வீட்டுக்கு வந்தவ இன்னும் வரலேன்னு பேசிட்டு இருக்கேன்”

“அப்போவே உடனே கிளம்பிட்டாளே, இன்னுமா வரல ஆத்தங்கரை பிள்ளையார் கோவில்ல உட்கார்ந்து இருப்பா. வேற எங்கே போகப்போறா ?” என நித்திலாவிற்கு பரிந்து வந்தார்.

“இப்படி ஆளாளுக்கு செல்லம் கொடுத்து வரவர சொல்றதை கேட்பதே இல்லை. காலா காலத்துல ஒருத்தன்கிட்ட பிடிச்சி கொடுத்திட்டா என் பாரமெல்லாம் தீர்ந்து போய்டும். அவ அம்மா இருந்தா இதெல்லாம்

பார்த்துப்பா. ஹூம்ம்...!! எதுக்கும் கொடுத்துவைக்காம போய் சேர்ந்துட்டா மகராசி" என புடவை தலைப்பில் கண்களை துடைத்துக்கொண்டு, "இன்னும் என்னவோ படிக்கணும்னு சொல்லிட்டு திரியறா. கல்யாணம் பண்ணிக்கிட்டு அவ புருஷன் சம்மதத்தோட படிக்கட்டுமேன்னு அவ அப்பாவிடம் சொன்னா, அவரோ அவ இஷ்டபடி படிக்கட்டும் நல்ல வரன் வந்தா முடிச்சிடலாம்னு சொல்றார். வரும் வரும்னு காத்திருப்பதை விட்டு நாமளும் பார்த்தாதானே முடியும். நான் சொன்னா யாருக்கு புரியுது. பெத்தவ இருந்தா நாசுக்கா சொல்வா" என்றவர் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினார்.

சரஸ்வதியும் பானுவின் நினைவில் நெகிழ்ந்தவர் பாட்டியிடம்,"நித்திலாவுக்கு சொந்தத்துல ஏதும் முறை இருக்காம்மா?" என தயக்கத்துடன் கேட்டார்.

"ம்ம்.. ஒரு பையன் இருக்கான். அவன் அம்மா மாப்பிள்ளைக்கு ஒண்ணுவிட்ட அக்கா முறை. ஆரம்பத்தில் அவங்ககிட்ட தான் மாப்பிள்ளை வேலை செய்திருக்கார். அப்புறம் அவங்களே மாப்பிள்ளை தனியா பிஸ்னஸ் பண்ண ஹெல்ப் பண்ணாங்க. அந்த பொண்ணு நல்ல அனுசரனையா இருப்பா. ஆனால் மாப்பிள்ளை அவங்க பெரிய இடம், அதோடு பழைய முதலாளியா தான் நினைக்கிறார். அவங்க வீட்டுக்கு கூட நித்திலாவை மட்டும் தான் அனுப்புவார். இவளும் கூப்பிட்டதுக்காக ரெண்டு நாளைக்கு மட்டும் போய்வருவா"என்றார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட சரஸ்வதி ஒரு நிம்மதி பெருமூச்சை வெளியிட்டுவிட்டு," அப்போ நான் ஒன்னு கேட்பேன் தப்பா நினைக்க மாட்டீங்களேம்மா? "

"அப்படி என்ன தப்பா நினைக்கும் அளவுக்கு கேட்க போற?"என்றார் ஆச்சர்யமாக



"நம்ம நித்திலாவை நிரஞ்சனுக்கு பார்க்கலாமேன்னு...." என்று முடிக்காமல் கமலம் அம்மாவை பார்க்க அவர் முகமோ பிரகாசமாக சரசுவை பார்த்தார்.

"இத்தனை நாளா எனக்கு இது தோணவே இல்லையே சரசு. நிரஞ்சனுக்கு கொடுக்க கசக்குமா என்ன? இந்த காலத்தில் இப்படி பொறுப்பா ஒரு பையனை பார்ப்பது எவ்வளவு கஷ்டம்? உன்னை மாதிரி ஒரு மாமியார் நித்திலாவுக்கு கிடைக்கும்னா கண்ணை மூடிக்கிட்டு சம்மதம் சொல்வேனே இதுக்கா இவ்வளவு தயங்கி கேட்ட?" என தன் சம்மதத்தை சொல்லாமல் சொல்லிவிட சரசுவின் முகம் மலர்ந்தது.

"ராமு அண்ணன் என்ன சொல்வாங்களோ....?"

"கண்ணுக்கு லட்சணமா, படிப்பு, கைநிறைய சம்பாதனைன்னு இருக்கும் பொறுப்பான பையனுக்கு பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்ல போறாரா என்ன? நீ நிரஞ்சன்கிட்ட முதலில் பேசு நான் மாப்பிள்ளைகிட்ட பேசறேன்" என்று சொன்னதும் பாதி கல்யாணம் முடிந்தது போல சரசு சந்தோஷத்தில் மூழ்க, வாசலில் நின்றிருந்த நித்திலாவிற்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

உள்ளே வராமலேயே மீண்டும் பிள்ளையார் கோவிலுக்கு ஓடியவள் மூச்சிரைக்க சன்னதியில் வந்து நின்றாள். "தேங்க்ஸ் பிள்ளையாரப்பா. அதுக்கு முன்னால் ஒரு பெரிய சாரி. மத்தியானம் உன்னை திட்டிட்டேன் இல்ல சாரி. என்றவள் உனக்கு தெரியுமா எனக்கும் நீருவுக்கும் கல்யாணம் செய்யலாமான்னு வீட்ல பேசிட்டு இருக்காங்க.எனக்கு எப்படி தெரியும்னு கேட்கறியா? நான்

தான் எல்லாத்தையும் திருட்டு தனமா ஒளிஞ்சி நின்னு கேட்டுட்டேனே"என்றவள் "ஆ..." என தன் தலையை தடவிக்கொண்டு, "தும்பிக்கையால் அடிக்காதே பிள்ளையாரப்பா. ஒட்டு கேட்பது தப்பு தான் ஆனா என்னை பத்தி பேசின நல்ல விஷயத்தை தானே கேட்டேன் அது ஒன்னும் தப்பு இல்லையே, சரி சரி முறைக்காதேப்பா, வர்ற விநாயகர் சதுர்த்திக்கு எக்ஸ்ட்ரா ரெண்டு இல்ல அஞ்சு மோதகமும், அஞ்சு கொழுக்கட்டையும் செய்து வைக்கிறேன் ஒகே" என்று மானசீகமாக பேசிமுடித்தவள் சந்தோஷத்துடன் வீட்டை நோக்கி ஓடிவந்தாள்.

மறுநாள் அவளை தேடிவந்த இந்து தான் ஊருக்கு செல்வதாக சொல்லிவிட்டு விடைபெற்று செல்ல, நித்திலா "சாரி இந்து ஏதோ கோபத்தில் உன்னை பேசிட்டேன்" என்று மன்னிப்பு கேட்க இந்து புன்னகைத்துக்கொண்டே கிளம்பினாள். வாசல்வரை வந்து வழியனுப்பிய நித்திலா வெட்கத்தில் நிரஞ்சனை திரும்பி பார்க்கவில்லை. அவன் முகத்தில் படிந்த குழப்பத்தையும் அதனால் வந்த இறுக்கத்தையும் கூட அறியவில்லை.

## அத்தியாயம்—11

"நித்தி, இந்த புத்தகத்தை சரசுகிட்ட கொடுத்திட்டு வா. அப்படியே நாளைக்கு காலைல கிளம்பறேன்னு சொல்லிட்டு வந்திடு"என சொல்ல நிரஞ்சனை பார்க்க வெட்கமாக வந்தாலும் அவனை இன்று தானே கடைசியாக பார்க்க முடியும் என்ற எண்ணத்துடன் சரசு வீட்டு அழைப்பு மணியை அழுத்த நினைக்கவும் உள்ளிருந்து நிரஞ்சனின் குரல் சத்தமாக கேட்டது, "ஏம்மா புரிஞ்சிக்க மாட்டேன்றீங்க, இப்போ கல்யாண பேச்சை எடுக்காதீங்க" என அவன் குரல் உச்சஸ்தானியில் ஒலிக்க நித்திலா திடுக்கிட்டு அழைப்பு மணியை அழுத்தாமல் அப்படியே நின்றாள்.



"ஏம்பா நான் நல்லபடியா இருக்கும் போதே நடந்தால் தானே எனக்கு நிம்மதி" என்ற சரஸ்வதியின் குரலில் ஒரு ஏக்கம் தெரிந்தது

"அம்மா ப்ளீஸ் நான்... சொல்ல வருவதை கொஞ்சம் புரிஞ்சிக்கோங்க"என்று கொஞ்சம் தணிந்த குரலில் சொன்னவன்,"அம்மா.... நா நான்...ஒன்னு சொல்றேன் நீங்க என்னடா நம்ம பிள்ளை கைமீறி போறான்னு நினைக்காதீங்க"என பின்னந்தலையை அழுந்த கோதிவிட்டவன்,"அம்..மா... நான் ஒரு பொண்ணை விரும்பறேன்" என்றதும் அவன் பேச்சைகேட்டுக்கொண்டு இருந்த சரசுவும், வெளியே நின்றிருந்த நித்திலாவும் அதிர்ந்தனர். ஆசையாக அவனின் சம்மதுத்துக்காக காத்திருக்க அவனோ யாரையோ விரும்புவதாக கூறுகிறானே ஒருவேளை விளையாடுகிறானோ என்ற நப்பாசையும் அவளுக்குள் ஓடியது.

"என்னாடா சொல்ற...? யாருடா அந்த பொண்ணு" என்று இறங்கி ஒலிக்க

சரசுவின் கையை பற்றியவன், "அவ ரொம்ப நல்ல பொண்ணுமா. என்னுடைய விருப்பத்தை இன்னும் நேரடியாக அவளிடம் சொல்லவில்லை. அவளிடம் சம்மதம் வாங்கிவிட்டு உங்களிடம் பேசலாமேன்னு இருந்தேன். உங்களுக்கு அவ நல்ல மருமகளா இருப்பாம்மா" என்றவனை வேதனையுடன் பார்த்தார்.

"பொண்ணு எந்த ஊரு ?" என்று கேட்க,

"இந்த ஊர் இல்லம்மா"என்று சொல்லி மையமாக புன்னகைத்தான். அம்மாவின் இந்த ஒரு கேள்வியே தனக்கு சம்மதம் கூடியதாக முடிவு கட்டிக்கொண்டவனின்

மொபைல் அவனை அழைக்க எடுத்தவன் சிரிப்புடன், "ஹே சாந்த் ஹவ் ஆர் யு?" என உற்சாகம் பொங்கிய குரலில் பேசிக்கொண்டு செல்பவனை பார்த்த சரசு சங்கடத்துடன் அமர்ந்திருக்க வெளியே நின்றிருந்த நித்திலா அவனின் பேச்சை கேட்டு அதிர்ந்து அப்படியே கதவில் சாய்ந்துவிட உள்ளிருந்த சரசு "யாரு" என குரல் கொடுத்தார்.

ஒன்றும் அறியாத இயல்பான குரல் நித்திலாவிற்கு எப்படி வந்ததோ, "நா..ன் தான் அத்தை" என்று பதில் குரல் கொடுக்க கதவை திறந்த சரசு அவள் முகத்தை பார்த்து சங்கடத்துடன், "உள்ளே வாடா" என்றார்.

'இல்ல அத்தை, பாட்டி இந்த புக்கை கொடுக்க சொன்னாங்க. அப்புறம் நான் நாளைக்கு விடியற்காலம் ஊருக்கு கிளம்பறேன்" என்று சொன்னவளுக்கு திடீரென என்ன தோன்றியதோ சரசுவின் கழுத்தை கட்டிக்கொண்டு தன்னை மறந்து அழுதாள். ஆதரவாக அவள் முதுகை தடவிக்கொடுத்த சரசுவும் கண்கலங்கிவிட தன்னை சமாளித்துக்கொண்ட நித்திலா,"நான் போறேன் அத்தை" என்றவள் விறுவிறுவென திரும்பி பார்க்காமல் வீட்டை நோக்கி நடந்தாள்.

**ஆ**யிற்று இன்றோடு தர்மபுரி வந்து முழுதாக பதினைத்து நாட்கள். இன்று வரை சரசுக்கு போன் செய்யவே இல்லை. சரசுவும் போன செய்யவில்லை. நித்திலா முடங்கிப்போய் மூலையில் அமராவிட்டாலும் எல்லாவற்றிலும் கொஞ்சம் ஒதுங்கி இருந்து தன் மனதில் இருக்கும் கவலையை அவள் தந்தைக்கு சொல்லாமல் சொல்லி விட ராமகிருஷ்ணன் அவளிடம் நேரடியாக எப்படி பேசுவது என்று நினைத்தவர் தன் மாமியாரிடம் சொல்ல அவரும் நேரம் பார்த்து நித்திலாவிடம் பேசினார்.



"நித்தி இங்க வாம்மா" என்று அழைத்த பாட்டியின் அருகில் வந்து அமர்ந்தவள்,"என்ன பாட்டி?" என்றாள்.

"சரசுகிட்ட பேசி ரொம்ப நாள் ஆகுது. அவளும் பேசலையே போய் போன் எடுத்துட்டு வந்து நீ பேசிட்டு என்னிடம் கொடு நான் பேசணும்" என்றவர் அவள் முகத்தை ஊன்றி கவனித்தார்.

"நீங்க பேசணும்னா பேசுங்க பாட்டி எனக்கு பேச விஷயம் ஒன்னும் இல்லை" என்றவள் எழுந்து சென்று கார்ட்லெஸ் போனை கொண்டுவந்து கொடுத்துவிட்டு செல்ல முயல,

"நம்பர் போட்டு சரசு எடுத்தும் என்னிடம் கொடு" என்றவர் தன்னையே பார்ப்பதை உணராமல் இரண்டு மூன்று முறை எண்ணை தவறாக அழுத்த அவளிடமிருந்து போனை வாங்கிய கமலம் பாட்டி அவள் கைப்பற்றி தன் அருகில் அமரவைத்துக்கொண்டு, "உனக்கு என்னம்மா ஆச்சு?" என அவள் கன்னம் வருடி கேட்டதும் அவர் மடியில் சாய்ந்தவள் ஒவென அழ ஆரம்பித்து நிரஞ்சனின் பேச்சு முழுதையும் சொல்லி முடித்தாள்.

"கண்ணால் காண்பது பொய் காதல் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய். நீ அரைகுறையா ஏதாவது கேட்டுட்டு உளறாதே. நான் சரசுவிடம் பேசிட்டு நிரஞ்சனிடம் நேராகவே கேட்கிறேன் நித்திலாவை கல்யாணம் செய்துக்க உனக்கு சம்மதமான்னு" என சொன்னதும்

"பாட்டி அப்படி நீங்க கேட்டு நிரஞ்சன் என்னை வேண்டாம்னு சொன்னா அது தான் நீங்க என்னை கடைசியா பார்ப்பதாக இருக்கும். இன்னொரு முறை அந்த

வார்த்தை கேட்டா நான் செத்திடுவேன் பாட்டி" என அழுத பேத்தியை தன்னோடு அணைத்துக்கொண்டார்.

"என்ன வார்த்தை பேசற நீ. இதுக்கா உன்னை உங்க அப்பா பாசத்தை கொட்டி வளர்க்கிறார். நீ எதையோ தப்பாக புரிஞ்சிகிட்டு இருக்கியோன்னு எனக்கு தோணுது. குற்றாலம் போய் வந்ததிலிருந்தே நீ ஆளே சரி இல்லை. எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு. எதுக்கும் நான்..." என்ற பாட்டியை கட்டிக்கொண்டவள், "பாட்டி ப்ளீஸ் வேண்டாம்" என கதறி அழ ஆரம்பித்தாள்.

'சரி நான் சரசுகிட்ட பேசலை. ஆனா நீ இப்படியே எதையோ பறிகொடுத்தா மாதிரி இருந்தா உங்க அப்பா கவலைபடுவார். இப்போவே அவர் சொல்லித்தான் உன்னிடம் நான் பேசினேன். எழுந்து போய் முகத்தை கழுவு. நீ மேற்கொண்டு படிக்கணும்னு சொன்னியே அதுல உன் கவனத்தை திருப்பு. நடக்க வேண்டியது எல்லாம் நல்லபடியா நடக்கும்" என சொல்லிவிட்டு கண்களை துடைத்துவிட்டார்.

பாட்டியின் முன்னால் எதையும் காட்டிக்கொள்ளாமல் இருந்தாலும் உள்ளுக்குள் நிரஞ்சனின் வார்த்தைகள் அவளை வதைத்துக்கொண்டு இருந்தது. காலம் எதற்கும் நிற்பதில்லை என்பது போல நித்திலாவிற்கு பெங்களூர் ஐஐடிசியில் இன்டீரியர் படிக்க வாய்ப்பு கிடைக்க சந்தோஷத்துடன் அதற்கு தயாரானாள். கல்லூரியில் சேர்ந்து இரண்டு மாதம் ஓடிவிட நித்திலாவை கல்லூரி முதல்வர் அழைப்பதாக வந்து சொல்ல அலுவல் அறையை நோக்கி சென்றவள் வாசலில் நின்றிருந்தவனை கண்டதும் ஆச்சர்யத்தில் இமைகள் விரிந்தன.



அவன் பின்னால் வந்து நின்றவள் சிரிப்புடன், "அத்தான்" என அழைத்ததும் திரும்பிய ரிஷியின் முகத்தில் அழுத்தம் தெரிய புன்னகைக்க முயன்றவன்,"நித்தி, சீக்கிரம் கிளம்பு" என்று துரிதபடுத்தினான்.

"எங்கே ?" என்று கேட்கும் போதே குரலில் கலக்கம் எட்டிபார்க்க,

"மாமா உன்னை பார்க்கணுமாம் சீக்கிரம்" என்றவனின் அருகில் வந்தவள்

"அப்பாவுக்கு என்ன ஆச்சு ?" என அதிர்ச்சியுடன் கேட்டாள். ஊட்டிக்கு ஒரு விழாவிற்கு வந்து திரும்பி வரும்போது மேட்டுப்பாளையம் அருகில் கார் அக்சிடென்ட் ஆகிவிட்டதாகவும், ஒரு மீட்டிங்கிற்காக கூர்க் வந்தவனை சகா தேவன் போனில் பிடித்து நித்திலாவை அழைத்துவர சொன்னதையும் சொல்லி முடித்து உறைந்து போய் இருந்தவளுடன் கோயமுத்தூருக்கு விமானம் பிடித்து வந்து சேரும் முன்னே எல்லாம் முடிந்திருக்க, இன்னொரு அதிர்ச்சியாக அவள் பாட்டியும் விபத்தில் அந்த இடத்திலேயே இறந்தது தெரிய உடைந்து போய் அழுதவளை வைதேகி வாரி அணைத்துக்கொண்டார். அன்று அணைத்துக் கொண்ட அந்த அரவணைப்பு இன்றும் அவளை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

விஷயம் கேள்விப்பட்டு சரசுவும், நிரஞ்சனும் வருவார்கள் என்று எதிர் பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பாட்டியின் வீடு, தோட்டம் என அனைத்து சொத்தையும் விற்றுவிட்டு தர்மபுரியில் இருந்த தன் தந்தையின் வீட்டையும் விற்றுவிட சொன்னாள். சகா தேவன் எவ்வளவோ சொல்லியும் தான் எல்லாவற்றையும் மறக்கவேண்டும் இதெல்லாம் இருந்தால் பார்க்கும் போது

அவர்கள் நினைவு வரும் என்றவளை மறுக்க முடியாமல் வேண்டிய நடவடிக்கை மேற்கொண்டார் சகாதேவன்.

அதற்கான உரிமை அனைத்தையும் ரிஷியின் பெயருக்கு கொடுத்தவள் தன் படிப்பை தொடர போவதாக சொல்ல இனி அவள் தனியாக இருக்க வேண்டாம் என்று வைதேகி சொன்னதை ஏற்காமல் தன் முடிவில் உறுதியாக இருக்க சகா தேவனும், ரிஷியும் வைதேகியை சமாளித்து அவளை பெங்களூர் அனுப்பி வைத்தனர். படித்து முடித்துவிட்டு வந்தவள் மீண்டும் ஹாஸ்ட்டலில் தங்கிக்கொள்வதாக சொல்ல அவள் ஏதோ காரணத்துடன் சொல்வதாக நினைத்த ரிஷி அவன் மனதிற்கு பிடிக்காத போதும் அவளுக்காக தன் பெற்றோரிடம் பேசி சம்மதம் வாங்கி நல்ல ஹாஸ்ட்டலில் சேர்த்தும் விட்டான்.

எல்லா நினைவுகளையும் சற்று ஒதுக்கிவைத்து தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் நேரத்தில் நிரஞ்சனின் வரவு அவளுக்கு தலைவலியை கொடுத்தது. அவனுக்கு ஏன் இன்னும் இந்துவுடன் கல்யாணம் ஆகவில்லை? என்ற குழப்பமும் மனதில் சேர்ந்துகொள்ள உண்மையிலேயே தலைவலிக்க மாத்திரை ஒன்றை போட்டுக்கொண்டு படுத்தவளுக்கு நாளைக்கு வரப்போகும் சச்சு அத்தையை சுற்றியே எண்ணம் ஓடியது.

## அத்தியாயம்–12

“வாங்க வாங்க, பிரயாணம் எப்படி இருந்தது?” என்று வைதேகி அன்புடன் விசாரிக்க

“எல்லாம் சௌகர்யமாக இருந்ததும்மா, திரும்ப நம்ம ஊரு மக்களை பார்க்கவே சந்தோஷமா இருக்கு” என்றார் சரசு.



வைதேகி அன்புடன் அவரை உபசரித்து தன்கணவரையும், மகனையும் அறிமுகம் செய்துவைத்தார். “என் மருமக இல்ல. அவ தான் இவங்களை விட ரொம்ப முக்கியமான ஆள். அவளை பார்த்தா ரொம்ப சந்தோஷப்படுவீங்க” என சிரிப்புடன் சொன்னார். ரிஷி முதலிலேயே ரஞ்சன் நித்திலா இங்கிருப்பதை தன் அம்மாவிடம் சொல்லவில்லை என்றும் அவளை எதிர்பாராமல் சந்திக்க வைக்கணுமாம் என்று சொல்லி இருந்ததால் நித்திலாவின் பெயரை சொல்லவில்லை.

“நீங்க இன்னைக்கு எதுவும் சமைக்க வேண்டாம். எல்லாம் நம்ம வீட்டில் தான்”

“உங்களுக்கு எதுக்குங்க வீண் சிரமம்?”

“சிரமமா அதெல்லாம் ஒன்னும் இல்லை. நீங்க அப்படியெல்லாம் நினைக்காதீங்க” என்று வைதேகி சொல்ல

“ஆன்ட்டி, பயப்படாதீங்க எங்க அம்மா எப்போதும் இப்படிதான். அவங்க சமையலை சாப்பிட்டு நாங்க பாடுபடுவது போதாதுன்னு வீட்டுக்கு வருபவர்களையும் படுத்திஎடுப்பாங்க. இவங்க சமையலுக்கு பயந்தே எங்க மாமா பொண்ணு ஹாஸ்ட்டல்ல இருக்கானா பாருங்க” என்று சொல்ல அனைவருக்கும் சிரிப்பு வந்தது.

“கிண்டலை பாரு. என்னை சீண்டலனா இவனுக்கு பொழுதே போகாது, இதில பாவம் அவளை வேற இழுக்கற“ என சிரிக்க

ரிஷியின் மொபைல் ஒலிக்க எடுத்தவன், “திங்க் ஆப் த டெவில்” என சொல்லிக்கொண்டே மொபைலை உயிர்ப்பித்தவன், “சொல்லும்மா நான் வீட்ல தானிருக்கேன்.

ரஞ்சனோட அம்மா வந்தாச்சு. எல்லோரும் பேசிட்டு இருக்கோம். நீ எப்போ வர?'' என்றான்.

"................. "

"இப்போ முடியாதா....?வேலை இருக்கா? வெயிட் அம்மாகிட்ட பேசு'' என வைதேகியிடம் கொடுத்தான்.

அவள் சொல்வதை கேட்டுக்கொண்டவர், "சரிம்மா. நாங்க இன்னைக்கு மதியம் கிளம்பி கோயமுத்தூர் போறோம். நைட் வந்திடுவோம் "

"................. "

"ஆமாம், ரிஷியும் வரான். நீ முடிந்தால் வா'' என சொல்லிவிட்டு போனை வைத்தார்.

"அவளுக்கு வேலை விஷயமா போகணுமாம் இன்னைக்கு வர முடியாதுன்னு சொல்ல போன் செய்திருக்கா'' என சொல்லிவிட்டு சரசுவிடம் பேச நிரஞ்சன் இதை நான் எதிர்பார்த்தேன் என்பது போல சலிப்புடன் புன்னகைத்தான். ஆனாலும் அவன் மனம் உன்னால் வராமல் இருக்க முடியாது நீ நிச்சயம் வருவாய் என சொல்லிக்கொண்டான்.

நிரஞ்சனின் நினைப்பை சிறிது கூட பொய்யாக்காமல் வரும் முன்பே ரிஷிக்கு போன் செய்து அவன் எங்கிருக்கிறான் என அறிந்துக்கொண்டவள் நிரஞ்சனும் சைட்டில் இருப்பதை உறுதிபடுத்திக்கொண்டு வந்தவள் கெஸ்ட்ஹவுசை நோக்கி நடந்தாள். நான்காண்டுகள் கழித்து பார்க்கபோகும் அத்தையின் வரவேற்பு எப்படி இருக்கும்? என ஆவல் இருந்தாலும் கூடவே ஒரு தயக்கமும் இருந்தது. தன் மேல் இன்னும் அதே பாசம் இருக்குமா..? இல்லை..? என்ன இல்லை? அதெப்படி



மாறும் என எண்ணிக்கொண்டே தாழிடாமல் இருந்த கதவை திறந்து உள்ளே சென்றாள்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு நிரஞ்சன் வந்திருப்பதாக எண்ணிய சரஸ்வதி,"அதுக்குள்ளே வந்துட்டியா ரஞ்சன்? நான் இங்கே கிச்சன்ல இருக்கேன்பா. காபி கொண்டுவரட்டுமா?'' என்ற கேள்விக்கு பதில் இல்லாமல் போக"என்னடா கொண்டுவரவா'' என்று மீண்டும் கேட்டார்.

"சச்சு அத்தை'' என்ற தயங்கிய குரல் காதில்விழ செய்துக்கொண்டு இருந்த வேலையை விட்டு திரும்பி பார்த்த சரஸ்வதி கிச்சன் வாசலில் நின்றிருந்த நித்திலாவை கண்டு ஒரு நொடி தயங்கி, "நி..நித்தி....'' என அழைக்க "அத்தை'' என்று ஓடிவந்து அவர் தோளில் முகம்புதைத்துக்கொண்டாள்.

நான்காண்டு பிரிவில் இருந்த இருவரின் வேதனைகளையும், துக்கங்களையும் கரைத்து அவர்கள் கண்ணீரில் வெளியேற்றினர். அவளின் பாட்டி, தந்தையின் மறைவுக்கு வருத்தம் தெரிவித்தார். தாங்கள் ஊரில் இல்லாததால் வரமுடியவில்லை என்றும் திரும்பி வந்ததும் விஷயம் அறிந்து தர்மபுரி வந்த போது நீ அங்கு இல்லை என்றும் சொல்ல அமைதியாக கேட்டுக்கொண்டாள்."நித்தி நீ எப்படி இங்கே வந்த? நான் இங்கே இருப்பது உனக்கு எப்படி தெரியும்?'' என்றார்.

"நான் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியவே தெரியாதா?'' என்று திகைத்தாள்.

"தெரியாது கண்ணம்மா. தெரிந்திருந்தால் உன்னை உடனே வந்து பார்த்திருப்பேனே'' என்றார் வருத்தத்துடன்.

"ஒஹ்..!! அப்பா இறந்ததுக்கு பிறகு நான் வைதேகி அத்தை வீட்டில் தான் இருக்கிறேன். நான் இங்கே இருப்பது உங்க பிள்ளைக்கு தெரியுமே அவர் சொல்லலையா?"

"என்னிடம் சொல்லவே இல்லையேடா. ஒரு வேலை ரகசியமா வச்சிருந்தானோ என்னவோ?" என்றார் சிரிப்புடன்.

"ரகசியமாம் பெரிய சிதம்பர ரகசியம்" என்றாள் எரிச்சலுடன்.

"முதல் முறை அத்தை வீடு தேடி வந்திருக்க என் கையால் உனக்கு பால் பாயாசம் செய்து கொண்டுவரேன்" என்று எழுந்த சரசுவின் பின்னாலேயே எழுந்தவள் அவரை பிடித்து உட்காரவைத்தாள்.

"அத்தை நீங்க இங்கயே உட்காருங்க இத்தனை நாள் நீங்க எனக்கு செய்து கொடுத்தீங்க. இன்னைக்கு ஒரு சேஞ்சுக்கு நான் செய்றேன் சாப்பிட்டு பார்த்துவிட்டு எனக்கு சாட்டிபிகேட் கொடுங்க" என்றவள் இருபது நிமிடத்தில் சுடசுட பால் பாயசத்துடன் வந்து டைனிங்கில் அத்தையுடன் அமர்ந்தாள்.

ஒரு ஸ்பூன் எடுத்து சாப்பிட்ட சரஸ்வதி, "நித்திமா சூப்பர்" என சொல்ல முகம் முழுதும் சிரிப்புடன் குனிந்து இரண்டு வாய் அருந்தியவள் ஏதோ தோன்ற திரும்பி வாசல்பக்கம் பார்க்க அங்கு கண்கள் இடுங்க கேலி புன்னகையுடன் அவளை பார்த்தபடி நின்றிருந்த நிரஞ்சனை கண்டதும் அவள் புன்னகை மறைந்தது.

நித்திலாவின் பார்வையை தொடர்ந்த சரசுவின் பார்வை மகன் மீது விழ அவனும் சிரிப்புடன், "என்னம்மா உங்க மருமகளை பார்த்தாச்சா? சந்தோஷமா?" என நித்திலாவை பார்த்துக்கொண்டே கேட்டான்.



"திருட்டுப்பயலே, என்னிடம் கடைசிவரை மூச்சே விடலையே" என பொய்யாக மிரட்ட

"நான் சொல்லி இருந்ததால் இப்படி ஒரு எதிர்பாராத சந்தோஷத்தை மிஸ் பண்ணி இருப்பீங்க இல்லையா?" என சொல்ல ஆமென்பது போல சரசுவும் சிரித்துக்கொண்டார்.

"உங்க ரெண்டு பேருக்கு மட்டும் பாயசமா? எனக்கு இல்லையா?"

"நீ உட்கார் நான் கொண்டுவரேன்" என்று தன் மகனுக்கு எடுத்துவந்து கொடுத்தார்.

ஒரு வாய் ருசித்தவன், "ம்ம்.....! டெலிஷியஸ் தேங்க்ஸ்மா" என்றான் சிரிப்புடன்.

"நீ தேங்க்ஸ் உன் பக்கத்தில் இருப்பவளுக்கு தான் சொல்லணும் அவ தானே செய்தது"

"ஹய்யோ..! அப்போ தேங்க்ஸ் மட்டும் சொல்லகூடாதே" என குறும்புடன் அவளை பார்த்து சிரிக்க நித்திலாவிற்கு எரிச்சலில் தான் ஏதாவது சொல்லிவிடுவோமோ என இறுக வாய்மூடி அமர்ந்திருந்தாள்.

"இருட்ட ஆரம்பிக்குது நான் போய் துணிகளை எடுத்திட்டு வரேன்" என்ற சரஸ்வதி நித்திலாவும் எழுவதை பார்த்து, "நீ உட்கார் நான் போய் கொண்டுவரேன்" என சொல்லிவிட்டு சென்றுவிட நித்திலா ஷோகேசின் அருகில் சென்று அங்கிருந்த போடோக்களை பார்ப்பது போல நின்றாள்.

நித்திலாவையே ஊடுருவிய விழிகளுடன் நிரஞ்சன் அவள் பின்னால் வந்து நின்றதும் அங்கிருந்து விலக

முயன்றவளிடம், "ஆடு உறவு, குட்டி பகையா?" என சீரலான குரலில் கேட்க

திரும்பி அவனை பார்த்தவள்,"நான் யாரையும் பகையா நினைக்கல. நான் தான் சிலருக்கு வேண்டாதவளா ஆகிட்டேன்"

"அப்படி நினைத்தவர் யாரோ?" என்றான் அலட்சியமாக.

"அது அவங்க மனசுக்கே தெரியும்."

"எனக்கு தெரியாதே?"

"அதுக்கு என்னை என்ன செய்ய சொல்றீங்க?"

"யாருன்னு என்னிடம் சொல்லலாமே"

"சொன்னாமட்டும்...?"

"யாருன்னு சொன்னா நான் போய் அவங்களுக்கு உன் அருமை பெருமையெல்லாம் எடுத்து சொல்லி புரியவைப்பேன்"

"ஆமா அதை புரியவைக்க தானே நீங்க இங்கே வந்திருக்கீங்க? போய் வேலைய பாருங்க சார்"

"சாரா...! நானும் வந்த நாளா பார்க்கிறேன் எங்கே கத்துகிட்ட இந்த சா...ரை?" என்றான் கடுப்புடன்.

"பின்னே மூணாவது மனுஷனை சார்ன்னு தானே கூப்பிடுவாங்க?"

"அப்படியா..."என்றவன் அவளருகில் வந்து"நான் மூணாவது மனுஷனா இல்லையான்னு புரியவைக்கட்டுமா" என்று கேட்ட அவன் மூச்சுகாற்று அவள் காதில் உரச சட்டென விலகினாள்.



"இந்த மிரட்டும் வேலையெல்லாம் வேண்டாம். இதுக்கெல்லாம் பயப்பட நான் பழைய நித்திலா கிடையாது" என கோபத்துடன் சொல்ல முயன்றாள். ஆனால் சொல்லவந்தது பாதி அவள் தொண்டையிலேயே நிற்க மீதி காற்றாக வர நிரஞ்சனுக்கு சிரிப்புதான் வந்தது.

"நித்திலா" என்று மென்மையாக அழைத்தபடி அவளருகில் வரவும், சரசு துணிகளுடன் உள்ளே நுழைந்தார்.

"ரெண்டு பேரும் இன்னுமா இந்த பாயாசத்தை குடிக்காம வச்சிருக்கீங்க. ஆறி அவலா போச்சு" என்றார்.

"ஆறி சாப்பிட்டாலும் அது தனி ருசிம்மா"என்றவன் ஒரு கிண்ணத்தை எடுத்து சாப்பிட நித்திலா அவனையும் அவன் கையில் இருந்த கிண்ணத்தையும் பார்த்து மலங்கமலங்க விழித்தபடி நின்றாள்.

"சாப்பிடு நித்திலா அப்புறம் எனக்கு வயிறு வலிக்கும்"என்று சொன்னவன் அப்போது தான் கவனித்தான். தன்னுடைய கிண்ணம் மேசையிலேயே இருக்க தான் நித்திலா சாப்பிட்டுக்கொண்டு இருந்த கிண்ணத்தில் இருந்த பாயாசத்தை சாப்பிடுவதை. தன்னை முறைப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தவளிடம் "சாரி" என ஒரு அசட்டு சிரிப்பை உதிர்த்தவன் தன் பாயாச கிண்ணத்தை எடுத்து உண்டவன் நித்திலாவை பார்த்து, "என்ன சொல்லு இதுக்கு முன்னால் சாப்பிட்ட பாயாசத்தைவிட இந்த கப் பாயாசம் கொஞ்சம் ஸ்வீட் கம்மி" என சொல்லிவிட்டு உண்ண, நித்திலாவின் நிலையோ கொடுமையாக இருந்தது. ஒன்றன் பின் ஒன்றாக அதிர்ச்சியும், குழப்பமும் வந்தால் அவளும் என்ன செய்வாள்...?

## அத்தியாயம்–13

மறுநாள் காலையில் தன் மொபைலில் வந்த அழைப்பை எடுத்ததும் எதிர்முனையில், "ஹலோ மேடம் குட் மார்னிங்" என்ற நிரஞ்சனின் உற்சாகமான குரலை கேட்டதும் உள்ளுக்குள் ஒரு தென்றலின் சுகம் தெரிய அவளையும் அறியாமல், "குட் மார்னிங்" என்ற குரலில் குழைவு இருந்தது.

"ஆபீஸ் கிளம்பியாச்சா? "

"ம்ம்...."

"சரி வெயிட் பண்றேன் நீ வா உன்னிடம் பேசணும்" என்றான் விளங்காத குரலில்.

உள்ளுக்குள் கோபம் துளிர்க்க, "இங்க பாருங்க உங்ககூட வர எனக்கு நேரம் இல்லை. எனக்கு வேலை இருக்கு" என்றவள் பட்டென போனை வைத்தாள். அவன் என்ன நினைக்கிறான் தான் என்ன நினைக்கிறோம் என்று அவளுக்கே புரியவில்லை.

பெருமூச்சுடன் வந்தவள் டைனிங்கில் அமர்ந்து சாப்பிட ஆரம்பிக்க, "ஹலோ அங்கிள், ஹலோ ஆன்ட்டி குட் மார்னிங்" என்றபடி ஹாலில் வந்து நின்றவனை கண்டவளுக்கு உணவு தொண்டைக்குழிக்குள் இறங்கவே இல்லை.

"வாப்பா ரஞ்சன். உட்கார் சாப்பிடலாம்" என்று வைதேகி சொல்ல

நித்திலாவின் அருகில் அமர்ந்தவன் "இப்போதான் ஆன்ட்டி சாப்பிட்டேன். அங்கிள், நித்திலா கூட பேசணும் கூட்டிட்டு போகட்டுமா?" என்றான்.



வந்தவன் நேராக சகாதேவனிடமே கேட்கவும் தொண்டையில் அடைத்த உணவு புரையேற நித்திலா இருமிக்கொண்டே அவனை பார்த்தாள். தண்ணீரை எடுத்து குடித்தவளிடம், "மெதுவா சாப்பிட்டுவிட்டு வா. ஒன்னும் அவசரம் இல்லை. நிதானமா போய் பேசலாம்" என்று நிரஞ்சன் மேலும் சொல்ல நித்திலா கலக்கத்துடன் தன் அத்தை மாமாவை பார்த்தாள்.

சகாதேவன், "கூட்டிட்டு போப்பா. அவளும் சைட்டுக்கு தான் புறப்பட்டா" என்றதும் நன்றி கூறி பேசிவிட்டு நித்திலா வரவும் கிளம்பினான்.

வேலை நடக்கும் சைட்டின் அருகில் அமைத்திருந்த சிறிய அலுவலக அறைக்கு அழைத்து சென்று அமரவைத்துவிட்டு பணியாளை அழைத்து ஏதோ சொல்லிவிட்டு வந்து அமர்ந்தவன் ஒன்றும் பேசாமல் இருக்க, "என்ன சார் ஏதோ பேசணும்னு சொன்னீங்க..." என சொல்ல

"கன்ஸ்ட்ரக்ஷன் பத்தி பேசணும், ஏன் நீ என்ன நினைச்ச..?" என குறுகுறு பார்வையால் துளைத்தபடி இருக்க நித்திலாவிற்கோ தான் பேசாமல் இருந்திருக்கலாம் என்று தோன்றியது. அடுத்த நொடியே அவன் பார்வை மாறி வேலை பற்றி பேச ஆரம்பித்தான். தன் லாப்டாப்பில் டிசைன் செய்திருந்த மாடலை எடுத்து காட்டி, "பாரின்ல இப்போ மலைவீடு பேமஸ் ஆகிட்டு வருது, மலைவீடுன்னா மலையை குடைந்து வீடு கட்டுவது. நம்ம ஊர் பார்ம் ஹவுஸ் மாதிரி"

"அதுக்கு நாம கவர்ன்மென்ட் பெர்மிஷன் வாங்கணும் இல்லையா?'

"எஸ் கரெக்ட்" என்றான்

ஏற்கெனவே காடுகளை அழித்து பண்ற அட்டகாசம் போதாதுன்னு மலையை குடைந்து வீடு வேற கட்டனுமா? இயற்கையை இன்னும் எவ்வளவு அழிக்கனுமோ அவ்வளவும் செய்வோம். அப்புறம் வெள்ளம் வருது, சுனாமி வருது, உலகமே வெப்பமாகுதுன்னா ஏன் ஆகாது. நாம மரம் நட்டு வளர்க்கலைன்னாலும் பரவாயில்லை. இருக்கும் மரம் எதையும் அழிக்ககூடாதுன்னு சொல்லி ஏற்கெனவே சொல்லி இருக்கேனே" என்று மூச்சு வாங்க கோபத்துடன் சொல்லி முடித்தவளிடம் அருகில் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினான்.

பாட்டிலை வாங்காமல் அவனையே பார்த்தவளிடம், "நான் ஒரு அவசரகுடுக்கை எதையும் சரியா தெரிஞ்சிக்காமல், புரிஞ்சிக்காமல் பேசுவேன்னு திரும்ப திரும்ப உன்னை நீயே வெளிபடுத்திக்கிற" என்றான் சலிப்புடன்.

"யாரு நான் அவசரகுடுக்கையா?" என்று கோபத்துடன் குரலுயர்த்த

"பின்னே, இன்னும் நான் விஷயத்துக்கே வரல அதுக்குள்ளே நீயே பேசினா எப்படி? நான் சொல்வதை முதலில் ரெண்டு காதையும் திறந்து வச்சி கேளு, நாம இப்போ மலையை குடைய போவதில்லை இங்கே வா" என அழைத்துக்கொண்டு போனவன் சற்று தூரம் தள்ளி இருந்த சிறுபாறைகள் இருந்த இடத்தை காட்டினான்.

"இந்த பாறைகள் பத்தடி உயரத்திற்கு சின்ன குன்று மாதிரி இருக்கு இல்லையா இதுக்கு பக்கத்திலேயே நாம ஒரு பெரிய ஹால் மாதிரி போட்டு இன்டோர் கேம்ஸ்



வைக்கலாம் அதோடு பில்டிங்கையும் இந்த பாறைகளையும் சேர்த்து பார்க் அமைத்தால் அது மலையை குடைந்து கட்டினது போலவும் இருக்கும், அதே நேரம் மேலே பார்க்கும் அமைத்துவிடலாம்" என்றான்

"வெரி குட் ஐடியா நீரு. அப்படியே செய்திடலாம்" என புன்னகைத்தவளை கண்கள் பளபளக்க பார்த்தான். தான் சொன்ன வார்த்தையை உணர்ந்தவள் தலைகுனிந்து செய்வதறியாமல் உதட்டை கடித்தபடி நின்றவளை ஆழமான பார்வையால் ஊடுருவினான்.

நிமிர்ந்த நித்திலா அவன் பார்வையின் தாக்கத்தில் மனம் விதிர்க்க, அவன் தோள்சாய ஆசை வந்தது. அவள் கண்களில் ஏக்கம் படர அதை உணர்ந்தவன், "நித்திலா என்ன ஆச்சு உனக்கு? ஏன் என்னிடம் ஒதுங்கி போற?" என அவளருகில் வந்து இருதோள்களையும் பற்றியதும் ஒரு உதறலுடன் அங்கிருந்து அகன்றாள்.

ஆபிஸ் அறைக்கு வந்து அமர்ந்தவளால் தாங்கவே முடியவில்லை. தன் மனதில் இருந்து நெடுந்தூரம் விலக்கி வைத்துவிட்டதாக எண்ணி இருக்க அவன் அருகாமை தன்னை இவ்வளவு பாதிக்கும் என்று அவள் எண்ணவே இல்லை. தன் நேசம் இன்னும் கருகவில்லை, வாடிபோய் இருக்கிறது, அதை அவனின் அருகாமை தரும் இதம் எங்கே மலரச்செய்துவிடுமோ என்று மனதிற்குள் பயம் ஊற்றெடுக்க, கண்களில் நீர் துளிர்க்க ஆரம்பித்தது.

நிரஞ்சனுக்கோ எதையுமே விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் கண்களில் காதல் தெரிந்ததும், தன் பேரை சொல்லி மனதில் இருப்பதை சொல்லாமல் சொல்லிவிட்டவளால் தன்னை ஏற்க எது தடையாக இருக்கிறது என்று குழம்பினான். வாயை திறந்து

அவளாகவும் சொல்லவதில்லை, நானாக கேட்க நினைத்தாலும் முகத்தை பார்த்ததும் ஓடிப்போய் அழவேண்டியது. அப்படி என்ன விஷயத்தை போட்டு குழப்பிட்டு இருக்காளோ? என எரிச்சலுடன் ஆபிஸ் அறைக்கு வந்தவன் அவள் அழுதுக்கொண்டு இருப்பதை பார்த்ததும் முகம் இறுக கார் சாவியை எடுத்துக்கொண்டு காருக்கு செல்ல, நித்திலாவும் கண்களை துடைத்துக்கொண்டு பின்னாலேயே சென்றாள்.

வீடுவந்ததும் போர்ட்டிகோவில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்த வைதேகி, சரசு இருவரையும் கண்டதும் புன்னகைத்தபடி அவர்களருகில் சென்றாள் நித்திலா. சில வார்த்தைகள் பேசிவிட்டு நித்திலா உள்ளே செல்ல சரசுவும், நிரஞ்சனுடன் வீட்டிற்கு கிளம்பினார்.

நிரஞ்சன் உடைமாற்றிக்கொண்டு சாப்பிட அமர பரிமாறிக்கொண்டே சரசு வைதேகி குடும்பத்தை புகழ்ந்து பேசிக்கொண்டு இருந்தார். "எவ்வளவு வசதி இருக்கு ரஞ்சன் ஆனா ரொம்ப தன்மையானவங்க. அவங்க பையனை பத்தி அவ்வளவு பெருமை அவங்களுக்கு. படிப்பை முடித்ததுமே பொறுப்பை அவன் எடுத்து கம்பெனியை அவ்வளவு அழகா நிர்வாகம் செய்றானாம். நம்ம நித்திலா ஒரு நல்ல குடும்பத்துல தான் மருமகளாக போறா" என சொல்ல

"என்னம்மா சொல்றீங்க" என நிரஞ்சன் திடுக்கிட்டு பார்த்தான்.

"ஆமாம்ப்பா, ரிஷிக்கு நித்திலாவை கல்யாணம் செய்துவைக்க போறாங்களாம். நாலு வருஷம் முன்னமே முடிந்து இருக்கவேண்டியது நடுவில் ராமு அண்ணன் இறந்ததால் அப்போதைக்கு இந்த பேச்சை நிறுத்தி



இருக்காங்க. அதோடு நித்திலாவுக்கு இப்போதான் கல்யாண யோகம் வந்திருக்காம். இந்த ரிசாட் முடித்ததும் அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணம்னு சொல்லிட்டு இருந்தாங்க. ஹூம்ம்...! நானும் தான் நினைச்சேன், நித்திலா நம்ம வீட்டுக்கு மருமகளா வரணும்னு அவங்க பாட்டிகிட்ட கூட பேசினேன். ஆனா நீ தான் நான் சொல்ல வந்த போது யாரோ ஒரு பொண்ண காதலிக்கறதா சொல்லி என்னை பேசவிடாம செய்துட்ட. அதுக்கப்புறம் நானும் அவங்ககிட்ட ஏதும் பேசல, அவங்களும் புரிஞ்சிகிட்டாங்களோ என்னவோ என்னிடம் பேசும்போது ஒருவார்த்தை கூட கல்யாணம் பத்தி பேசல" என சொல்லிக்கொண்டே போக நிரஞ்சன் செய்வதறியாமல் திகைத்திருந்தான்.

அறைக்கு வந்தவனால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. அம்மா சொன்ன பெண் நித்திலாவா...? என நினைத்தவனுக்கு வேறொருவனுடன் நித்திலாவை இணைத்துபார்க்க முடியவில்லை. ரிஷியுடன் கல்யாணம் எப்படி? நித்திலா சம்மதித்துவிட்டாளா? இல்லை இருக்காது, நித்திலா மனதில் இன்னும் நான் இருக்கிறேன். அதற்கு இன்று நடந்ததே சாட்சி. முதலில் நித்திலாவிடம் பேசி அவளுக்கு எல்லாவற்றையும் புரியவைத்து அதன்பிறகு வீட்டில் பேசவேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டான்.

## அத்தியாயம்–14

நிரஞ்சன் நித்திலாவை நெருங்க ஒரு அடியெடுத்து வைத்தால் நித்திலா அவனிடமிருந்து விலக நான்கடி வைத்தாள். நிரஞ்சனின் அருகாமையில் தன் மனம் அலைபாய்வதை உணர்ந்தபின் நித்திலா நிரஞ்சனை

தவிர்க்க ஆரம்பித்தாள். நீங்களும் வந்து நம்ம ரிசாட் எப்படி கட்டி இருக்கு என்று பாருங்கள் என தன் அத்தையை அழைத்துக்கொண்டோ, ரிஷி இருக்கும் நேரம் அப்படி அவன் வரமுடியாத நாளில் நிரஞ்சனுடன் தனியாக இருக்கும் தருணத்தை தவிர்த்தாள். ஏதாவது பேசுவதாக இருந்தாலும், அருகில் ஆட்கள் இருக்கும்படி பார்த்துக்கொண்டாள்.

இவை அனைத்தும் புரிந்திருந்தாலும் நிரஞ்சன் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தான். அவளின் ஒவ்வொரு செயலும் என் நெஞ்சில் நீ நீக்கமற நிறைந்திருக்கிறாய் என சொல்லாமல் சொல்லிக்கொண்டு இருந்ததை உணர்ந்தே இருந்தான். எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என செய்து விஷயத்தை மேலும் சிக்கலாக்கிக்கொள்ளாமல் நிதானமாக கையாளவேண்டுமென பொறுமையை கடைபிடித்தான்.

அன்று ரிஷியுடன் நித்திலாவும் சைட்டிற்கு வந்திருந்தாள். நிரஞ்சன் கட்டிடத்தின் பின்புறம் இருப்பதை தெரிந்துக்கொண்டு அங்கே சென்றனர். ஆறேழு சிறுவர்கள் புடைசூழ அவர்களுக்கு ஈடாக முழங்காலிட்டிருந்தவனின் தோளில் ஒரு வாண்டு தொங்கிக்கொண்டு இருக்க அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துக்கொண்டு இருந்தவன் இருவரையும் கண்டதும் சிறுவர்களிடம் விளையாட சொல்லிவிடு எழுந்துவந்தான்.

"என்னப்பா குட்டிஸ் கூட அரட்டையா ?" என்றபடி வந்தான் ரிஷி.

"இவங்க கூட பேசிட்டு இருந்தா வேலை டென்ஷன் பாதி குறைஞ்சா மாதிரி ஆகிடும்" என்றான் நிரஞ்சன்.



"குழந்தை பருவம் தான் உண்மையிலேயே மகிழ்ச்சியான பருவம் இல்ல"

"கண்டிப்பா. சூதுவாது இல்லாமல் வெள்ளை மனசோடு பழகுவது குழந்தைங்க தானே. நினைத்தால் பழைய விஷயங்களை மறப்பதும், உள்ளே ஒன்னும் வெளியே ஒன்னுமாக பேசி பழக அவங்களுக்கு தெரியாதே" என்று சலிப்புடன் சொன்னவன் நித்திலாவை பார்க்க, வரும்போதே சோர்ந்து போய் வந்தவள் முகம் கடுகடுவென மாறியது.

"அத்தான் நீங்க பேசிட்டு வாங்க நான் முன்னால் போகிறேன்" என்றவள் விறுவிறுவென அங்கிருந்து அகன்றாள்.

"ஓகே நித்தி" என்ற ரிஷி வேறெங்கோ கவனத்தை செலுத்தி இருக்க நிரஞ்சன் தன்னையும் மீறி வெளிவந்த வார்த்தைகளை எண்ணி தன்னையே நொந்துக்கொண்டவன் கோபத்துடன் செல்பவளையே பார்த்தான்.

சிறிது நேரத்தில் ரிஷியுடன் பேசிக்கொண்டே உள்ளே வந்தவன் ஒரு கட்டிடத்தை சுட்டிக்காட்டி,"நாம சோலார் பானல் இந்த பில்டிங் மேலே தான் அமைக்கனும். அதே போல கிச்சன் மேலேயும் வரும். எல்லா ரூமிலும் சோலார் லைட் பொறுத்த சொல்லி இருக்கேன்" என விளக்கிக்கொண்டு இருந்தான்.

"அத்தான் மேலே போய் பார்க்கலாமா ?" என நித்திலா ரிஷியை கேட்டாள்.

"போகலாம், பட் மேலே இன்னும் நாலு படி கட்டனும். ஜென்ஸ் நாங்க ஏறிடுவோம். ஆனால் உன்னால்

ஏறமுடியாது" என்று நிரஞ்சன் சொன்னதும் இருந்த கோபம் அவளுக்கு மேலும் ஏறி ஆத்திரத்துடன் அவனை பார்த்தாள்.

"ஏன் ஆம்பளைங்க என்ன சூப்பர் மேனா? பறந்து போய் பார்க்க. நீங்க எப்படி போவீங்களோ அப்படியே நானும் வந்து பார்ப்பேன்" என்றவள் படியை நோக்கி நடந்தாள்.

இருவரையும் சுவாரஸ்யமாக பார்த்த ரிஷி சிரிப்புடன் நிரஞ்சனை பார்த்து தோளை குலுக்கிவிட்டு அவளை பின்தொடர நிரஞ்சனும் உடன் சென்றான்.

மேலே சென்ற நித்திலா திருதிருவென விழித்தபடி நின்றுக்கொண்டு இருந்தாள். மேலே கடைசி நான்கு படிகள் கட்டபடாமல் மேலிருந்து ஒரு கயிறும், பக்கவாட்டில் ஒரு கட்டையும் மட்டும் இருக்க இதை பிடித்துக்கொண்டு எப்படி ஏறுவது? அவனிடம் வீராப்பாக பேசிவிட்டு வந்துவிட்டோமே என தவிப்புடன் நின்றவளின் பின்னால் இருவரும் வந்து நின்றனர்.

அவளின் நிலையை கண்டு வந்த சிரிப்பை அடக்கிய ரிஷி, "என்ன சூப்பர் வுமன் இன்னும் மேலே போகாமல் யாருக்காக காத்திருக்கிறீர்கள்?" என வினவ நித்திலா தன் பொருமலை மறைத்துக்கொண்டு நின்றாள்.

ரிஷியை தாண்டி முன்னால்வந்த நிரஞ்சன், "இரு நித்திலா நான் முன்னால் போகிறேன்" என்றவன் லாவகமாக கயிறை பற்றிக்கொண்டு ஒரே தாவலில் மேலே சென்றுவிட நித்திலா கண்கள் விரிய பார்த்தாள். வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம் இப்போ இப்படிதான் தாவி ஏறணுமா? என மலைத்து நின்றாள்.

ரிஷியும் அடுத்து ஏறிவிட, நித்திலா இப்போது ஏறியே ஆகவேண்டும் என்ற சூழ்நிலையில் ஒரு கையில் கயிற்றை



பற்றினாள். அந்தநேரம் பார்த்து ரிஷி நகர்ந்துவிட அவனிடம் உதவிகேட்டு மேலே சென்றுவிட எண்ணியவள் அங்கிருந்து அகன்றவனை பார்த்துக்கொண்டே நின்றாள். நிரஞ்சனோ நித்திலாவையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

"இவனாவது அந்த பக்கம் போகிறானா பாரேன். மேலே ஏறும் போது ஏடாகூடமா ஏதாவது ஆனால் அவ்வளவுதான் மானமே போய்விடும்" என முணுமுணுத்தவள் மனதில் தைரியத்தை ஒன்று திரட்டி கயிற்றை இறுக பற்றி மற்றொரு கையால் பக்கவாட்டில் இருந்த கட்டையை பிடித்துக்கொண்டு ஒரு காலை வைத்து மறுகாலை தூக்கவும் அவள் காலணி வழுக்கவும் கயிற்றை பிடித்திருந்த பிடி நழுவ இன்னைக்கு நாம விழுந்தோம் என்ற நினைப்பில் கண்களை இறுக மூடியவள் இன்னும் கீழே விழாமல் இருப்பதை உணர்ந்து கண்ணை திறந்து பார்க்க, அவள் முகத்தின் அருகில் நிரஞ்சனின் முகம். எப்படி? என எண்ணும்போதே ஒரு கையால் கயிற்றையும் மறுகையால் அவள் இடையையும் பற்றி இருந்த நிரஞ்சன் அவளை மேலே இழுத்து நிற்கவைத்தான்.

உதடுகடித்து நின்றிருந்தவளின் இடையிலிருந்து கரத்தை விலக்கிக்கொண்டவன், "நான் தான் சொல்லி இருக்கேன் இல்லையா நீ ஒரு அவசர குடுக்கைன்னு. இப்படி ஏதாவது ஆகும்னு தான் இங்கேயே நின்றிருந்தேன்" என்றவன் ஒற்றைவிரலால் அவள் முகம் பற்றி நிமிர்த்தி, "எந்த ஒருவிஷயம் செய்யும் முன்பாக யோசிக்கணும், இப்படி தப்பும் தவறுமா எதையும் செய்துவிட்டு வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை" என அறிவுறுத்தியவன் அவள் கன்னம் வருடிவிட்டு ரிஷியை நோக்கி செல்ல நித்திலாவின் உள்ளம் ஒவென்று உள்ளுக்குள்ளே அழுதது.

## அத்தியாயம்–15

நிரஞ்சனின் உழைப்பிலும், மேற்பார்வையிலும் படிப்படியாக வளர்ந்த கட்டிடம் இன்னும் இரண்டுமாதத்தில் மொத்தமாக தயாராகிவிடும் அளவில் இருந்தது. ஒவ்வொரு பகுதியாக முடிக்க முடிக்க நித்திலா தன் உள்ளலங்கார வேலைகளை துவங்கினாள். நித்திலா முடித்திருந்த ஒரு காட்டேஜை காண ரிஷியும் நிரஞ்சனும் சென்றிருந்தனர். உள்ளே நுழைந்ததும் ஹால் முழுதிற்கும் இயற்க்கை காட்சிகள் நிறைந்த வாட்டர் ப்ரூப் வால்பேப்பர் ஒட்டப்பட்டு நடுவில் வட்டவடிவிலான வெல்வெட் ப்ளோர் மேட் போடப்பட்டு ஒரு மூலையில் டீவியும், எதிர்பக்கம் சோபா செட்டும் போட்டிருக்க ஹாலிலிருந்து டைனிங் ஹால் போகும் இடத்திற்கு நடுவில் கிளாஸ் வொர்க் பார்ட்டிஷியன் அமைத்திருந்தாள்.

அன்று அலுவலகத்திலிருந்து வந்த ரிஷி நிரஞ்சனுக்காக காத்திருக்க வைதேகி, "ரிஷி ரெண்டு நாளா நான் உன்னிடம் கேட்டுக் கொண்டு இருக்கும் கேள்விக்கு பதில் சொல்லாம நழுவிக்கொண்டு இருக்க. இன்னைக்கு நீ எனக்கு பதில் சொல்லாமல் இங்கிருந்து போகமுடியாது" என்றார்.

"அம்மா, இப்போ நான் அவசரமா ரஞ்சன் கூட வெளியே போகணும். இதெல்லாம் நான் வந்து பேசறேன்" என்றான் சலிப்புடன்.

"அதெல்லாம் எனக்கு தெரியாது எனக்கு நல்ல பதிலை சொல்லிட்டு நீ உன் வேலையை பார்க்க போ" என்றார் கறாராக.

"இப்போ என்னம்மா அவசரம் இன்னும் கொஞ்சம் நாள் ஆகட்டுமே"



"இன்னும் கொஞ்சம் நாள்னா எப்போ நேரா அறுபதாம் கல்யாணம் பண்ணிக்கிறாயா?" என்றார் கோபத்துடன்

"வரவர நீங்க கூட நல்ல ஜோக்கடிக்கீறிங்கம்மா" என தன் அம்மாவிற்கு ஐஸ் வைத்தவன் நிரஞ்சன் வருவதை கண்டதும் "அம்மா ப்ளீஸ், ரஞ்சன் வந்தாச்சு நான் கிளம்பறேன் வந்து பேசறேன்"என நழுவ முயல அவன் கரத்தை பற்றி நிறுத்தினார்.

"ஹலோ ஆன்ட்டி என்ன உங்க பிள்ளைய விடாம பிடிச்சிட்டு இருக்கீங்க?" என சிரிப்புடன் வினவினான்.

"வா ரஞ்சன் வந்து உன் பிரெண்டுக்கு நீ கொஞ்சம் அட்வைஸ் பண்ணு"

"அட்வைஸ் தானே அதை யாருக்கு வேணும்னாலும் தாராளமா செய்யலாமே, எதை பத்தி அட்வைஸ் பண்ணனும்னு கொஞ்சம் சொன்னால் தேவலை."

"அட ஏனப்பா நீ வேற எங்க அம்மாதான் பொழுது போகலைன்னு ஏதாவது சொல்லுவாங்க நீ அதை பெரிசா எடுத்துகிட்டு, வா நம்ம வேலையை கவனிப்போம்" என ரிஷி சோர்வுடன் சொல்ல

"நீ சும்மா இருடா பேசாதே"என ரிஷியை அடக்கியவர், "ரஞ்சன் இவனுக்கு நித்திலான்னு எப்போவோ நானும் என் தம்பியும் பேசிமுடிச்சிட்டோம். நடுவில் என்னென்னவோ நடந்து போனதால் இவ்வளவு நாள் தள்ளிப்போன கல்யாணத்தை இப்போ நடத்திடனும்னு இருக்கோம். இன்னும் எவ்வளவு நாளைக்கு அவளையும் தனியாக விட்டுவைக்க முடியும். நித்தி இந்த வீட்டுக்கு மருமகளா வந்திட்டா எனக்கு ஒரு பெரிய நிம்மதி. அதை இந்த மடையன் புரிஞ்சிக்க மாட்டேன்றானே. நீ கொஞ்சம்

எடுத்து சொல்லகூடாதா?" என நிரஞ்சனிடம் தன் மனதில் இருந்ததை கொட்டிய வைதேகி செய்வதறியாமல் இறுகி நின்றிருந்தவனை பார்த்தார்.

"என்னப்பா நீயும் ஏதும் சொல்லமாட்டேன்ற?" என வைதேகி கேட்க

"ம்ம் நல்ல ஆளை பார்த்து பஞ்சாயத்துக்கு கூப்பிட்டீங்க. அவனே தன் மனசுல இருக்கும் பொண்ணு பேரை இத்தனை நாளா என்னிடமே சொல்லாமல் இருக்கான். கேட்டா அவ சின்ன பொண்ணு படிக்கிறா, கொஞ்சம் நாள் ஆகட்டும் நானே பேசிட்டு சொல்றேன்னு சொன்னான். கொஞ்சம் நாள் கழித்து கேட்டா இப்போ கல்யாண பேச்சையே எடுக்காதீங்கன்னு எரிஞ்சி விழுறான். அந்த கடவுளும் கண்ணு திறக்கல இவனும் வாயை திறக்கல" என தன் ஆற்றாமையை சொல்லி பெருமூச்சு விட

"அம்மா உங்க புலம்பலை கொஞ்சம் நிறுத்தறீங்களா?" என நிரஞ்சன் அடித்தொண்டயிலிருந்து சீறினான்.

"ஏதாவது மனசு தாங்காம நான் புலம்பிகிட்டு இருக்கேன் வேற என்ன பண்ணமுடியும்" என்றவர் வைதேகியிடம் "வைதேகியம்மா கோவிலுக்கு போய்ட்டுவந்தேன் பிரசாதம் கொடுத்திட்டு போகலாம்னு வந்தேன்" என குங்குமமும், சர்க்கரை பொங்கலையும் கொடுத்தார்.

பிரசாதத்தை வாங்கிக்கொண்ட வைதேகி ஆறுதலுடன், "கவலைபடாதீங்க சரசு நல்ல விஷயம் பேசும்போது கோவில் பிரசாதத்தோட வந்திருக்கீங்க. கூடிய சீக்கிரம் நம்ம பிள்ளைங்க கல்யாணம் நல்லபடியாக நடக்கும்" என சொல்ல சரசுக்கு என்னவோ அந்த கடவுளே நேரில் வந்து சொல்லியது போல முகம் சந்தோஷத்தில் விகசித்தது.



இது தான் நல்ல சமயம் என எண்ணிய ரிஷி யோசனையுடன் அமர்ந்திருந்த நிரஞ்சனை தன்னுடன் அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

"பார்த்தீங்களா சரசு விட்டா போதும்னு ஓடுவதை" என்று வைதேகி குறைப்பட்டுக்கொள்ள

"நீங்க ஏற்கெனவே பேசிமுடித்த கல்யாணம் தானே இப்போ ஏன் திரும்ப அவங்க கிட்ட சம்மதம் கேட்டுக்கொண்டு இருக்கீங்க. விஷயத்தை சொல்லிட்டு மண்டபத்தை பார்க்க வேண்டியது தானே" என்றார் சரசு.

"நாங்க ஏற்கெனவே பேசி இருந்தாலும் இதுவரை நித்திலாவிடம் நேரடியாக நான் பேசவில்லை. ரிஷிக்கே கொஞ்சம் நாளைக்கு முன்னால் தான் சொன்னோம்."

"நீங்க முதலில் நித்திலாவிடம் பேசுவது தானே?"

"இல்ல சரசு, நித்திலாவை கேட்டு அவ சம்மதித்த பின்னால் இவன் ஏதும் தகராறு செய்யகூடாதே. இந்த விஷயத்தை சொன்னதுமே அவன் சம்மதமும் சொல்லவில்லை வேண்டாம்னு சொல்லவில்லை. எனக்கு அதான் யோசனையா இருக்கு"

"அதுவும் சரிதான், ரிஷி தம்பியிடமே நீங்க முதலில் பேசுங்க" என்றவர் கிளம்பினார்.

## அத்தியாயம்–16

இரவு எட்டுமணிக்கு குன்னூரில் இருந்த ரெஸ்டாரென்ட் முன்பு ஆட்டோவில் வந்து இறங்கியவளுக்கு முக்கியமாக பேசவேண்டும் என ரிஷி

தன்னை இங்கே எதற்கு வரசொன்னான் என்ற யோசனையுடனே உள்ளே வந்தவள் ரிசர்வ் செய்திருந்த டேபிளில் அமர்ந்தாள். கண்களை சுழற்றி சுற்றுப்புறத்தை நோட்டம்விட்டாள். வெயிட்டர் கொண்டுவந்துவைத்த மெனு கார்டிற்கும் தண்ணீருக்கும் "தேங்க்ஸ்" என்று புன்னகை சிந்தியவள் மெனு கார்டை பிரித்து பார்வையை பதித்தாள்.

சிலநொடிகளில் தன் எதிரில் யாரோ அமரும் அசைவும், அரவமும் கேட்க மெனு கார்டை தழைத்து பார்வையை உயர்த்தியவள் எதிரில் அமர்ந்தவனை கண்டதும் உன்னை இங்கே எதிர்பார்க்கவில்லை என்று அவள் பார்வையும் அவளையறியாமல் கையிலிருந்து நழுவிய மெனு கார்டும் சொல்லாமல் சொல்லியது.

"நீ.. நீங்..க எ.ங்.கே இ.ங்.கே.. ?" என தட்டு தடுமாறி வறண்ட தொண்டையில் கேட்டுமுடித்தவள் உதட்டை நாவால் ஈரப்படுத்திக்கொண்டாள்.

"முதலில் தண்ணியை குடி" என அவள் பக்கம் தண்ணீரை தள்ளிவைத்துவிட்டு "ரிஷி முக்கியமாக பேசணும்னு வரசொல்லி சொன்னார்" என அவளின் கேள்விக்கும் பதிலளித்தான்.

தன்னை பேச வரசொன்னவன் எதற்கு நிரஞ்சனையும் வரவழைக்க வேண்டும்? வேலை விஷயம் பற்றி பேசுவதற்கு இல்லை அப்படியானால் ஒருவேளை தன்னை பற்றி ரிஷிக்கு தெரிந்துவிட்டதா? அதற்காக நிரஞ்சனுடன் பேச வரவழைத்திருப்பானா? என ஏதேதோ கற்பனையில் ஓட அதற்கு கடிவாளமிடமுடியாமல், இந்த பேச்சை எப்படி தவிர்ப்பது, பேசாமல் எழுந்து சென்றுவிடலாமா என்று தோன்றிய எண்ணத்தை கிடப்பில் போட்டுவிட்டு கீழே தெரிந்த நீச்சல் குளத்தை பார்த்தபடி பரிதவிப்புடன் அமர்ந்திருந்தாள்.



"சொல்லுங்க ரிஷி" என்ற நிரஞ்சனின் குரலுக்கு நிமிர்ந்து எதிரிலிருந்தவனை பார்த்தாள்."ஓகே, ஆமாம், இங்கே தான் இருக்கா"என பேசிவிட்டு போனை வைத்ததும்

"அத்தான் என்ன சொன்னாங்க" என்றாள் தடதடத்த இதயத்துடன்.

ஆழ்ந்து அவளை பார்த்தவன், "கொஞ்சம் நேரத்தில் வந்திடுவராம், அதுவரை உன் கூட பேசிக்கொண்டு இருக்க சொன்னார்" என்றான்.

அவன் சொன்னதுடன் சரி இருவருமே மற்றவருடன் பேசவும் இல்லை அதற்கான முயற்சியும் எடுக்கவில்லை. ரெஸ்டாரன்டிலும் அங்கொருவரும், இங்கொருவருமாக இருக்க அந்த ஏகாந்தமும் அவளுக்கு இறுக்கத்தை கொடுத்தது. நெற்றியை வருடுவதும், தன் கைக்கடிகாரத்தை பார்ப்பதுமாக நேரத்தை நெட்டி தள்ளிக்கொண்டு இருந்தாள்.

அவனோ தன் அருகாமையில் பரிதவிக்கும், அமைதியை இழக்கும் அவளின் அவஸ்தையை கண்டு ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும், ஏன் இப்படி மௌனமாக இருக்கிறாள் எதுவாக இருந்தாலும் கேட்டுவிடவேண்டியது தானே, இல்லை தானே கேட்டுவிடுவோமா? இன்னும் எத்தனை நாளைக்கு பொறுமை பொறுமைன்னு இருப்பது? இன்று எப்படியும் தன் மனதை திறந்து அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்ற முடிவுடன் தொண்டையை கனைத்துக்கொண்டு நிமிர்ந்து அமர்ந்தான்.

"ஹே நித்திலா எங்கே இந்த பக்கம்?" என்ற விசாரிப்புடன் பூஜை வேலை கரடியாக நுழைந்தவளை எரிச்சலுடன் பார்த்தான் நிரஞ்சன்.

தன்னை அழைத்தவளை பார்த்த நித்திலா,"ஹாய் சில்வியா அக்கா" என சொன்னாலும், ஐயோ எதுக்கு இப்போ இவங்க இங்கே வரணும்னு என அவள் பார்வை கேட்டது. அதற்குள் நித்திலாவின் எதிரில் அமர்ந்திருந்த நிரஞ்சனை பார்த்த சில்வியாவின் கண்களில் குறுகுறுப்பும், ஆர்வமும் சேர்ந்துக்கொண்டு நித்திலாவை துளைத்தது.

"இவர் மிஸ்டர்.நிரஞ்சன் எங்க ரிசார்ட்டை கட்டிக்கொண்டு இருக்கும் பில்டர்" என அறிமுகபடுத்துவதாக எண்ணி தன்னிலை விளக்கம் சொல்வது போல சொன்னாள்.

"ஓஹ்..!" என்ற அந்த ஒற்றை சொல்லில் ஓராயிரம் அர்த்தம் பொதிந்திருப்பதாக சில்வியா சொன்ன விதத்திலேயே எதிரிலிருந்த இருவருக்கும் புரிந்தது.

நிரஞ்சன் பக்கம் திரும்பியவள்,"ஹலோ சார் நான் நித்திலா தங்கி இருக்கும் ஹாஸ்ட்டலில் அவளோட பக்கத்து ரூமில் இருக்கேன்" என தன்னை தானே அறிமுகபடுத்திக்கொண்டவள் இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு நித்திலாவை ஓரப்பார்வை பார்த்துக்கொண்டே சென்றாள்.

சில்வியா சென்றதும், "சே.. இன்னைக்கு யார் மூஞ்சியில் முழித்தேனோ" என எரிச்சலுடன் முணுமுணுத்தாள்.

"எதுக்கு இப்போ உனக்கு இவ்வளவு எரிச்சல் வருது?" என பொறுமையாக கேட்டவனை எரிப்பது போல பார்த்தாள்.



"அவங்க அவங்களுக்கு வேலை இல்லை. வந்து இங்கே வெட்டியா உட்கார்ந்திருக்கும் நேரத்திற்கு ஹாஸ்ட்டலுக்கு போய் இருந்த ஏதாவது வேலையாவது பார்த்திருக்கலாம்."

"உன்னை ஒன்னு கேட்கனும் கேட்கட்டுமா?" என்றான் மிருதுவாக

என்னை என்ன கேட்கனும்? என்று அவன் முகத்தை பார்க்க அவனோ அவள் விழிகளை நேருக்கு நேராக பார்த்தான். அந்த பார்வையில் இருந்த வசீகரத்தில் கவரபட்டவளாக முகத்தில் இருந்த எரிச்சல் மறைந்து மிருதுவாக அவளையும் மீறி "ம்ம்" என்ற சொல் வந்தது.

"என்னோடு வந்துவிடுகிறாயா?" என்ற வார்த்தை சொன்னதும் அவள் முகத்தில் அப்பட்டமாக அதிர்ச்சி தெரிய "என்னது" என வேகமாக கேட்டுக்கொண்டே இருக்கையை விட்டு எழுந்து நின்றாள்.

சமாளித்த நிரஞ்சன்,"எதுக்கு இப்போ அதிர்ந்து போற முதலில் உட்கார்" என்றவன் அவள் அமர்ந்ததும் "என்னோட கம்பெனியில் வேலைக்கு வருகிறாயான்னு கேட்டேன்?"

முதலில் கேட்டதைவிட வேகமாகவும், சத்தமாகவும், "வாட்?" என முகத்தை சுளித்தவள் ஏளனத்துடன், "என்னையெல்லாம் வேலைக்கு சேர்த்துக்கொண்டு நீங்க எப்படி வேலைபார்ப்பீங்க? அந்த துன்பமெல்லாம் உங்களுக்கு வேண்டாம்" என்றவள் இறுகிய குரலில், "யாரிடமும் சம்பளத்துக்கு வேலை செய்யும் நிலைமை அந்த கடவுள் எனக்கு வைக்கவில்லை" என்று கோபத்தோடு சொன்னாள்.

"இந்த பதில் எனக்கு மட்டுமா? இல்லை" என இழுக்க

"ஒவ்வொருத்தருக்கு ஒரு பதிலா சொல்வாங்க எல்லோருக்கும் தான்."

"அப்போ நீ சென்னைக்கு சம்பளத்துக்கு வேலைக்கு போறேன்னு சொன்னது எனக்கு பயந்து ஊரைவிட்டு நீ போவது தெரியாம இருக்க தானே?" என கேட்டுவிட்டு கேள்வியாக புருவத்தை உயர்த்த நித்திலா இமைக்க மறந்தவளாக தவிப்புடன் அவனை பார்த்தாள்.

அந்த தவிப்பும், அவனின் கேள்வியும் அவளை கோபபடுத்த,"என்ன உளவு பார்க்கறீங்களா?"

தோளை குலுக்கியவன், "அப்படிதான் வச்சிக்க" என்றான் சாதாரணமாக.

"சே.. அத்தான் சொன்னாறேன்னு இங்கே வந்தேன். உங்களை பார்த்ததும் எழுந்து போய் இருக்கணும்" என சொல்லிக்கொண்டே தன் கைப்பையை எடுத்துக்கொண்டு கிளம்ப முயன்றவளின் செய்கையை உணர்ந்தவனாக எழுந்தவன் அவளருகில் வந்து அமர்ந்து அவள் கையை பற்றி அமரவைத்தான்.

"என்ன பண்றீங்க நீங்க, விடுங்க என் கையை" என சிடுசிடுத்தவளை தன் பார்வையால் அடக்கினான்.

இருவரின் சூடான மூச்சுக்காற்றும் மோதிக்கொள்ளும் நெருக்கத்தில் வந்தவன், "இதே மாதிரி வாயை மூடிகிட்டு உட்கார், இன்னைக்கு நான் தான் உன்னை ஹாஸ்ட்டலில் விடப்போறேன். ஒழுங்கா இப்படியே இருந்தா உனக்கு நல்லது. இடக்கா ஏதாவது செய்த இந்த நிரஞ்சனை பத்தி உனக்கு தெரியாது. நான் யாருன்னு



காட்டவைக்காதே" என்று நிதானமான குரலில் அதே நேரம் அழுத்தமாக சொல்லிமுடிக்க மருண்ட பார்வையுடன் அவனை பார்த்தவள் கோபம், ஆத்திரம், எரிச்சல், என பொங்கிவழிந்த உணர்வுகளை உள்ளுக்குள் அடக்கிக்கொண்டு நேரம் காலம் தெரியாமல் அழுகை வந்து தொலைக்க போகிறது என பல்லைகடித்துக்கொண்டு மறுபுறம்பார்த்தபடி திரும்பி அமர்ந்துக்கொண்டாள்.

## அத்தியாயம்–17

"சாரி சாரி, ரொம்ப நேரம் வெயிட் பண்ண வச்சிட்டேனா?" என கேட்டுக்கொண்டே வந்த ரிஷியை இருந்த ஆத்திரத்திற்கு அங்கேயே நாலு சாத்து சாத்தவேண்டும் என்று எழுந்த வேகத்துடன் திரும்பிய நித்திலாவின் பார்வை ரிஷியின் அருகில் நின்றிருந்த இளம்பெண்ணின் மீது சென்றது. அந்த பெண்ணை எங்கேயோ பார்த்த நினைவு வர எங்கே என யோசித்தவளுக்குள் ஆடிட்டர் ஆபீசுக்கு சென்றிருந்த போது தன் நண்பரின் மகள் என்றும் தன்னிடம் ஜூனியராக சேர்ந்திருக்கும் சாதாரண குடும்பத்துபெண் என அறிமுகபடுத்தியது நினைவுக்கு வருவதற்குள் ரிஷி அந்த ஆடிட்டர் பெண்ணுடன் அவளுக்கு எதிரில் அமர்ந்து அவளை அறிமுகபடுத்த ஆரம்பித்திருந்தான்.

"ரஞ்சன், மீட் மிஸ்.ரிதன்யா. எங்க ஆடிட்டரிடம் ஜூனியரா ப்ராக்டிஸ் பண்ணிட்டு இருக்காங்க. அதோடு என்னுடைய வருங்கால மனைவி" என சொல்லும்போதே அவன் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

அதுவரை, என்னதான் நித்திலா தன்னைத்தான் விரும்புகிறாள் என்ற தைரியம் இருந்தாலும், விட்டில் பெரியவர்கள் வேறு முடிவு செய்திருக்கிறார்கள், ரிஷியின்

மனதில் என்ன என்பது புரியவில்லை என்பது போன்ற தர்மசங்கடமான நிலைமை தவிர்க்கப்பட்டது குறித்து ஏற்பட்ட பெரும் விடுதலை உணர்வில், அவன் மனதில் அது வரை லேசாக உறுத்திக் கொண்டிருந்த ஒரு ஊவா முள் சட்டென்று தன் கூர்மையை இழக்க இலவம் பஞ்சு போல லேசானது.

திரும்பி நித்திலாவை பார்த்த நிரஞ்சன் அவள் கண்களில் தெரிந்த குறும்பும், இயல்பாக சிரித்த சிரிப்பும் கூடுதல் நிம்மதியுணர்வை தந்தன. அது அவன் முகத்தில் பெரும் சிரிப்பாய் மலர்ந்தது உற்சாகத்துடன் “ஹலோ மேம், நைஸ் டு மீட் யு” என்று புன்னகைத்தான். பதிலுக்கு ரிதன்யாவும் புன்னகைத்தாள்.

நிரஞ்சனை அறிமுகபடுத்தியவன் நித்திலாவிடம் திரும்பி “தன்யா இவங்க..” என ரிஷி ஆரம்பிக்க

அவனை முந்திய ரிதன்யா, “தெரியும், நித்திலா மேடம். உங்க கூட ஆபீஸ் வருவாங்களே பார்த்திருக்கேன்” என்றாள்.

“அது மட்டும் இல்ல எங்க வீட்டு விஐபி இவங்களுக்கு ஐஸ் வச்சா போதும் எங்க வீட்டில் உனக்கு ஆகவேண்டிய வேலை எல்லாம் சுலபமா முடிஞ்சிடும்” என்று சிரித்தான்.

ஒன்னும் தெரியாத குழந்தை மாதிரி முகத்தை வச்சிக்கிட்டு காதலெல்லாம் பண்ணிட்டாரா ஹீரோ என உள்ளுக்குள் சிரித்துக்கொண்டவள், “ஓஹ்..! இப்போ ஐஸ் வைக்க தான் என்னை வரவச்சிருக்கீங்களா? கொஞ்சம் கம்மியாவே ஐஸ் வைங்கப்பா. நிறைய ஐஸ் வச்சி என்னை ப்ரீஸ் பண்ணிடாதீங்க எங்க மாமா ரிசாட்டில் இன்னும் வேலை கொஞ்சம் பாக்கி இருக்கு. நான் அதை நல்லபடியா



முடிக்கணும்” என நித்திலா சிரிக்க மூவரும் அதில் இணைந்துக்கொண்டனர்.

“தன்யா, நித்திலா விளையாட்டுதனமா பேசுவா பட் வேலைன்னு வந்தால் சின்சியர் சிகாமணி” என சொல்ல தன்யா புன்னகையுடன் கேட்டுக்கொண்டாள்.

“போதுமே என்னுடைய புராணம். உங்களை பத்தி பேசவந்துட்டு எதுக்கு என்னைப்பற்றி பற்றி பேசணும். சொல்லுங்க சொல்லுங்க உங்க அமர காவியத்தை கேட்போம்” என்றாள் ஆர்வமாக.

“அதுக்கு முன்னால் நிரஞ்சனை அறிமுகபடுத்திடுவோம். தன்யா சார் தான் நம்ம ரிசாட் கட்டிகொடுக்கும் பில்டர்” என ரிஷி சொல்ல

“யங், டாலென்டட், ஆர்க்கிடெக்ட் அப்படின்னு என்னிடம் புகழுவீங்களே. அதை சொல்லாமல் விட்டுட்டீங்களே” என்றாள் ரிதன்யா

“மேடம் அவர் என்னை பாராட்டணும்னு சொல்றார் இதெல்லாம் நம்பிடாதீங்க” என சிரித்தான்.

“சார் எனக்கு உங்ககிட்ட கேட்கனும்னு நினைச்சிட்டே இருந்தேன். நிறைய பேர் தங்களோட கம்பெனிக்கு பேர் வைப்பதாக இருந்தால் அதுக்கு ஏதாவது காரணம் சொல்வாங்க. மூன் பில்டர்ஸ்ன்னு பெயர் வைக்க ஏதாவது ஸ்பெஷல் காரணம் இருக்கா?” என தன்யா கேட்டாள்.

புன்னகைத்த நிரஞ்சன், “இருக்கே, ரொம்பவே முக்கியமான காரணம். என்னுடைய வாழ்க்கையாகவே நினைச்சிட்டு இருக்கும் என் காதலியோட பெயரில் ஒரு பாதி” என சொல்லும்போதே அவன் முகம் சிவக்க, குரல்

நெகிழ்ந்து, கண்களில் காதல் வழிய, அவன் முகம் பளிச்சிட்டது.

உரக்க சிரித்த ரிஷி நித்திலாவிடம், "பார்த்தியா நித்தி எவ்வளவு லவ் இருந்தால் அவங்க பேரையும் வச்சிருப்பார்" என ரிஷியும் சிரிக்க ஒப்புக்கு சிரித்த நித்திலாவிற்கு இருவரின் பேச்சும் காதில் அமிலத்தை ஊற்றியது போல எரிந்தது.

நித்திலா எரிச்சலை மறைத்துக்கொண்டு, "போதுமே இந்த கதை, இப்போ உங்க மேட்டர்க்கு வருவோம். ரித்து நீ மட்டும்தான் எனக்கு பதில் சொல்லணும், அத்தான் வாயை திறக்க கூடாது நீங்க" என சுட்டுவிரல் காட்டி மிரட்டுவது போல சொல்லிவிட்டு ரிதன்யாவிடம் தன் கேள்விக்கணைகளை தொடுக்க ஆரம்பித்தாள்.

"ரெண்டு பேரும் எப்போ லவ் ப்ரபோஸ் பண்ணிகிட்டீங்க?"

ரிதன்யா வெட்கத்துடன், "லாஸ்ட் வீக்."

"அத்தான் நீங்க இந்த விஷயத்தில் ரொம்பவே வீக்" என்ற நித்திலா "அத்தான் இப்போ நீங்க பதில் சொல்லுங்க. நீங்க லவ் சொன்னதும் மேடமோட ரியாக்ஷன் எப்படி இருந்தது?"

"ப்ளீஸ் வேண்டாம் நித்திலா, நான் ரொம்ப பாவம் என்னை விட்டுடுங்க?" என ரிதன்யா கெஞ்சுவது போல சொல்ல

"வெரி சாரி ரித்து. அத்தான் என்னை என்னன்னு சொல்லி அறிமுகபடுத்தினார். வேற வழி இல்லை" என்று சொல்லிவிட்டு ரிஷியை பார்க்க



"ரிஷி முகத்தை சோர்வாக வைத்துக்கொண்டு அந்த கொடுமையை ஏன் கேட்கற நித்தி, நான் சொன்னதும் அவளால் நம்பவே முடியலயாம் அப்போ என்னை பார்த்து ஒரு கேள்வி கேட்டா பாரு நல்ல குட்டிசுவரா பார்த்து முட்டிக்கலாமான்னு இருந்தது" என்றான்

"இன்ட்ரஸ்டிங் அதென்ன அப்படி ஒரு கேள்வி?"

"ம்ம்.. இன்னைக்கு ஏப்ரல் முதல் தேதி கூட இல்லையே விளையாடாதீங்க சார்ன்னு சொன்னா"என்றான் சோகமாக.

சிரிப்புடன் பாதிமுகத்தை மறைத்தபடி அமர்ந்திருந்த ரிதன்யா," ஆபீஸ் ஹவர்ல திடீர்னு எதிரில் வந்து உட்கார்ந்து இப்படி பேசினா என்ன நினைப்பது நித்திலா?" என்றாள் புன்னகையுடன்,

"என்ன ரிஷி அவங்க எவ்வளவு பீல் பண்றாங்க நீங்க அதுக்கெல்லாம் காம்பன்சேட் பண்ணிடுங்க" என நிரஞ்சன் சிரிக்க

"இப்படியா சொதப்புவீங்க" என நித்திலா வம்பிழுத்து சிரிக்க, நிரஞ்சன் அவளின் சிரிப்பை இமைக்காது காதலுடன் பார்த்தான். ரிஷி பாசத்தோடு கனிவுடன் பார்த்தான்.

சிரித்துமுடித்து நிமிர்ந்த நித்திலாவின் கரத்தை பற்றிய தன்யா, "தேங்க்ஸ் நித்திலா" என்று சொல்லும் போதே கண்கள் கலங்கிவிட நித்திலா துணுக்குற்றாள்.

"ரித்து எதுக்கு அழுகை இப்போ? ரிலாக்ஸ் அத்தையும், மாமாவும் ரொம்ப நல்லவங்க எங்க அத்தான் போலவே" என ஆறுதலாக சொல்ல

"இல்லை நித்திலா நான் உங்களை நினைத்து தான் கொஞ்சம் கவலைப்பட்டேன். ஆடிட்டர் அங்கிளை பார்க்க ஒருமுறை இவரோட அப்பா வந்திருந்தாங்க. பேச்சுவாக்கில் ரிஷிக்கும், உங்களுக்கும் கூடிய சீக்கிரம் கல்யாணம்ன்னு சொன்னார். அப்போதே எட்டாத கனிக்கு ஆசைப்படுகிறோமே என்று தெரிந்தும் ரிஷியை விரும்ப ஆரம்பித்திருந்த எனக்கு அந்த செய்தி ரொம்பவே கஷ்டத்தை கொடுத்தது. ரிஷி என்னிடம் காதலை சொன்னதும் ஒருகணம் இது உண்மையா விளையாட்டான்னு புரிந்துக்கொள்ள முடியவில்லை. அவர் முகத்தில் தெரிந்த தீவிரம் உண்மை என்று புரிய வைத்தது. ஆனால் நீங்க அவரை விரும்பி இருந்தால் என்று ஒரு கேள்வி என் மனதில் எழுந்தது. ஒரு பெண்ணோட மனதை காயபடுத்துகிறோமோ என பயம் இருந்தது. இப்போ அந்த பயம் எனக்கு இல்லை" என்றாள் புன்னகையுடன்.

ரிதன்யா சொன்ன செய்தி தனக்கு புதிதில்லை தானும் அதை அறிந்து சிலசமயம் சங்கடபட்டதும் உண்டு என்றாலும் தன்னால் ரிஷியை அப்படி நினைத்து கூட பார்க்கமுடியவில்லை என்ற உண்மையை எப்படி தன் அத்தை மாமாவிடம் சொல்வது என பலசமயம் சங்கடப்பட்டிருக்கிறாள். அதேசமயம் ரிஷிக்கும் இதில் உடன்பாடிருக்காது இருவரும் சேர்ந்து பேசி சமாளிக்கலாம் என்று நம்பிக்கையும் இருந்தது. இன்று தன்னைவிட அவனுக்கு எல்லாவற்றிலும் பொருத்தமான ஒரு பெண்ணை அவனே தேர்ந்தெடுத்து அவர்களிடம் அறிமுகபடுத்தும்போது பாதிப்பு பெரிதாக இருக்காது என்றும் உணர்ந்தாள்.

கலகலப்பு சற்று குறைந்துவிட அனைவரையும் இயல்பாக்க நினைத்த நித்திலா," நான் தான் ஒரு பெரி......ய தேங்க்ஸ் சொல்லணும்" என சொல்ல எதற்கு என்பது போல தன்யா ரிஷியின் முகத்தை பார்த்துவிட்டு நித்திலாவை பார்த்தாள்.



"எதுக்குன்னு பார்க்கறீங்களா ? வேற எதுக்கு இந்த அத்தானிடமிருந்து என்னை காப்பாற்றி இருக்கீங்களே அதுக்கு தான். எப்போ பாரு பிஸ்னஸ், மீட்டிங், பாரின் ட்ரிப், என்று காலில் சக்கரம் கட்டிக்கொண்டு பறக்கும் ரோபோ மேன் எனக்கு சரிப்படாது. காலையில் எழுந்ததும் நித்திலா டார்லிங் காபி, என்று கேட்டு என் கையால் காபி குடிப்பதில் ஆரம்பித்து, ஈவனிங் ஆபீஸ் விட்டு வரும்போதே நித்திலான்னு வரணும், வெள்ளிக்கிழமை என்னோடு கோவிலுக்கு வரணும், சண்டே சண்டே அவுட்டிங் கூட்டி போகணும், ஆபீஸ் ஹவர்ஸ்ல கூட எனக்கு போன் செய்து பேசணும். நான் கோபம் வந்து திட்டினா பேசாமல் வாங்கிக்கணும். நான் கோபத்தோடு பேசாமல் இருந்தால் என்னை கெஞ்சி கொஞ்சி சமாதானம் பண்ணனும் இதுக்கெல்லாம் தயாரா இருக்கவங்க தான் எனக்கு ஒகே" என்றாள் புன்னகையுடன்.

அவளின் ஒவ்வொரு விருப்பத்தையும் சொல்லி தலையை ஆட்டி, கண்களை அசைத்து தன் பளீர் சிரிப்புடன் சொல்லிக்கொண்டு இருந்தவளை பார்த்துக்கொண்டு ஒவ்வொரு வார்த்தையையும் உள்வாங்கிக்கொண்டிருந்த நிரஞ்சனுக்கு எதுக்கு நிலா புதுசா ஒருத்தர் இனி தானா வரணும் இதுக்கும் மேலேயே உன்னை என் கண்ணுக்குள் வைத்து பார்த்துக்கொள்ள ஒருவன் நான் இருக்கிறேனே அது ஏன் உனக்கு புரியவில்லை ? என்ற எண்ணம் ஆட்க்கொள்ள எல்லாவற்றையும் இன்று சரிசெய்துவிடலாம் என நம்பிக்கையும் தோன்றியது.

இதெல்லாம் கேட்ட ரிஷியோ,“ஹய்யோ... அம்மா தாயே இதெல்லாம் நமக்கு சரிபடாது. நான் உனக்கு பெரிய தேங்க்ஸ் சொல்லணும். உண்மையிலேயே இதெல்லாம் செய்ய ஒரு சூப்பர் மேன் வரணும். அந்த சூப்பர்மேன் வந்தால் சரி இல்லைனா நீ கடைசி வரைக்கும் ஔவையார் தான்” என சிரிக்க,

அவன் பதிலில் விரக்தியாக சிரித்தவள், “பரவாயில்லை அத்தான். உங்களுக்கு கல்யாணம் ஆனதும் நீங்களெல்லாம் ஒரு குடும்பமாக ஆகிடுவீங்க இல்ல. அப்போ உங்க வீட்டுக்கு ஒரு விருந்தாளியா யாரும் இல்லாத இந்த நித்திலா வந்தால் வா நித்திலான்னு பாசமா ஒரு வார்த்தை சொன்னால் போதும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்” எனும் போதே அவள் குரல் தழுதழுத்து கண்கள் கலங்கிவிட அதை மறைக்க முடியாமல் தலைகுனிந்துக்கொண்டாள்.

இன்றுவரை அவளை இப்படி ஒரு சூழ்நிலையில் பார்க்காத நிரஞ்சன் தீயை மிதித்தது போல துடித்து போனான். உடல் இறுக நிமிர்ந்தான். அம்மா இல்லை என்றபோதும், அவளுக்கு தந்தையே தாயுமானவராக இருந்து வளர்த்ததையும், பாட்டியின் பாசமும் அவன் அறிந்தது. மற்றவரின் பரிதாப வார்த்தைகளையும் பார்வையையும் கண்டும் காணாமல் சென்றவளுக்கு இன்று இத்தனை பேர் அவளை சுற்றி இருந்தும் அவள் தனிமையை உணர்கிறாள் என்று தானே அர்த்தம். இல்லை இனி ஒரு போதும் உன்னை கலங்க விடமாட்டேன் என் உயிருக்குள் வைத்து பாதுகாக்க நானிருக்கேன் உனக்கு என அவளை ஆதரவாக அணைக்க துடித்தவனின் கைகளை அடக்கிக்கொண்டவனால் கண்களில் துளிர்த்த கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் சட்டென எழுந்து சென்றுவிட,



ரிஷி,“நித்தி பைத்தியம். என்ன வார்த்தை சொல்லிட்ட” என அவளருகில் வந்தவன் பாசத்துடன் அவள் தலையை வருடிக்கொடுத்தான்.

“உன்னை சுற்றி எத்தனை பேர் இருக்கோம். நீ எப்படி அந்த வார்த்தை சொல்லலாம். என்னைக்கும் உனக்கு இருக்கும் உரிமை அந்த வீட்டில் உனக்கு கிடைக்கும். அப்பா அம்மாவிடம் சொல்லாமல் முதலில் நான் உன்னிடம் தானே தன்யாவை பற்றி சொன்னேன். ஒரே வார்த்தையில் எல்லோரையும் அன்னியமாக்கிவிட்டாயே” என்றவனின் குரல் தளர்ந்து போய் இருந்தது.

“சாரி அத்தான் வெரி சாரி. உங்க எல்லோருடைய நல்ல மூடையும் நான் ஸ்பாயில் பண்ணிட்டேன்” என்று மன்னிப்புக்கேட்டவளின் கண்கள் அங்கே இல்லாத நிரஞ்சனை தேடியது. ஆர்டர் செய்திருந்த உணவு வகைகளும் வந்துவிட ரிஷி நிரஞ்சனை மொபைலில் அழைத்தான்.

அவள் குறும்பை, வானவில்லின் வர்ணஜாலம் காண்பிக்கும் அவள் மாற்றங்களை கவனித்து அதற்குத்தக்க பல்வேறு உணர்ச்சிகளில் வசப்பட்டிருந்த நிரஞ்சனின் முகம் அவளுடைய இந்த வார்த்தைகளில் சட்டென்று அதிர்ந்து துடித்துபோனான். தன்னை சுற்றிலும் பலர் இருந்தாலும் மனதளவில் அவள் அனுபவிக்கும் நிராதரவான நிலை நிதர்சனமாக தெரிய அந்த உண்மை அவளை சுட்ட வேகத்தில் மனம் கலங்கிப்போனான். ரெஸ்ட் ரூம் சென்று தன்னை சீர்ப்படுத்திக்கொண்டு வந்த நிரஞ்சன் அமைதியாக சாப்பிட்டான். நித்திலாவே பேசி மீண்டும் கலகலப்பூட்டினாள். ரிதன்யாவை பற்றி இப்போது ஏதும் வீட்டில் சொல்ல வேண்டாம் என்றும் ரிசாட் வேலை

முடிந்ததும் சொல்லிக்கொள்ளலாம் என நித்திலா சொல்ல ரிஷியும் சம்மதித்தான்.

ரிஷி ரிதன்யாவை அழைத்து சென்று விட்டுவிட்டு வருவதாகவும், நிரஞ்சனுடன் வீட்டிற்கு செல்லும்படியும் சொல்ல ரிஷியின் கார் கண்ணிலிருந்து மறையும்வரை நின்றிருந்த நித்திலா நிரஞ்சன்புறம் திரும்பாமல் ஆட்டோ ஸ்டாண்டை நோக்கி நடக்க முயன்றவளின் கையை பற்றிய நிரஞ்சன்“சொன்னது நினைவில்லையா? வா என்னோடு”என அவளை பிடித்து இழுத்து செல்லாத குறையாக அழைத்துசென்று காரில் ஏற்றி காரை கிளப்பினான்.

## அத்தியாயம்–18

உள்ளுக்குள் குமுறிய கோபத்தை அடக்கிக்கொண்டு அவன் பிடித்த பிடியில் வலித்த மணிக்கட்டை தடவி விட்டுக்கொண்டே வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தாள். வெளியே மழை தூறிக்கொண்டு இருக்க நிரஞ்சன் காரை நிதானமாக செலுத்திக்கொண்டு இருந்தான். வெளியிலோ கும்மிருட்டு, மின்னலில் வரும் வெளிச்சம், காரின் ஹெட்லைட் தவிர வேறு வெளிச்சம் இல்லாமல் இருந்தது. மழையில் காரை செலுத்துவதில் கவனம் செலுத்தியதால் நிரஞ்சனும் பேசவில்லை. காரில் நிலவிய அமைதியும், ரெஸ்டாரெண்டில் அவன் பதிலால் ஏற்பட்ட எரிச்சலும், தன்னை காரில் வலுக்கட்டாயமாக ஏற்றியவன் மீது வந்த கோபமும் இறுக்கத்தை கொடுத்தது.

கடவுளே இன்னும் வீடு போய் சேர இருபது நிமிடமாவது ஆகும் அதுவரை எப்படி பொறுத்திருக்க போகிறோம் என்ற சலிப்புடன் கைகளுக்கு நடுவில்



கொட்டவிவிட்டாள். அவள் மனதை படித்தவனாக சிடியில் பாடலை கசியவிட்டான். என்பதுகளில் வெளிவந்த காதல் பாடல்கள், அந்த இரவின் அமைதியில் மென்மையான இசையில் எஸ்.பி.பியின் குரலில் குழைவுடன் ஒவ்வொரு பாடலும் தேனாக இனித்தது. சலித்திருந்த மனதிற்கு பாடல் தெம்பூட்டியது போல இருக்க அவள் முகத்தில் புன்னகை கூட பூத்தது.

“நந்தா என் நிலா..” என அடுத்த பாடல் ஆரம்பிக்கவும் நித்திலா தன்னை அறியாமல் நிரஞ்சனை பார்த்தாள். அவனுக்கு மிகவும் பிடித்த பாட்டு. எத்தனையோ முறை அவன் இந்த பாடலை பாடும்போது கேட்டிருக்கிறாள். பாடும்போதே அதில் குழைவையும் காதலையும் சேர்த்து கொண்டுவருவான். அவனுக்கே தெரியாமல் ஒருமுறை அவன் பாடும்போது பதிவு செய்ததை இன்னும் பொக்கிஷமாக பாதுகாத்து வைத்திருப்பதை எண்ணிக்கொண்டு இருக்கும்போதே நிரஞ்சனும் உடன் சேர்ந்து பாட தொடங்கினான். வெகுநாட்களுக்கு பிறகு அவன் பாட கேட்டவள் கண்களை மூடி ரசிக்க தொடங்கினாள்.

மீண்டும் அவள் கண்களை திறந்தபோது பாடல் முடிந்து காரும் நின்றிருக்க எங்கிருக்கிறோம் என பார்க்க ரிஷி வீட்டு அருகில் இருந்த பிள்ளையார் கோவிலின் வாசல் என புரிந்தது. இங்கேயே ஏன் நிறுத்திவிட்டான் என திரும்பியவள் தன்னையே இமைக்காமல் பார்த்த நிரஞ்சனிடம், “என்ன இங்கேயே நிறுத்திட்டீங்க?” என்றாள்.

மனமெல்லாம் படபடக்க எப்படி ஆரம்பிப்பது என புரியாமல் ஸ்டியரிங் வீலில் தாளமிட்டபடி இரண்டுநிமிட மௌனத்தை தவிப்பில் கரைத்தவன் நீண்ட மூச்செடுத்து

சுவாசித்தவன் அவளை நேராக பார்த்து,"நாம ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கொள்வோமா நித்திலா ?" என பட்டெனகேட்டான்.

சீட்டில் வாகாக சாய்ந்து அமர்ந்திருந்தவள் அதிர்ந்து போய்,"ஆஹ்..!" என்று நிமிர்ந்து அமர்ந்தாள். அப்படி என்ன பேசபோகிறான் ? என எதிர்பார்ப்பு இருந்த போதும் இப்படி திடுதிப்பென கல்யாணம் செய்துக்கொள்வோமா என நேரடியா கேட்பானென்று அவள் கனவிலும் எண்ணவில்லை. அதற்கு மேல் அவள் மூளை யோசிக்கும் திறனை இழந்தது போல பேச நா எழவில்லை.

அதிர்ந்து போய் அமர்ந்திருந்தவளின் கரத்தை தன் இருகைகளால் ஏந்தியவன், "நீ சொன்னது போல காலையில் எழுந்ததும் உன் கையால் காபி குடிப்பதில் ஆரம்பித்து, இரவு உன் மடியில் தலை சாயும் வரை நீ வேணும். கோவில் போகலாம், ஷாப்பிங் போகலாம், நீ கோபமாக இருந்தால் உன்னை கெஞ்சி கொஞ்சி கன்னம் வருடி, உன் தலைகோதி, இப்படி ஆதரவாக என் தோளணைத்து" என அவன் ஒவ்வொன்றாக சொல்ல அவன் கரங்கள் அதை செயலாக்கிக்கொண்டு இருக்க நடப்பதை கனவா நினைவா என உணரகூட பிரக்ஞை இல்லாமல் இருந்தவள் சுலபமாக நிரஞ்சனின் அணைப்பில் வந்திருந்தாள்.

அந்த அணைப்பில் அது தந்த இதத்தில் அவன் தன்னை வேண்டாம் என்றவன் என்று மறந்துபோனது. அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள் என்ற நினைப்பு மறந்து போனது. என் காதலி என் வாழ்க்கை என்று அவன் சொன்னது மறந்து போனது. சுற்றி இருந்த உலகமே மறந்துபோனது. அவனின் அணைப்பு மட்டுமே



அனைத்தையும் மிஞ்சி நின்றது. அவன் ஒருவன் மட்டுமே நினைவில் நின்றான். இதயம் படபடத்தது. நித்திலாவின் கரங்களும் உயர்ந்து அவன் கழுத்தில் மாலையாக விழுந்தது. அவள் உதடுகள் நடுக்கத்துடன், "நீரு" என முணுமுணுத்தது.

அவளின் அணைப்பும், பெயரழைப்பும் அவளின் சம்மதத்தை சொல்லிவிட நீ எனக்கு மட்டுமே சொந்தமானவள் என்ற உரிமையுடன் மென்மையான அணைப்பில் இறுக்கம்கூடியது. அவனின் சூடான மூச்சுக்காற்று அவள் காதுகளில் உரச, "நித்திலா ஐ லவ் யூடா.." என தாபம் நிறைந்த குரலில் சொன்னதும் அவ்வளவு நேரம் தன்னிலை மறந்து அவன் அணைப்பில் நெகிழ்ந்தவளின் புலன்கள் விழிப்படைய அவனின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்து ஹய் வோல்டேஜ் மின்சார கம்பத்தை மிதித்தது போல துடித்துபோனாள்.

தன் பலம் கொண்டமட்டும் வேகத்துடன் தன்னை அணைத்திருந்தவனை தள்ளி தன்னிடமிருந்து விலக்கினாள். ஏன் இப்படி நடந்தது ? எதற்காக நடந்தது ? எல்லாவற்றையும் எப்படி மறந்தோம் ? அவனருகில் தன் மனம் தன் கட்டுப்பாட்டை இழக்கிறது என புரிந்து இருந்தாலும் இந்த அளவிற்கு தான் பலகீனமாகிவிட்டோமே என்ற சுயபச்சாதாபத்தில் கண்களில் சரம்கோர்த்த கண்ணீர் மாலையாக கன்னங்களில் வழிய கைகளில் முகம் புதைத்து அழதொடங்கினாள்.

திடீரென அவள் விலகலும் அழுகையும் கலவரப்படுத்த பதறியவனாக,"நித்திலா என்ன..." என அவள் கைகளை விளக்க முயல

"தொடாதீங்க என்னை" என சீற்றத்துடன் உரக்க சபதமிட்டாள்.

சாதாரணமாகவே ஜனநடமாட்டம் அதிகம் இல்லாத பகுதி அது. போதாதற்கு மழை வேறு பெய்துக்கொண்டு இருப்பதால் நிச்சயம் நித்திலாவின் சத்தம் அந்த ஏசி காரின் கதவுகளும் அடைத்திருக்கும் நிலையில் நிச்சயம் வெளியே கேட்டிருக்காது. இருந்தும் ஒருமுறை சுற்றி பார்த்தவனின் பார்வை நித்திலாவின் முகத்தை புரியாமல் பார்க்க, நித்திலா வேகமாக தன் சீட்பெல்ட்டை கழற்ற முயன்றுக்கொண்டு இருக்க, "நித்திலா.. இப்போ என்ன ஆச்சு ? ப்ளீஸ் இரு நான் உன்னிடம் பேசியே ஆகவேண்டும்" என மிருதுவாகவே சொன்னான். அவன் பார்வையில் தன் காதலை புரிய வைத்துவிடும் வேகம் இருந்தது. அவள் புரிந்துக்கொள்ளவேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது.

ஆனால் நித்திலாவிற்கு அவன் தன்னை மேலும் மேலும் ஏமாற்றுவதாகவே தோன்றியது. தன்னை வேண்டாமென்றவன் எதற்கு இப்போது காதலன் வேடம் போடவேண்டும் என்ற கோபம் வந்தது. கோபத்தில் வந்த வார்த்தைகளில் நிதானம் தவறியது.

"வேண்டாம் நீங்க எதுவும் பேசவேண்டாம். ஏதாவது பேசி உங்க மரியாதையை நீங்களே கெடுத்துக்காதீங்க" என்றவள் கார் கதவை திறக்க

பொறுத்து பார்த்த நிரஞ்சன் கோபத்துடன் அவள் கையை பற்றி திருப்பினான் ."உன் மனதில் என்ன நினைச்சிட்டு இருக்க ? என் பொறுமையை அளவுக்கு மீறி சோதிக்கிற. என் மரியாதையை கெடுத்துக்கொள்ளும் அளவிற்கு நான் என்ன செய்தேன் ?" என்றான்.



பல்லை கடித்துக்கொண்டு. இருவரின் பார்வைகளும் உஷ்ணத்துடன் மோதிக்கொண்டன. கோபத்தில் இருவரின் இதய துடிப்பும் அதிகரித்திருக்க நான்குவருடமாக அடக்கி வைத்திருந்த நித்திலாவின் கோபம் பொங்கும் எரிமலையாக வெடிக்க தொடங்கியது.

அவனை முறைத்தபடியே, "சொல்லட்டுமா, உங்களை பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று சொல்லட்டுமா ? நீங்க ஒரு மோசமானவன்னு நினைக்கிறேன். உங்களை நம்பினவங்களை ஏமாற்றும் எமாற்றுக்காரன்னு நினைக்கிறேன். உங்களுக்கு ஒரு பொண்ணு போதாதுன்னு நினைக்கிறேன்" என்றதும்

"நித்திலா...." என கர்ஜித்தவனின் கரம் எரிய ஆரம்பித்ததும் தான் அவளை அறைந்திருப்பதை உணர்ந்தான். கோபமிருந்த போதும் அவள் சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்தவனுக்கு தெரியும், அவள் இன்னும் சிறு குழந்தை போல என்று. படபடப்பாக பேசினாலும் செய்தாலும் எதையும் அமைதியாக எதிர்கொள்வாள் அவளுக்கு கோபம் வரும்போது அவள் மனதில் இருக்கும் எல்லாம் வெளியே வரும் அப்படி வரும்போது தன்னிடம் அவள் இப்படி நடந்துக்கொள்வதற்கு காரணத்தை கண்டுபிடித்து சரிசெய்யலாம் என்று நினைத்திருக்க, அவள் கடைசியாக சொன்ன விஷயம் அவனையும் அறியாமல் கை நீட்டவைத்துவிட்டது.

குற்றஉணர்வுடன் அவள் முகம் பார்க்க துணிவில்லாமல், "சாரி நித்திலா.." என்ற அடுத்த நொடி அவனின் சட்டை காலர் நித்திலாவின் கைகளில் இருந்தது.

"உங்களுக்கு ஒரு பொண்ணு போதாதுன்னு நினைக்கிறேன்" என்ற வாக்கியத்தை சொல்லி வாய் மூடும்

முன் நிரஞ்சனின் கரம் அவள் கன்னத்தில் இடியாய் இறங்க கண்கள் இருட்டிக்கொண்டுவர, கன்னம் தீயாய் எரிந்தது. தலையை உலுக்கி சமாளித்து நிமிர்ந்தவள் தலைகுனிந்தபடி அவனின் சாரி என்ற வார்த்தையை கேட்டதும் அவன் சட்டை காலரை பற்றி தன் பக்கம் இழுத்தாள். குற்ற உணர்வில் தவித்துக்கொண்டு இருந்தவன் அவளின் இழுப்பிற்கு வந்தான்.

அவள் கண்கள் கலங்க, கோபத்தில் இதழ்கள் துடிக்க, ஆத்திரத்தில் முகம் சிவக்க, "நீ யாரு என்னை அடிக்க? உனக்கு என்ன உரிமை இருக்கு? நீ தானே கேட்ட என்னை பற்றி நீ என்ன நினைக்கிறேன்னு? தப்பு செய்த உனக்கே இவ்வளவு கோபம் வரும்போது உன்னால் பாதிக்கப்பட்ட எனக்கு எவ்வளவு கோபம் வரும்? எங்க அப்பா கூட என்னை ஒரு வார்த்தை சொல்லி திட்டியது கிடையாது. ஆனால் நீ என்னை கைநீட்டி அடிச்சிட்ட. யாரும் கேட்க ஆள் இல்லாதவள் என்ற எண்ணம் தானே உனக்கு. அதனால் தானே என்னை உன் கைபொம்மையா ஆட்டி வைக்கிற"

ஏற்கெனவே உள்ளுக்குள் தனிமையை அனுபவிப்பவளை நோகடித்து விட்டோமே என்ற உணர்வில், "நித்திலா... ப்ளீஸ்டா... அப்படியெல்லாம் பேசாதே. நான் என்றுமே உன்னை அப்படி நினைத்ததில்லை. நான் செய்தது தவறுதான் நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்" என கெஞ்சாத குறையாக சொல்ல

"யாருக்கு வேணும் உன் சாரி. இன்னும் என் மனசில் உன்னை பற்றி என்ன நினைத்திருக்கேன்னு முழுசா சொல்லி முடிக்கலையே. நாம ரெண்டு பேரும் கல்யாணம்



செய்துக்கலாம்னு கேட்டாயே, நாலு வருஷத்துக்கு முன்னால் என் வாழ்க்கையே நீ தான்னு உன்னையே உயிரா நினைச்சிட்டு இருந்தேனே, இதே வார்த்தையை கேட்கமாட்டாயான்னு துடித்துக்கொண்டு இருந்த போது கேட்டிருந்தால் சந்தோஷபட்டிருப்பேன். ஆனால் ஆசையாக உன் பதிலுக்கு காத்திருந்த போது நீ யாரோ ஒரு பொண்ணை காதலிக்கும் விஷயம் தெரிந்ததும் என் மனம் சுக்கு நூறாக உடைந்தது தெரியுமா உனக்கு? இன்னைக்கு வரைக்கும் அந்த மரணவலியை உள்ளுக்குள் சுமந்துக்கொண்டு தனிமையில் தவிப்பது தெரியுமா? எங்க அம்மா, அப்பா இறந்த போது கூட நான் அந்த அளவிற்கு அழுததில்லை. ஆனால் நீ எனக்கு இல்லை என்று தெரிந்த போது எப்படி அழுதேன்னு தெரியுமா?" என காலரை பற்றி இருந்தவள் அவன் தோள்மீதே சாய்ந்து அழ நிரஞ்சன் தவித்து போனான்.

கடவுளே என்ன சொல்கிறாள்? நான் யாரையோ... எப்படி? யார் இவளிடம் தவறாக சொல்லி இருப்பார்கள்? இல்லை இவள் தவறாக புரிந்துக்கொண்டாளா..? என எண்ணியவனாக, "நித்திலா இங்கே பார்" என அவள் முகத்தை கையில் ஏந்தியவன், "உன்னிடம் யாரோ தவறாக சொல்லி இருக்காங்க. நான்..."

அவன் கைகளை பிடித்து தள்ளியவள், "இல்லை யாரும் சொல்லவில்லை நானே என் காதால் கேட்டேன். அத்தை என்னைப்பற்றி சொன்னபோது நீ உன் காதலியை பற்றி சொன்னதை என் காதால் கேட்டேன்" என பிடிவாதமாக சொல்ல நிரஞ்சன் செய்வதறியாமல் தவித்தான்.

"அவசரத்தில் தப்பா புரிஞ்சிக்காதே நித்திலா. நான் சொல்வதை கேள்"

"போதும், எதுவும் பேசவேண்டாம். உன்னைப்பற்றி நான் புரிந்துக்கொண்ட தெல்லாம் போதும். என்னை விட்டுவிடு. பாவம் இந்து அவளுக்காவது நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடு" என்றதும்

"இந்துவா..." என்றவனின் குரலில் தெரிந்தது, கோபமா, எரிச்சலா, ஆச்சர்யமா என இனம்பிரிக்க முடியவில்லை.

"ஆமாம் இந்து தான். நீ இந்துவை காதலிக்கறேன்னு எனக்கு தெரியும். அவளும் உன் மேல ரொம்பவே அன்பு வச்சிருக்கா. அவளையாவது ஏமாற்றாமல் நல்லபடியா கல்யாணம் செய்துக்கொண்டு குடும்பம் நடத்து. ஒரு நித்திலா போதும் இந்துவை இன்னொரு நித்திலாவாக உருவாக்கிவிடாதே" என்றதும் அங்கே அமைதியே நிலவியது.

நிரஞ்சனின் மனம் அமைதியிழந்து தவித்தது. நித்திலாவை பார்க்கவே எரிச்சலாக இருந்தது. போயும்போயும் இந்துவுடனா தன்னை இணைத்து பார்த்தாள் என நினைத்தவனுக்கு பேசவே முடியவில்லை. சொல்லபோனால் அதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. புயலுக்கு பின்னே அமைதி போல நித்திலா என்ற எரிமலை வெடித்ததில் அவள் கோபம் சற்று அடங்கியது. கண்களை மூடி சீட்டிலேயே சாய்ந்து அமர்ந்தவளின் கண்களில் இருந்து கோடாக கண்ணீர் வழிந்தது.

ஒன்றும் இல்லாத ஒருவிஷயத்தை மனதில் போட்டு உழப்பி, நான்கு வருடம் தானும் வேதனைப்பட்டு, தன்னையும் வேதனைபடுத்தியவளை பார்த்த நிரஞ்சனுக்கு இப்போது எதை பேசினாலும் அவளுக்கு



மண்டையில் ஏறப்போவதில்லை தனக்கும் அவளுக்கு புரியவைக்கும் அளவிற்கு பொறுமை இல்லை என்று உணர்ந்தவனாக காரை கிளப்பினான். போர்ட்டிக்கோவில் காரை நிறுத்தினான். கோபத்தில் இறுகியிருந்தவன் மனம் கோபத்திலும் நிதானத்தை கடைபிடித்தது.

நித்திலா காரிலிருந்து இறங்கவும்,"நித்திலா" என்று இறுகிய குரலில் அழைத்தான். அவன் குரலுக்கு அவனை திரும்பிப்பார்க்காமல் நின்றாள்.

"நித்திலா... உன்னுடைய அவசரத்திலும், முட்டாள்தனத்திலும் நீ இழந்தது, இழக்க போவது கொஞ்சம் நஞ்சம் இல்லை. இந்த குணத்தை மாற்றிக்கொள்ள முயற்சி செய். நம் உணர்வுகளுக்கு நாம் தான் எஜமானனாக இருக்கணும். அடிமையாக இருக்ககூடாது. உன்னுடைய தவறை நீ உணரும் போது உன் கையில் எதுவும் இருக்க போவதில்லை. அன்றைக்கு நீ அழுதாலும் எதுவும் திரும்பி வராது" என்ற நிரஞ்சனின் குரலை கேட்டதும் அப்படியே நின்றவள் பெருமூச்சு ஒன்றை வெளிவிட்டு அங்கிருந்து நகரமுயல, நிரஞ்சனின் மொபைல் இசை பாடி அழைத்தது.

யார் இந்த நேரம் என எண்ணியவனாக எடுத்தவன் மறுபுறம் இந்துவின் அழுகுரலை கேட்டதும், "சாந்த் என்ன ஆச்சு?" என்று பதற அதை கண்ட நித்திலா இவ்வளவு நேரம் தன்னிடம் காதல் பாடம் இப்போது இந்துவா என எழுந்த கோபத்தை தன் கைகளை மடக்கி அடக்க முயன்றவளாக ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து அகன்ற வேகத்தில் அவள் மனதில் இருக்கும் கோபத்தின் அளவு புரிந்தது. நிரஞ்சனுக்கு அனைத்தையும் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

அத்தியாயம்–19

காலையில் கண்விழித்தபோதும் எழ மனமில்லாமல் படுக்கையிலேயே ஜன்னல்வழியாக தெரிந்த வானத்தை வெறித்தபடி சுருண்டு படுத்துக்கொண்டு இருந்தாள். இரவு தூக்கமின்மையால் கண்கள் உள்ளே நெருப்பு துண்டங்களை வைத்தது போல எரிந்தது. நிரஞ்சனுடன் பேசியதெல்லாம் நினைவில் வந்து இம்சித்தது. என்னதான் அவனை அவள் பேசியிருந்தாலும், அவனை தன்னால் வெறுக்கமுடியாது என்ற உண்மை புரிய கண்களில் கசிந்த கண்ணீரை சுண்டிவிட்டு எழுந்தாள்.

அமைதியாக காலையுணவை முடித்துக்கொண்டு கிளம்பும்நேரம் சகாதேவன்,"நித்திலா, ஈவனிங் வரும்போது பிரஸ்சுக்கு போய் நீயே இன்விடேஷன் ப்ரூப் சரிபார்த்து கொடுத்துவிட்டு வந்துவிடு" என்றதை கவனிக்காமல் நின்றிருந்தவளை சகாதேவன் யோசனையுடன் பார்த்தார்.

"மாமா சொல்வதை கூட கேட்காமல் அப்படி என்ன யோசனை நித்திலா" என வைதேகி அவளை உலுக்கி கேட்க,

"ஆஹ்...! என்ன அத்தை, வந்து.. இன்விடேஷன் ப்ரூப் பார்க்கணுமே அதை பத்தி யோசிச்சிட்டு இருந்தேன். நேரமாகுது நான் கிளம்பறேன் மாமா, வரேன் அத்தை" என சொல்லிவிட்டு செல்பவளையே இருவரும் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

சகாதேவன் யோசனையோடு அமர்ந்திருந்தார். நித்திலாவின் போக்கில் சில நாட்களாக ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை அவரும் கவனித்துக்கொண்டு தானே இருக்கிறார். வைதேகியிடம் எதையும் பேசமுடியாது



கவலைபட்டே ஓய்ந்து போய்விடுவாள். ரிஷியிடம் தான் பேசவேண்டும் என்ற முடிவுடன் இருந்தார்.

ரிசாட் வேலை நடக்கும் இடத்திற்கு வந்தவளின் கண்கள் நிரஞ்சனை தேடியது, ஆனால் அவனை காணாமல் ஏமாற்றத்தை சுமந்துக்கொண்டு தன் வேலையை ஆரம்பித்தாள். மதியம் எதிர்பட்ட எஞ்சினியரிடம் சாதாரணமாக விசாரிப்பது போல கேட்டதற்கு அவர் சொன்ன பதிலில் குழம்பிப்போனாள்.

திடீரென எதற்கு அவசரமாக ஊருக்கு செல்ல வேண்டும்? அதுவும் பதினைந்து நாட்கள். நேற்று இரவு இந்துவின் போன் வந்தது நினைவுக்கு வந்தது. அவள் அழைத்ததும் கிளம்பி செல்லும் அளவிற்கு இருப்பவன் தன்னிடம் எதற்கு நேற்று அப்படி பேசவேண்டும் என நினைத்தவளுக்கு தன் வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டதோ என்று தோன்ற சோர்வுடன் அமர்ந்தவள் மெல்ல தன்னையே தேற்றிக்கொண்டாள்.

ரிஷியிடம் பேசினாலும் ஏனோ ஏதும் விசாரிக்க தோன்றவில்லை. ரிஷியும் அவனாக இதுவரை எதுவும் சொல்லவில்லை. ரிசாட் திறப்புவிழாவிற்கு இன்னும் இருபது நாட்களே இருக்க அவனும் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு பறந்துக்கொண்டு இருந்தான்.

தன் கவலைகளை மறக்க தன்னை வேலையில் முழுமுச்சாக ஈடுபடுத்திக் கொண்டாள். எவ்வளவு தான் தன்னை உழைப்பில் கரைத்துக்கொள்ள முனைந்தாலும், மறந்தால் தானே அவன் நினைவு வராமல் தடுக்க முடியும். அவள் உயிர்வரை கலந்தவனை எப்படி நினைக்காமல் இருக்க முடியும்? நிரஞ்சனும் அவ்வப்போது போன் செய்து தன் வேலையாட்களுக்கு வேண்டிய கட்டளைகளையும் வேலைகளையும் சொல்லிக்கொண்டு இருந்தான்.

கடைசிகட்ட வேலைகள் சிலமட்டும் இருக்க சகாதேவன் வைதேகியுடன் ரிசாட்டிர்க்கு வந்தவர், நித்திலாவையும் உடன் அழைத்துக்கொண்டு முழு ரிசாட்டையும் சுற்றிபார்த்தார். அமைதியாக ஒவ்வொரு இடத்தையும் பார்த்தவர் நுணுக்கமாகவும் ஆராய்ச்சி பார்வை பார்த்தார். சோலார் பானல், மழை நீர் சேகரிப்பு திட்டம், மழைக்கால பாதிப்பு ஏற்படாமல் இருக்க செய்யபட்டிருக்கும் பாதுகாப்பு, ஒவ்வொரு அறையிலும் அமைத்திருந்த முதலுதவி பெட்டி, காற்றோட்டம், போதிய அளவிற்கு முன்னேற்பாடாக அமைத்திருந்த தீயணைப்பு கருவிகள், மின் தூக்கிகள், அலுவலக அறை, தனி குடில்கள், விஐபி சூட், அதன் உள் அலங்காரங்கள். ஒவ்வொன்றும் விலை அதிகம் இல்லாமலும் அதே நேரம் நேர்த்தியும், அழகும் மிளிர இருப்பதை பார்த்தார். கடைசியாக இன்டோர் ஸ்டேடியம் வந்தவர்கள் சுற்றி பார்த்துவிட்டு நித்திலாவை பார்த்தார்.

பரிட்ச்சை எழுதிவிட்டு காத்திருக்கும் மாணவி போல தன் மாமாவின் வார்த்தைக்காக தவிப்பும் ஆர்வமும் கலந்த முகத்துடன் சகாதேவனை பார்த்துக்கொண்டு இருந்தாள். ஒரு முறை சுற்றி பார்வையை ஓட்டியவர் கண்ணாடியை தூக்கிவிட்டுக்கொண்டு நித்திலாவிடம்,“வாழ்த்துக்கள் மருமகளே” என சிரிப்புடன் கையை நீட்ட சொல்லமுடியாத குதூகலத்துடன் “தேங்க்ஸ் மாமா” என அவர் கைகளை பற்றியவள் மறுகணம் அவர் காலை தொட்டு வணங்கினாள்.

“நல்லா இரும்மா” என மனதார வாழ்த்தியவர் கண்களும் கசிந்துவிட்டது.

“இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் மாமா. இதுக்கெல்லாம் நீங்களும் அத்தையும் தான் காரணம்” என தழுதழுத்தவளை வைதேகி அணைத்துக்கொண்டார்.



“நாங்க என்ன செய்தோம். நீ படிச்ச உன் திறமையை வைத்து இன்னைக்கு நீயே உன் சொந்த காலில் நிற்க ஆரம்பிச்சிருக்க. இது எங்களுக்கு சந்தோஷம் தானே. இதே மாதிரி கூடிய சீக்கிரம் ....” என வைதேகி ஆரம்பிக்க சகாதேவன் பேச்சை மாற்றும் விதமாக

“வைதேகி, எப்படி இருக்குன்னு நீ ஒன்னுமே சொல்லலையே ?” என்றார்.

“சொல்ல என்ன இருக்கு ? ரிஷி ஒரு பொறுப்பான ஆளிடம் நம்ம இடத்தை கொடுத்தான். இன்னைக்கு நாம நினைக்காத அளவிற்கு அழகான கட்டிடங்களோடு, என் மருமகளோட கைவண்ணமும் சேர்ந்து அழகாக பார்க்கவே மனம் பூரிச்சி போகுது” என்றார் சிலிர்ப்புடன்.

“இன்டோர் ஸ்டேடியம் எப்படி ?”

“ரொம்ப அழகா இருக்கு. பில்டிங்கயும், இந்த மலைக்குன்றையும் சேர்த்து அழகா பார்க் மாதிரி அமைத்து குழந்தைகள் சறுக்கி விலையாட ஒரு பக்கம் சரிவாகவும் நடக்க நினைக்கிறவங்களுக்கு நடக்க புல் தரையும் இந்த ரிசாட்டோட ஹய் லைட் இது தான்” என சொல்லியவர் மேலும் ரஞ்சனை பற்றி சிறிதுநேரம் சிலாகிக்க, நித்திலா மௌனமாக நின்றுக்கொண்டு இருக்க ரிஷி புன்னகையுடன் அவர்களை நோக்கி வந்தான்.

வந்தவன்,“ஹாய் நித்தி” என்ற ஒற்றை வார்த்தையுடன் தன் தந்தையின் பக்கம் திரும்பி, “அப்பா இன்னைக்கு என்ன அம்மாவோட முகம் இவ்வளவு மலர்ச்சியா இருக்கு. அப்படி என்ன விஷயம் ?” என

கேட்டுக்கொண்டே தன் அன்னையின் தோளணைத்து நின்றான்.

"ரஞ்சன் பத்திதாண்டா கண்ணா பேசிட்டு இருந்தோம்" என வைதேகி தங்களின் பேச்சை மறுஒலிபரப்பு செய்ய வேலையாள் கொண்டுவந்து வைத்துவிட்டு சென்ற டீ கப்பை எடுத்துக்கொண்டு நித்திலா அங்கிருந்து சற்று தள்ளி சென்று நின்றவள் பார்வை இலக்கில்லாமல் வெறிக்க ஆரம்பித்தது.

"அப்பா, அம்மா புகழ்வதை பார்த்தால் ஒரு பொண்ணு இருந்தா ரஞ்சனுக்கு கல்யாணம் செய்துகொடுத்து மாப்பிள்ளை ஆக்கிடுவாங்க போல" என சிரிக்க சகாதேவனும் இணைந்துக்கொண்டார்.

வைதேகி கோபத்துடன், "நிச்சயம் செய்துவைப்பேன். அதுக்கெதுக்கு அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இப்படி சிரிப்பு?"

"பொண்ணு இல்லைன்னு தைரியம்டா கண்ணா உங்க அம்மாவுக்கு" என சகாதேவன் மேலும் கலாய்க்க

"இல்லப்பா அம்மா சொன்னா சொன்னதுதான் பேச்சு மாறமாட்டாங்க. இந்த விஷயத்தில் நான் அம்மா கட்சி" என தந்தையிடம் சொன்னவன், அம்மாவின் பக்கம் திரும்பி, "அம்மா அப்பா உங்களை சும்மா உசுப்பேத்தறார். நான் உங்க பக்கம்" என்றவன் அம்மாவின் சிரிப்பை பார்த்துவிட்டு தன் அப்பாவிடம் ரகசியமாக கண்ணடித்தான்.

அதை கவனிக்காத வைதேகி, "சரசு கிளம்பி போய் பன்னெண்டு பதிமூணு நாளாச்சே இன்னும் போன் ஒன்னும் வரலையேப்பா? ரெண்டு பேரும் எப்போ வராங்க? இன்னும்



ஒருவாரத்தில் பங்க்ஷன் இருக்கே ரஞ்சன் அதுக்கு இருக்கனுமே" என்றவரின் குரலில் அக்கறை தென்பட்டது.

"என்னிடம் பேசிட்டுதான்மா இருக்கான். போன வேலை முடிந்ததும் வந்திடுவான். இன்னைக்கு அப்பாகிட்ட பேசணும்னு சொன்னான் இன்னும் கொஞ்சம் நேரத்தில் போன் வரும்" என்றவன் பேசிக்கொண்டு இருக்க சிறிது நேரத்தில் நிரஞ்சனின் அழைப்பு வந்தது.

"சொல்லுப்பா மாப்பிள்ளை, உனக்கு ஆயுசு நூறு" என்று ரிஷி சிரிப்புடன் பேசிக்கொண்டிருக்க அதுவரை இவர்களின் பேச்சை கவனித்தும் கவனிக்காதவளாக நின்றிருந்த நித்திலா நிரஞ்சனின் அழைப்பு என தெரிந்ததும் மெல்ல அருகில் வந்தாள். அவள் முகத்தில் ஒரு ஆர்வம் தென்பட்டது.

மறுபக்கம் என்ன சொன்னானோ ரிஷி, "ஓஹ்.., சரி...., ஓகே.., சூப்பர்..." என சொல்லசொல்ல அவன் முகபாவமும் அதற்கேற்றார் போல மாறிக்கொண்டு இருந்தது. நித்திலாவிற்கு எதையுமே புரிந்துக்கொள்ள முடியவில்லை, கேட்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்த போதும் இது தேவை இல்லாதது என தோன்றவும் செய்தது.

"பக்கத்தில் சிஸ்டர் இருந்தா கொடுப்பா விஷ் பண்ணுவோம்" என்று பேசிக்கொண்டு இருக்க நித்திலாவிற்கு எதுவோ புரிவது போல இதயம் தாறுமாறாக துடிக்க ஆரம்பித்தது. கடவுளே இதெல்லாம் நிஜமில்லைன்னு யாராவது சொல்லக்கூடாதா என அவள் பேதை நெஞ்சம் ஏங்கியது. ஆனால் ரிஷி பேசபேச நித்திலாவால் அங்கே நிற்க முடியவில்லை.

பேசிவிட்டு போனை தந்தையிடம் கொடுத்தவன் வைதேகியிடம், "அம்மா சும்மா சொல்லகூடாது, ரஞ்சன்

புரட்சி கல்யாணமெல்லாம் செய்றார்'' என சொல்ல வைதேகி புரியாமல் ரிஷியை பார்க்க நித்திலாவின் முகமோ மலையளவு சோகத்தை மனதில் அடக்கியது போன்ற தோற்றத்தை வெளிபடுத்தியது. ஆர்வம் மின்னிய கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

போன் பேசிவிட்டு வந்த சகாதேவன், "ரிஷி அம்மாவிடம் நான் சொல்லிகிறேன், நீ ஆகவேண்டியதை பாரு. ரஞ்சன் நாளன்னைக்கு கல்யாண பெண்ணோடு வந்திடுவான். என்னிடம் பர்மிஷன் கேட்கத்தான் போன் செய்திருக்கான் நல்ல பிள்ளை''

"இங்கே அவன் இருக்கும் வரை அது அவன் வீடு எதுக்கு நம்மிடம் கேட்கனும்?'' என வைதேகியும் சொல்ல

"அம்மா நாளன்னைக்கு நமக்கு அவங்க வீட்டில் டின்னராம். எல்லோரையும் இன்வைட் பண்ணி இருக்கான். நித்தி உன்னையும் தான்''என்றதும் ஒன்றும் சொல்ல தோன்றாமல் சரியென்பது போல தலையசைத்து வைத்தாள்.

"நித்திலா நீ இப்போ வரியாம்மா? உன்னை ஹாஸ்ட்டல்ல விட்டுட்டு கிளம்பறோம்''என்றார் சகாதேவன்

"இல்ல மாமா கொஞ்சம் வேலை இருக்கு நீங்க கிளம்புங்க''என வலிய வரவழைத்த புன்னகையுடன் சொன்னாள்.

"ரிஷி அப்போ நீ கிளம்பும் போது நித்தியை ஹாஸ்ட்டல்ல விட்டுட்டுவந்திடு'' என சகாதேவனும் வைதேகியுடன் கிளம்பிவிட ரிஷியும் மறுப்பக்கம் சென்றுவிட நித்திலா அந்த கட்டிடத்தில் யாருமற்ற தீவில் தனித்து விடப்பட்டவளாக நின்றுக்கொண்டு இருந்தாள். நிற்கமுடியாமல் கால்கள் தள்ளாட சுவரில் சாய்ந்து அமர்ந்தாள்.



எவ்வளவு நேரம் தன்னை மறந்து அமர்ந்திருந்தாளோ ரிஷி தன் பெயர் சொல்லி அழைப்பது கேட்கும்வரை அப்படியே அமர்ந்திருந்தாள். வெளியே வந்தவள் ரிஷி அவளிடம் நேரடியாக பேசாததோ, கல்யாண விஷயத்தை அவளிடம் சொல்லாததோ, காரில் மௌனமாக வந்ததோ, தன்னை அவன் கவலையுடன் பார்த்ததோ எதுவுமே அவள் மனதில் பதியவில்லை. ஹாஸ்ட்டல் அறைக்கு வந்து சேரும்வரை எதுவுமே நினைவில் இல்லாமல் இயந்திரத்தனமாக நடந்துக்கொண்டாள்.

அறைக்கு வந்தவள் சிறிதுநேரம் நிரஞ்சனின் போட்டோவையே பார்த்துக்கொண்டு இருந்தாள். நடுங்கும் இதழ்களால் அவன் போட்டோவிற்கு முத்தமிட்டபோது அவளையும் அறியாமல் கண்கள் குளமாகியது. கண்களை துடைத்தவள் அவன் இனி தனக்கு சொந்தமில்லை. அதேநேரம் அவன் ஒருவனை தவிர வேறு யாரும் தன் வாழ்வில் வரமுடியாது தான் என்றுமே நித்திலா ராமகிருஷ்ணன் என்ற முடிவுடன் அவன் போட்டோவை எடுத்து ஒரு கவரில் போட்டவள் அதை நிரஞ்சனிடம் சேர்த்துவிடவேண்டும் என்ற முடிவுடன் தன் கைப்பையில் பத்திரபடுத்தினாள்.

## அத்தியாயம் –20

"இந்த வீட்டில் யாருக்கும் பொறுப்பே இல்லை. அப்பாவும் பிள்ளையும் அப்படி என்னதான் பேசுவீங்களோ? நேத்தே வரேன்னு சொன்ன நித்திலாவும் காணோம். போன் செய்தாலும் சுவிட்ச் ஆப்ன்னு வருது. ஹாஸ்ட்டலுக்கு போன் செய்தாலும் அவ இல்லைன்னு சொல்றாங்க. இவனை போய் பார்த்துட்டுவாடான்னாலும் போகமட்டேன்றான் எனக்கும் வீட்டில் வேலை ஒயலை.

ரெண்டுபேரும் இப்படியே குசுகுசுன்னு கூடி ரகசியம் பேசிக்கிட்டு இருங்க" என வைதேகி புலம்பியபடி ஹாலுக்கும், கிச்சனுக்கும் நடந்துக்கொண்டிருக்க சகாதேவனும், ரிஷியும் சுவாரஸ்யமாக பேசிக்கொண்டு இருந்தனர்.

ஒருநிலைக்கு மேல் வைதேகி ஆத்திரத்துடன், "நான் கரடியா கத்தறேன் எங்கேயாவது காதுல வாங்கறீங்களா ரெண்டுபேரும்" என படபடவென பொரிய

"ரிஷி கண்ணா கரடி தமிழ் பேசும்னு எனக்கு இன்னைக்குதாண்டா தெரியும்" என சகாதேவன் நேரம்காலம் தெரியாமல் கடிக்க ரிஷி முதல் வீட்டில் வேலை செய்துக்கொண்டு இருந்த வேலையாட்கள் வரை அனைவரும் சிரித்துவிட வைதேகி கடுப்புடன் வேகமாக ஹாலுக்கு வந்தார்.

"என்ன சிரிப்பு வேண்டிகிடக்கு ஏ.. சுந்தரி ஹாலை துடைத்தது போதும் நீ போய் பூவை கட்டிவை" என அங்கிருந்தவர்களை அப்புறப்படுத்தியவர் சகாதேவன் பக்கம் திரும்ப

வேகமாக எழுந்த ரிஷி," ஆமாமாம் நீங்கலெல்லாம் போய் வேலையை கவனிங்க அம்மா அப்பாவை கவனிப்பாங்க" என்றவன் தன் தந்தையை பார்த்து, "பை பா எனக்கு கொஞ்சம் முக்கியமான வேலை இப்போ தான் நினைவு வந்தது வந்து பேசறேன்" என்று ஒரே ஓட்டமாக வெளியே செல்ல

"யூ டூ மகனே..." என்றவர் வைதேகியின் பார்வையை கண்டதும் அசடுவழிய சிரிப்புடன் பார்த்தார்.

நித்திலா கிப்ட் பார்சலுடன் ஆட்டோவிலிருந்து இறங்கிய போது ரிஷி மொபைலில் பேசிக்கொண்டு



இருந்தான். அவன் முகத்தில் தெரிந்த முறுவலும் குழைந்திருந்த அவன் குரலுமே அவன் யாருடன் பேசிக்கொண்டு இருக்கிறான் என புரிய இவங்க வாழ்க்கையாவது நிம்மதியும் சந்தோஷமுமா இருக்கட்டும் என வேண்டியபடி அவன் கவனத்தை ஈர்க்காமல் வீட்டினுள் நுழைந்தவள் "பிள்ளை இல்லாதவன் வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுவான்னு ஒரு பழமொழி இருக்கு தெரியுமா? அந்த கதையா இருக்கு நீங்க செய்வதெல்லாம்" என்ற அத்தையின் குரலில் வாசலருகிலேயே நின்றாள்.

"என்ன வைதேகி சும்மா விளையாட்டுக்கு தானே சொன்னேன். உன்னிடம்தானே நான் விளையாடமுடியும். இதுக்கெல்லாமா கோபபடுவது. உன்னிடம் நான் விளையாடுவதும் என்னிடம் நீ கோபப்படுவதும் நமக்குள் இருக்கும் உரிமையில் தானே" என தன் மனைவியின் கைபிடித்து அருகில் அமர்த்திக்கொண்டு சொல்ல வைதேகியும் சற்று சாந்தமானார்.

"அதெல்லாம் நாம தனியாக இருக்கும்போது சரி. தலைக்கு மேல வளர்ந்த பிள்ளை, வேலையாள் எல்லோரும் இருக்கும் போது நான் சொல்வதை கேட்கலைனா நாளைக்கு அவங்களெல்லாம் எப்படி மதிப்பாங்க?" என வைதேகியும் சொல்ல

"அதுவும் சரிதான்"

"எல்லாமே உங்களுக்கு நான் சொல்லமுடியுமா? நித்திக்கு ஒரு போன் செய்ங்க அவ எடுக்கலைன்னா நேரா போய் ஒரு பார்வை பார்த்துவிட்டு வாங்க" என்றதும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இருந்த நித்திலா அவர்களின் அன்பில் நனைந்தவளாக, "அத்தை நானே

வந்திட்டேன்'' என்றபடி அவர்களை நோக்கி வந்தாள்.

"வாம்மா" என்று சகாதேவன் அழைக்க வந்தவளை வைதேகி முறைத்தபடி, "என்ன நினைச்சிட்டு இருக்க நீ? நேத்தே வரேன்னு சொன்ன வரலை. போன் எடுக்கலை ஹாஸ்டல்ல கேட்டா நீ இல்லைன்னு சொல்றாங்க. பாரு கன்னமெல்லாம் ஒட்டிபோய் கண்ணை சுத்தி கருவளையம் வேற எப்போ பாரு வேலை வேலைன்னு அலையணுமா? இதெல்லாம் சரிப்படாது எல்லாத்துக்கும் இன்னும் பத்து நாளில் முடிவுகட்டுகிறேன்" என பொரிந்து தள்ள நித்திலா அவரின் கோபத்தையும் அதில் இருந்த அக்கறையையும் உணர்ந்து புன்னகையுடன் அவர் தோளில் சாய்ந்தாள்.

"வந்ததும் வராததுமா குழந்தையை திட்டாதே வைதேகி. நித்தி நீ போய் ரெஸ்ட் எடு" என சகாதேவன் சொல்ல

"இப்போ ரெஸ்ட் எடுக்க நேரமெல்லாம் இல்லை. நித்தி இது என்ன பார்சல் கிப்டா. நீ போய் கிப்டை கொடுத்துவிட்டு சுந்தரிகிட்ட டிபன் கொடுக்கிறேன் அதை அவங்களுக்கெல்லாம் பரிமாறிட்டு வா. நிறைய வேலை இருக்கு"

நிரஞ்சனை எப்படியும் பார்க்கவேண்டும் என தெரிந்தாலும் அதை சற்று தள்ளிப்போட எண்ணி"நானா...! அத்தை நீங்க போய் டிபன் கொடுத்திட்டு வாங்களேன் நான் எதுக்கு...?" என தவிப்புடன் சொன்னாள்.

"அது நல்லா இருக்காது. சரசு கூட உன்னை காணோமேன்னு மதியம் வந்ததிலிருந்து கேட்டுக்கொண்டே இருந்தாங்க. ஒரு மரியாதைக்காவது போய் பேசிட்டு வா" என சொல்லி சுந்தரி மாலை டிபனுடன் பின்தொடர கெஸ்ட் ஹவுசை நோக்கி நடந்தவளின் மனம் சொல்லமுடியாத அலைகழிப்பில் இருந்தது.



"**வா** நித்திமா உன்னை நேத்தே எதிர்பார்த்தேன்" என முகம் முழுதும் சந்தோஷம் பொங்க அழைத்த சரசு,"இந்து யார் வந்திருக்காங்க வந்து பாரு" என குரல் கொடுத்தவர் சுந்தரியின் கையில் இருந்த பொருட்களை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார்.

பூஜை அறையிலிருந்து வெளியே வந்த இந்து, "நித்திலா எப்படி இருக்க? பார்த்து நாலு வருஷம் ஆகிடுச்சி இல்ல. காலம் எவ்வளவு வேகமா ஓடுது" என்றவளின் முகம் இளக "நடந்ததெல்லாம் கேள்விப்பட்டு ரொம்ப கஷ்டமாக இருந்தது. ஆனால் அதற்கு பிறகு நீ எங்கே இருக்கேன்னு சொல்லாமலேயே விட்டுட்டியே நித்திலா" என்றவளின் குரல் ஆதங்கத்தையும் கைகள் ஆதரவாகவும் பற்றியபடி படபடப்பாக பேசியவளையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

"இந்து வாசலிலேயே நின்னு பேசணுமா உள்ளே கூட்டி போய் பேசு" என்ற சரசு மீண்டும் வேலையில் ஆழ்ந்துவிட

"உன்னை பார்த்த சந்தோஷத்தில் உள்ளே கூப்பிடகூட மறந்துட்டேன். வா உட்கார்" என கையைவிடாமல் பற்றி அழைத்து சென்று சோபாவில் அமரவைத்தாள்.

இந்து பூஜை அறையிலிருந்து வந்தது, தன்னை வரவேற்றது, உரிமையாய் அந்த வீட்டில் நடமாடியது இனி தான் இந்த வீட்டில் யாரோ என்று எண்ணியவளுக்கு வேதனையில் பேச்சே வரவில்லை. அமைதியாக அமர்ந்திருந்தவளை கண்ட இந்து, "நித்திலா ஏன் எதுவுமே

பேசமாட்டென்ற ?" என்றாள்.

"ம்.. அதெல்லாம் ஒன்னும் இல்லை. மனம் போல கல்யாணம் அமைந்திருக்கு உனக்கு இன்று போல என்னைக்கும் நீ சந்தோஷத்துடன் இருக்கணும்" என கையிருந்த அன்பளிப்பை இந்துவின் முன் நீட்டினாள்.

"இரு இரு அவரும் உள்ளே இருக்கார் ரெண்டு பேரும் சேர்ந்து வாங்கிக்கிறோம்" என்றவள் உள்ளே செல்ல நித்திலாவிற்கு அனல் மேல் நிற்பது போல தவிப்பாக அமர்ந்திருந்தாள்.

"நித்திலா இவர் தான் என் வீட்டுக்காரர் கிஷோர்" என தன் பின்னால் வந்தவனை சுட்டிக்காட்ட எழுந்த நித்திலா திகைத்து நின்றாள்.

இவனா இந்துவின் கணவன் அப்போது நிரஞ்சன்? என அவள் கண்கள் நிரஞ்சனை தேடி அலைபாய அறைவாசலில் தன்னையே பார்த்தபடி நின்றிருந்தவனை கண்டவளுக்கு ஐயோ என்று இருந்தது. இந்து நித்திலாவை தன் கணவனுக்கு அறிமுகபடுத்தியதோ, இருவரும் நித்திலா நிரஞ்சனை பார்த்து ரகசியமாக சிரித்துக்கொண்டதோ எதுவுமே மனதில் பதியவில்லை.

"நித்திலா..." என இந்து அவளை உலுக்க சுயநினைவிற்கு வந்தவள் தன் அன்பளிப்பை இருவரிடமும் கொடுத்துவிட்டு ஒரு வார்த்தைக்கூட பேசாமல் வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

தாங்கள் அவளை பார்த்து சிரித்ததால் வந்த வெட்கம் என நினைத்து இந்துவும் கிஷோரும் சிரிக்க, நித்திலாவின் மனதை படித்தவனாக அவள் முதுகையே வெறித்த நிரஞ்சன் எரிச்சலுடன்," அறிவுகெட்ட அவசரகுடுக்கை" என முணுமுணுத்துவிட்டு தன் அறைக்கு சென்றான்.



## அத்தியாயம் –21

காலையில் எழும் போதே தலை விண்ணென்று தெரித்துவிடுவது போல வலித்தது.இரவு நடந்ததெல்லாம் நினைவிற்கு வந்தது. மாலை கோபத்துடன் வீட்டிற்கு வந்தவளுக்கு மனமே ஆறவில்லை. இப்படியெல்லாம் கூட நடக்குமா என்று இருந்தது. தான் நிரஞ்சனை உயிராய் நினைக்க அவன் இந்துவை காதலிக்க, இந்து வேறொருவனை காதலிக்க அவனை மணக்க நிரஞ்சனின் உதவியை நாட அவனும் இருவருக்கும் கல்யாணம் செய்துவைக்க நினைக்க நினைக்க நித்திலாவிற்கு நிரஞ்சனின் மீது அளவில்லாத கோபம் வந்தது.

அத்தனை உணர்ச்சிகளையும் மறைத்து இரவு நடந்த டின்னரில் அனைவரிடமும் புன்னகையுடன் பேசியவளின் அனல் பார்வை நிரஞ்சனை மட்டுமே தாக்க, அதை உணர்ந்தவனாக நிரஞ்சனின் பார்வையும் அவளை மட்டும் குறைசொல்வது போல பார்த்தது.இரவு மொட்டைமாடியில் பனியில் நடந்துக்கொண்டு இருந்தவனை பார்த்த நித்திலா எதையும் யோசிக்காமல் அவனை நோக்கி சென்றாள். யோசனையுடன் பின்னந்தலையை தடவியபடி கீழே பார்த்துக்கொண்டு நடந்து வந்தவன் கண்கள் பார்வையில் சுடிதார் அணிந்த இரு பாதங்கள் தென்பட நிமிர்ந்து பார்த்தான்.

எதிரில் நின்றிருந்தவளை கண்டதும் சுற்றி பார்த்தவன் குரலை தழைத்து, "நீ எதுக்கு இப்போ வந்தே ? மணி என்ன ஆகுது ? போய் படு ?" என்றவன் அவள் பதிலை எதிர்பாராமல் திரும்பி நடக்க நித்திலா பிடிவாதமாக அவன் எதிரில் வந்து நின்றாள்.

அவள் மீது மோதி விடுவோம் என்ற நிலையை கஷ்டப்பட்டு தவிர்த்தவன், "சொல்றது உன் மரமண்டைல ஏறல போய் படு" என்றான் கோபமாக.

வந்த கோபத்தை அடக்கியவளாக, "போறேன் அதுக்கு முன்னால் எனக்கு உங்களோடு பேசணும். என்னை மரமண்டைன்னு சொல்றீங்களே உங்களுக்கு கொஞ்சமாவது மூளை இருக்கா?" என பொரிய

"ஏய் என்ன? பேச்செல்லாம் பெரிசா இருக்கு. பேசாம கிளம்பு. என் ஆத்திரத்தை கிளப்பாதே" என்றவன் திரும்பி படியிறங்கி தன் அறைக்குள் நுழைய நித்திலா வேகமாக அவன் பின்னோடு அவன் அறையில் நுழைந்தாள்.

"நித்திலா எதுக்கு பின்னாலேயேவர, என் கோபத்தை கிளராம வெளியே போ" என குரலை உயர்த்தாமல் அழுத்தமாக சொன்னான்.

"போறேன் அதுக்கு முன்னால் உங்களை நல்லா நாலு கேள்வி கேட்காம போகமாட்டேன். என்ன மனுஷன் நீங்க? நாலு வருஷமா காதலித்த பொண்ணுகிட்ட காதலை கூட சொல்ல மாட்டீங்களா? இப்போ காதலிச்ச பொண்ணுக்கே கல்யாணம் செய்துவைக்கிறீங்க. பெரிய தியாகியா நீங்க. இது முன்னாலேயே எதிர்பார்த்து தான் கல்யாணம் செய்துக்கலாமான்னு என்னை கேட்டீங்களா? இப்படி நேரத்துக்கு நேரம் பச்சோந்தி மாதிரி மனசை மாத்திக்க உங்களால் எப்படித்தான் முடியுதோ? உங்களை போய் காதலிச்சேன்னு நினைக்கவே அருவருப்பா இருக்கு" என தன் அத்திரத்தை கொட்ட

"ஷட் அப் நித்திலா" என்று கர்ஜித்தவனின் குரலிலும் அவன் கனல் பார்வையிலும் அடங்கியவள் அப்படியே நின்றாள்.



அவளை நெருங்கி வந்தவன், "காதல்னா என்னன்னு தெரியுமா உனக்கு? நாம காதலிக்கிறவங்க மேல கொஞ்சமாவது நம்பிக்கை வைக்கணும். என் மேல் கொஞ்சமாவது நீ நம்பிக்கை வச்சியா? அப்படிப்பட்ட நீ காதலை பத்தி பேசாதே. என் காதல் உண்மை என்றதால் தான் திரும்ப உன்னை என் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்தியது. உன்னுடைய ஒதுக்கத்துக்கு காரணம் தெரியாமல் தவித்தபோதும் பொறுமையோடு உன்னிடம் என் காதலை சொல்ல வைத்தது. ஆனால் நீ சரியான சந்தேக பிசாசு.

என்ன சொன்ன நாலு வருஷமா காதலித்த பொண்ணா? ஹூம்..! உன்னை என் நினைவு தெரிந்த நாளா காதலிக்கிறேன். என் காதலை நான் என்னைக்குமே வெளிபடுத்தவில்லை. காரணம் நீ சின்ன பொண்ணு. படிக்கும் பொண்ணு. உன் மனசில் காதலை விதைக்க எனக்கு விருப்பம் இல்லை. உரிய நேரம் வந்ததும் உன் சம்மதத்தோடு மாமாவிடம் நானே பேசி சம்மதம் வாங்கலாமென்று இருந்தேன். நான் என் மனதை உன்னிடம் வெளிப்படுத்தாவிட்டாலும் உன் காதலை நான் எல்லாவிதத்திலும் தெரிந்துவைத்து இருந்தேன். என்னையும் அறியாமல் குற்றாலத்தில் என் மனம் உன்னிடம் வெளிப்பட்டுவிட்டது. அதை நீ புரிந்துக்கொண்டு விட்டாய் என நான் தவறாக நினைத்துவிட்டேன். கோவிலுக்கு போய்விட்டு வரும்போது உன்னிடம் நேரடியாக சொல்லணும்னு ஆசையாக வந்தேன். ஆனால் என்ன நடந்ததோ நீ காரணமே இல்லாமல் என்னிடம் ஒதுங்கி போனாய். ஆனால் என்னைக்கு நீ உன் மனம் திறந்து எல்லாத்தையும் கொட்டினாயோ அன்னைக்கு தான் எல்லாவற்றிற்கும் எனக்கு அர்த்தம் புரிந்தது.

இன்னைக்கு சொல்றேன் உன் காதை திறந்து வைத்து நல்லா கேட்டுக்கோ. நான் காதலித்தது உன்னை தான். இந்து எனக்கு தங்கை மாதிரி தான் பழகினா. அவ ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் இயல்பாக பழகியதை நீ தவறாக எடுத்துகிட்ட. அம்மா கல்யாணம் பத்தி என்னிடம் பேசியபோது பொண்ணு நீதான்னு எனக்கு தெரியவே தெரியாது. என் மனதில் இருந்த பொண்ணு நீ தான்னு நானும் அம்மாவிடம் சொல்லவில்லை. உன் அவசரபுத்தியாலே விஷயத்தை அரைகுறையாக தெரிந்துக்கொண்டு உன்னையும் வருத்தி என்னையும் வருத்தி ஒரு நாள் ரெண்டு நாள் இல்லைடி நாலு வருஷம். எப்படியோ இருந்திருக்கவேண்டிய நம்ம வாழ்க்கையை நீயே கெடுத்துவிட்டாய்.

என் பிஸ்னசில் எத்தனையோ ஆண்களும், பெண்களும் வருவாங்க எல்லோருடனும் இப்படி என்னை சம்மந்தபடுத்தி பார்த்து காலமெல்லாம் வருத்தபடுவியா? இப்படி ஆரம்பமே அவசரமும், குழப்பமும், நம்பிக்கை இல்லாமல் ஆரம்பிக்கும் வாழ்க்கை எப்படி நல்லா இருக்கும்? ஆரம்பத்திலிருந்து எல்லாத்தையும் ஒழுங்கா நினைத்து பார்த்திருந்தால் உனக்கு புரிந்திருக்கும். படிச்சிருந்தும் சுயமாக சிந்திக்க தெரியாதவளா இருக்க" என தன் மனதை திறந்து கொட்டி தீர்த்தான்.

நிரஞ்சனின் ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனதில் ஆழமாக பதிய அவன் தன்னை காதலித்ததை எண்ணி மகிழ்வதா? தன் தவறால் தன் காதலை தானே இழக்கவேண்டிய சூழ்நிலையை எண்ணி அழுவதா என புரியாமல் நின்றவளுக்கு அழமட்டுமே முடிந்தது. தன் கைகளில் முகம் பதித்தவள் மண்டியிட்டு அமர்ந்து அழ, அவளை சமாதானபடுத்த எந்த முயற்சியும் எடுக்காத நிரஞ்சன் பால்கனியில் நின்றான்.



எப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தன் காதலை சொல்லி இருக்க வேண்டியது, காலமெல்லாம் அந்த நினைவை பொக்கிஷமாக சேகரித்து வைத்து நினைத்து நினைத்து மகிழ்ந்திருக்க வேண்டிய இனிய நினைவை இப்படி சமயசந்தர்ப்பம் இல்லாமல் சொல்லவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கிய நித்திலாவின் மேல் கோபமும் ஆத்திரமும் ஒருசேர வந்த போதும் அவளின் அழுகை அவனை பாதித்தது. இருந்தும் தன் கலக்கத்தை வெளிக்காட்டாமல் கைகளை இறுக கட்டிக்கொண்டு வேதனையான முகத்தை மறைத்தபடி இருட்டை வெறித்தபடி நின்றிருந்தவனின் மனம் வேதனையில் மூழ்கி இருந்தது.

மெல்ல அழுகை குறைய கண்களை துடைத்துக்கொண்டு எழுந்த நித்திலா கைகட்டி இருட்டை வெறித்துக்கொண்டு நின்றவனின் முதுகை பார்த்தபடி சிலநொடிகள் நின்றவள் அந்த அறையிலிருந்து வெளியேறினாள். நித்திலா சென்ற திசைக்கு எதிர்பக்கமிருந்து வந்த சரசு அழுதபடி செல்லும் நித்திலாவையும், தளர்ந்து போய் நிற்கும் மகனையும் வேதனையுடன் பார்த்தார்.

## அத்தியாயம் –22

அடுத்துவந்த ஒருவாரம் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தது. நிரஞ்சனும் நித்திலாவும் தங்கள் கவலைகளை மறக்க வேலையில் மூழ்கடித்துக்கொண்டனர். கூடியவரை இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமலும், தவிர்க்கமுடியாத நேரத்தில் நேருக்கு நேர் பேசிக்கொள்ளாமலும் இருந்தாலும் ஒருவரை அறியாமல் மற்றவரை கவனித்துக்கொண்டே இருந்தனர்.

நல்ல நேரத்தில் மயூரா ரிசாட் திறப்புவிழா அமர்க்களமாக நடந்துமுடிந்தது. நிரஞ்சனுக்கு அங்கேயே பல நல்ல கான்ட்ராக்ட் கிடைக்க நிரஞ்சனும் இரு நாட்களில் அதைப்பற்றி பேசி முடிவெடுக்கலாம் என்று சொல்லி அனுப்பினான்.

வந்தவர்கள் ஒவ்வொருவராக கிளம்பி செல்ல நிரஞ்சனும், சரசுவும் கூட கிளம்பிவிட்டனர். மற்றொரு காரில் நால்வரும் கிளம்ப ரிஷியும் சகாதேவனும் ஏதேதோ பேசிக்கொண்டிருக்க, நித்திலா அமைதியாக வெளியே பார்த்தபடி வந்துக்கொண்டிருக்க, வைதேகி மட்டும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தொண்டையில் அடைத்த பந்தை போல அவர் கண்ட காட்சிகள் உறுத்திக்கொண்டு இருந்தது.

"அம்மா இது ரிதன்யா. நம்ம ஆடிட்டர் அங்கிள்கிட்ட ஜூனியரா ப்ராக்டீஸ் பண்ணிட்டு இருக்காங்க" என அந்தப்பெண்ணை அறிமுகபடுத்தும் போதே ரிஷியின் குரலும், முகமும் வைதேகிக்கு ஏதோ விஷயத்தை உணர்த்தியது.

அத்தனை வேலைகளில் கவனம் செலுத்தினாலும் ரிஷி அவ்வப்போது ரிதன்யாவிடம் நேரடியாகவும் ஜாடையாகவும் பேசியதை கவனித்த வைதேகிக்கு இருவரின் இணக்கமும் வயிற்றில் புளியை கரைத்தது.

நித்திலாவை பார்க்க, அவளோ வந்தவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தாள். ரிஷியின் பார்வை மறந்தும் நித்திலாவின் பக்கம் திரும்பவில்லை என்பதையும் கண்டவர் சந்தேகத்தை உறுதிபடுத்துவதாக இருந்தது. வீடுவந்ததும் தன் அறைக்கு நித்திலா சென்றுவிட சோபாவில் அமர்ந்த ரிஷியை பார்த்த வைதேகி, "ரிஷி ஒரு



வழியா ரிசாட் வேலை முடிச்சாச்சு. இனி அடுத்து உன் கல்யாணம் தான்."

"ஆரம்பிச்சிடீங்களா.." என சலிப்புடன் சொன்னான்.

"இன்னைக்கு ஈவனிங் ஜோசியரை வர சொல்லி சொல்ல போறேன் நீ எங்கேயும் போய்டாதே. நல்ல நாள் குறிக்கணும். அப்புறம் நிச்சயமும் கல்யாணமும் ஒண்ணா வச்சிக்கலாம். இனியும் நாளை தள்ளி போடக்கூடாது. நித்திலாவை சீக்கிரமே வீட்டுக்கு வரவைக்கணும்" என பேசிக்கொண்டே போக ரிஷி எரிச்சலுடன் தன் அம்மாவையும் அப்பாவையும் பார்த்தான்.

"வைதேகி இப்போ எதுக்கு இவ்வளவு அவசரம் நிதானமா செய்யலாமே"

"அதெல்லாம் முடியாது இவ்வளவு நாள் நான் பொறுமையா இருந்தேன். இனி முடியாது. ரிஷி கல்யாணத்துக்கு சம்மதித்தே ஆகணும்" என பிடிவாதமாக சொன்னார்.

எழுந்த ரிஷி, "சரிம்மா நான் கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன்" என்றதும் வைதேகிக்கு அதிசயமாக இருந்தது. தான்தான் இல்லாததை எல்லாம் கற்பனை செய்துக்கொண்டோமோ என ரிஷியை பார்க்க அவனோ, "ஆனால் பொண்ணு ரிதன்யா" என்ற வெடியை கொளுத்திபோட, வைதேகியின் உற்சாக மனநிலை வெடிக்காமல் போனவேகத்தில் திரும்பிவந்த தீபாவளி ராக்கெட்டை போல புஸ்சென போனது.

"ரிஷி என்னடா இதெல்லாம்?" என்ற வைதேகியின் சத்தத்தை கேட்டு என்னவோ ஏதோவென நித்திலா ஹாலுக்கு ஓடிவந்தாள்.

அவளை பார்த்த வைதேகிக்கு தான் செய்துக்கொடுத்த சத்தியம் நினைவில் வந்தது. சில நாட்களாக தன் வழக்கமான சிரிப்போ, பேச்சோ இல்லாமல் நடமாடியவளை வேலை பளு என்று எண்ணி ஒன்றும் கேட்காமல் விட்டது தவறோ, இவளுக்கு எல்லாம் முன்னாலேயே தெரியுமோ அதனால் தான் இப்படி மனதை மறைக்க முடியாமல் வேலை வேலை என அலைந்தாளோ என்ற எண்ணத்துடன் கவலையுடன் பார்த்தார்.

வைதேகி கோபத்துடன், "ரிஷி இதுக்கு நான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன். நித்திலா இந்த வீட்டு மருமகன்னு நாலு வருஷத்துக்கு முன்னாலேயே முடிவுசெய்தது. உனக்கு மனசாட்சியே இல்லையா? உனக்காகவே காத்திட்டு இருக்கவளோட மனசு பாடுபடும்னு நீ நினைக்கவே இல்லையா? ஆசைகாட்டி மோசம் செய்தது போல செய்யாதே ரிஷி அவ பாவம். ஏற்கெனவே தனக்கு யாருமில்லைன்னு மனசுக்குள் புழுங்கிக்கொண்டு இருப்பவளை கைவிட்டுடாதே. அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துகொடுப்பது நம்ம பொறுப்பு என என் தம்பிக்கு கடைசி நேரத்தில் நான் சத்தியம் செய்து கொடுத்திருக்கேன். அந்த சத்தியத்தை காப்பாத்து ரிஷி" என வைதேகி கையெடுத்து கும்பிட்டு கண்கலங்க கேட்க

"அத்தை ப்ளீஸ், அத்தானை ஒன்னும் சொல்லாதீங்க. எனக்கு எந்த கஷ்டமும் இல்லை. எனக்கு இதெல்லாம் முன்னாலேயே தெரியும்" என்றவள் வைதேகியின் பார்வையில் தலைகவிழ்ந்தாள்.

"உனக்கும் தெரியுமா? என்னங்க பார்த்தீங்களா இவங்க ரெண்டு பேரையும்" என தன் கணவரை பார்க்க



"எனக்கும் தெரியும் வைதேகி" என்றதும்

"அப்போ எனக்கு மட்டும் தான் தெரியாதா? இதை தான் அப்படி கூடிகூடி அப்பாவும் பிள்ளையும் பேசினீங்களா? இன்னும் எனக்கு தெரியாம என்னவெல்லாம் நடந்திருக்கு? அவன் சின்ன பையன், நீங்க அவனுக்கு எடுத்து சொல்லி இருக்கணுமில்லையா? என் தம்பியிடம் நானே தானே இந்த கல்யாண பேச்சை ஆரம்பித்தேன். அதனால் தானே அவனும் சம்மதித்தான். இப்போ திடீர்னு வேற யாரோ ஒரு பொண்ணை கல்யாணம் செய்துவைக்க சொல்லி கேட்கிறானே இது நல்லாவா இருக்கு. என் தம்பிக்கு நான் செய்து கொடுத்த சத்தியம் என்னாவது?" என கோபத்துடன் கேட்க

"அம்மா ப்ளீஸ் ரிலாக்ஸ். நான் சொல்வதை கேளுங்க. பெரியவங்க நீங்க ரெண்டு பேரும் பேசினா போதுமா? எங்களையும் கேட்டிருக்க வேண்டாமா? நித்திலா என்னை முதன்முதலில் பார்த்தபோது என்ன சொல்லி கூப்பிட்டான்னு நீங்க மறந்திருக்கலாம் நான் மறக்கவில்லை. அண்ணான்னு சொல்லி கூப்பிட்டா. அன்றிலிருந்து அவளை என் தங்கையாக தான் நினைக்கிறேன். நான் எப்படிம்மா...?" என சிறிது நிறுத்தியவன் "அதுமட்டுமில்லை, நித்திலாவும் என்னை நேசிக்கவில்லை" என்றதும்

"உனக்கெப்படி தெரியும் உனக்காக அவ மனதை மறைத்திருக்கலாமில்லையா?" என்றார் வைதேகி

"எனக்கு தெரியும்மா...! ஏன்னா நித்திலா நிரஞ்சனை விரும்பும் போது என்னை எப்படி கல்யாணம் செய்துக்கொள்ள சம்மதிப்பா?" என உண்மையை போட்டு உடைக்க வைதேகியைவிட நித்திலா அதிர்ந்து போனாள்.

எப்படி தெரியும் தன்னை தவிர யாருக்கும் தெரியாத உண்மை ரிஷிக்கு எப்படி தெரியும் நிச்சயம் நிரஞ்சன் சொல்லி இருக்கமாட்டான். பின்னர் எப்படி என குழம்பியவளை பார்த்த ரிஷி,"நித்தி குழம்பாதே என்னிடம் உங்கள் இருவரையும் கண்காணிக்க சொன்னதே அப்பா தான்" என்று சகாதேவனை பார்த்தான்.

"மாமாவா..." என முணுமுணுக்க சகாதேவன் வாஞ்சையுடன் அவளை பார்த்தார்.

பாசத்துடன் அவள் தலையை வருடியவர்,"நித்திமா நான் உங்க ரெண்டு பேரோட முதல் பார்வையிலும் உங்களை புரிந்துக்கொண்டேன். ரஞ்சன் உன்னை ஆர்வத்துடன் பார்த்ததும், பேச துடித்ததும், உனக்குள் தெரிந்த ஒரு எச்சரிக்கையுடன் கூடிய ஒதுக்கமும் உங்களை கண்காணிக்க வைத்தது. முதலில் இங்கே ரொம்ப நாள் தங்க முடியாதுன்னு சொன்ன ரஞ்சன் ஹோட்டலுக்கு போனதுமே ரிஷிக்கு போன் செய்து தங்க சம்மதித்தது, பூமிபூஜை அன்று உங்கள் இருவரின் பார்வை பரிமாற்றம்னு உங்களுடைய மனதை வெட்டவெளிச்சம் ஆகிவிட்டது. ஏதோ ஒரு கோபம் உனக்கு ரஞ்சன் மீது இருக்கு என புரிந்தது. நிச்சயம் நேரடியாக நீ எதையும் சொல்லமாட்டாய் என்று எனக்கு தெரியும். அதனால்தான் ரிஷியிடம் சொல்லி உங்களை கண்காணிக்க சொன்னேன். எனக்கு நீ என் மருமகளாக வரவில்லை என்ற சிறு வருத்தம் இருந்தாலும் மகளாக இருக்கட்டுமே என என்னை நானே சமாதானபடுத்திக்கொண்டேன், உன் சந்தோஷமும் எனக்கு முக்கியம்" என்றவர் தன் மனைவியின் பக்கம் திரும்பினார்.

"வைதேகி,? நமக்கு ஒரு பொண்ணு இருந்தா ரஞ்சனுக்கு கல்யாணம் செய்து கொடுப்பேன் நீ சொன்னது



நினைவு இருக்கு இல்லையா? இன்னைக்கு நித்திலாவை உன் மகளாக நினைத்து சம்மதம் சொல்லு. நமக்கு நம்ம குழந்தைங்க சந்தோஷம் முக்கியம்.யோசிக்காதே வைதேகி நாம தான் நித்திலாவுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக்கொடுக்கணும் அவளோட மனசுக்கு பிடித்தவனுக்கு. இதுக்கு உன் தம்பியோட ஆத்மா நிச்சயம் சந்தோஷப்படும்" என்றார்.

மனம் தெளிவடைந்த வைதேகி,"ஆமாம் நம்ம குழந்தைங்க சந்தோஷம் முக்கியம், அதுக்காக ஒரு குழந்தையை கைவிட முடியாம தான் நான் தவித்தேன். நித்திக்கும் ரஞ்சனை பிடித்திருக்கும் போது எனக்கு என்ன தடை இருக்க போகுது? நாளைக்கு சரசு கிளம்பறாங்க இல்லையா அதுக்கு முன்னால் கல்யாணத்தை பேசிமுடிச்சிடுவோம்" என்றார் சந்தோஷத்துடன்.

"இல்ல அத்தை. எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். அத்தான் கல்யாணம் முடியட்டும். நான் கொஞ்சம் நாள் உங்ககூட வந்து தங்கி இருக்கேன். மத்ததை அப்புறம் பேசிக்கலாம்" என சொல்லும் போதே கண்கள் கலங்கியது.

"என்ன இப்போ கல்யாணம் வேண்டாமா..? நீ தாராளமா எங்க கூட தங்கி இருக்கலாம். இன்னைல இருந்தே எங்களோடு இரு. அதுக்காக வயசு பொண்ணு உன்னை வீட்டில் வைத்துக்கொண்டு ரிஷிக்கு கல்யாணம் செய்ய முடியுமா? என்னங்க முதலில் சரசுகிட்ட பேசலாம். இன்னைக்கு முழுநாளும் நல்ல நாள் தான், கிளம்புங்க"

"அத்தை ப்ளீஸ் வேண்டாம். இந்த கல்யாணம் நடக்காது. என்னை கம்பெல் பண்ணாதீங்க" என்றவள் தன் அறைக்கு செல்ல மூன்றுபேரும் ஒரே நேரத்தில்

"நித்திலா..." என அழைத்தும் தன் அறைக்கதவை அவள் திறக்கவே இல்லை.

"என்னம்மா இது ? ஏன் இவ இப்படி இருக்கா ?" என ரிஷி சலித்துக்கொள்ள

"என்னவா இருக்கும் ? அவங்களுக்குள்ள அப்படி என்ன பிரச்சனை ? அவளும் சொல்ல மாட்டேன்றா ரஞ்சனிடம் போய் எப்படி கேட்கமுடியும் ?" என வைதேகியும் ஆற்றாமையுடன் புலம்ப சகாதேவன் நிதானமாக யோசித்தார்.

நித்திலாவின் பதிலில் அதிகம் கவலை அடைந்த வைதேகி சரசுவை தனியாக அழைத்து பேசினார். அன்று இரவு இருவரின் பேச்சையும் விளக்கமாக சொன்ன சரசு,"இதில் நாம யாரும் பேசமுடியாது வைதேகிம்மா. இது அவங்களுடைய வாழ்க்கை. அவங்க ரெண்டு பேரும் பேசி தீர்த்துக்கொண்டால் தான் உண்டு. நாம் தலையிட்டு பேசி சமாதானபடுத்தினாலும், கடமைக்காக சேரும் இருவரின் வாழ்க்கையுமே கேள்விக்குறியாக மாறிவிடுமே" என்ற சரசுவின் வார்த்தையில் இருந்த உண்மை புரிந்தது.

இருந்தும் வைதேகியின் மனம் சமாதானம் அடையவில்லை. "எப்படி சரசு ? அவளுக்கு குழந்தை மனசு. எதையும் மனதில் வச்சிக்க தெரியாது. படபடன்னு பேசினாலும் சூதுவாது இல்லாதவ. உனக்கு தெரியாதது இல்லையே ?" என்று தன் பாசத்தை வெளிப்படுத்தினார்.

"ரெண்டு பேருக்குமே ஒருத்தர் மேல ஒருத்தர் உயிரை வச்சிருக்காங்க வைதேகிம்மா. அது தான் அவங்க குறுக்கே நிக்குது. அவனை சந்தேகபட்டோமே என்று அவளும், தன்னை நம்பவில்லையே என்று அவனும் கோபத்தில் இருக்காங்க. சரி நான் விஷயத்தை மட்டும் ரஞ்சன் காதில் போடறேன். இதுக்கு மேல நடப்பது



நடக்கட்டும். கடவுள் துணை இருப்பார்ன்னு நம்புவோம்" என்றவர் பெருமூச்சுடன் சென்றார்.

## அத்தியாயம் –23

நேரம் ஓடியதே தவிர நித்திலாவின் விஷயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது. சரஸ்வதி நிரஞ்சனிடம் ஜாடைமாடையாக சொல்லியும்கூட அவன் எதையும் காதில் வாங்கியதாக தெரியவில்லை. மறுநாள் இருவரும் கிளம்ப ஆயத்தமாகி சொல்லிக்கொள்ள ரஞ்சனும், சரஸ்வதியும் ரிஷி வீட்டிற்கு வர அனைவரும் வெளிக்கு சிரித்தாலும் ஒருவித இறுக்கத்துடனேயே இருந்தனர்.

வைதேகிக்கோ நிரஞ்சனிடம் நேரடியாக கேட்டுவிட நாக்கு துடித்தது. தன் தம்பி மகளின் வேதனையை அறிந்திருந்த போதும் சகாதேவனின் கட்டளைப்படி வாய்மூடி அமைதியாக இருந்தாலும், இருவருக்காகவும் கடவுளை வேண்டியபடி இருந்தது. நிரஞ்சன் ரிஷியிடம் பேசினாலும் அவன் கண்கள் அறையில் இல்லாத நித்திலாவை தேடியது.

"நித்திலா இல்லையா வைதேகிம்மா" என்றார் சரசு.

"கோவிலுக்கு போய் இருக்கா வந்திடுவா" என மெல்லிய குரலில் சொன்னவர் நிரஞ்சனை பார்த்தார். அவனோ அமைதியாக முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அமர்ந்திருந்தான்.

சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தவர்களிடம், "அப்போ நாங்க கிளம்பறோம் அங்கிள், நேரம் ஆகுது, வரேன் ஆன்ட்டி, வரேன் ரிஷி" என்றவன் "அம்மா கிளம்பலாம்" என சொல்லிக்கொண்டே எழ சரசுவும் ஏதும் சொல்லாமல் இனி நடப்பது நடக்கட்டும் என கிளம்பி காரின் அருகில் வர நித்திலா வேகமாக அவர்களின் காரை நோக்கி

வந்தாள்.

" அத்தை, நீங்க கிளம்பிடுவீங்கன்னு தெரிந்து தான் அவசரம் அவசரமாக ஓடிவந்தேன், இந்தாங்க பிரசாதம் இன்னைக்கு மோதகமும், கொழுக்கட்டையும் செய்யசொல்லி அர்ச்சனை பண்ணிட்டு வந்தேன்" என பாதி பிரசாதத்தை சரசுவின் கையில் கொடுத்தாள்.

கண்கலங்க வாங்கிய சரசுவிற்கு என்ன சொல்வதென தெரியாமல் நிற்க, "அத்தை நான் சந்தோஷமா இருக்கேன். அவர் மனதில் நான் இருக்கேன்னு அந்த ஒரு சந்தோஷத்தோடே இருந்திடுவேன். பாருங்க நேரமாகுது நீங்க கிளம்புங்க. அடிக்கடி போன் பண்ணுங்க. நானும் பண்றேன்" என சரசுவின் கை பிடித்து காரின் கதவை திறந்துவிட்டு அமரவைத்து கார் கிளம்பியதும் கையசைத்தவள் கார் கேட் வரை செல்லும் வரை அமைதியாக தன் வேதனையை மறைத்தபடி நின்றவளுக்கு அதற்கு மேல் முடியாமல் உள்ளே ஓடியவள் தன் அறைக்கு சென்று குலுங்கிகுலுங்கி அழ ஆரம்பித்தாள். மூவரும் செய்வதறியாமல் திகைத்து நின்றனர்.

தன் அறைக்கதவை திறக்கும் சப்தமும் அதை தொடர்ந்து அருகில் வந்து அமரும் அசைவும் தெரிய, அடுத்து தன்னை சமாதானபடுத்த ஏதாவது பேசுவார்கள் என உணர்ந்தவளாக, "அத்தை ப்ளீஸ் என்னை சமாதானம் செய்ய முயற்சி செய்யாதீங்க. நிரஞ்சனின் மனதை ஜெயிக்க தெரிந்த எனக்கு அதை தக்க வைத்துக்கொள்ள தெரியாமல் போச்சு. என்னை தேடிவந்த வாழ்க்கையை எட்டி தூர எறிஞ்சிட்டேன். அவர் மனசை எவ்வளவு காயபடுத்த முடியுமோ அவ்வளவு காயபடுத்திட்டேன். நான் அவரைவிட்டு விலகி போவது தான் நல்லது" என



சொல்லிக்கொண்டு இருந்தவளை

"விலகி போய் நாலு வருஷம் எங்கே இருக்கேன்னு சொல்லாமல் ஆட்டம் காட்டியது போல செய்யும் எண்ணமா?" என நிரஞ்சனின் குரல் காதருகில் கேட்க சரேலென திரும்பி பார்த்தாள். அவனே தான் எதிரில் அவனை பார்த்ததும் விழிகள் விரிந்தன,

என்ன என புருவம் உயர்த்தியவனின் மார்பில் இரு கைகளையும் மூடி குத்தியவளின் கரத்தை பற்றி தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டவனின் அணைப்பில் தன்னை பொருத்திக்கொண்டவள் அவன் மார்பில் முகம் புதைத்து,"என்னைவிட்டுட்டு போயிட்டீங்கன்னு நினைத்தேன் அத்தான். ப்ளீஸ் என்னை மன்னிச்சிடுங்க. நான் உங்களை புரிந்துக்கொள்ளாமல் பேசியதெல்லாம் தப்பு" என்றவளின் வாயில் ஒற்றைவிரல் வைத்து அவள் பேச்சை நிறுத்தியவன் அவள் முகத்தை பற்றி நிமிர்த்தினான்.

"தப்பு உன் மேல் மட்டும் இல்லைடா. என் மேலும் இருக்கு. உன் நிலையில் யாருக்கும் கோபம் தான் வரும். ஆனால் இந்து கல்யாணம் முடிந்து வந்த பிறகும் கூட நீ என்னை புரிந்துக்கொள்ளாதது எனக்கு கஷ்டமாக இருந்தது. எதையும் புரிஞ்சிக்காம பிடிவாதமா இருக்கேன்னு எரிச்சல் வந்தது. அதான் ஒரு பத்து நாள் ஒன்னும் சொல்லாமல் தவிக்கட்டும்னு விட்டேன். ஆனால் நானும் நிம்மதியா இல்லை. இன்னைக்கு கூட பேசாமல் கிளம்பி போயிட்டு எல்லா வேலையும் முடிச்சிட்டு ரெண்டு நாள் கழித்து அம்மாவோடு வந்து அங்கிள்கிட்ட பேசலாம்னு நினைத்தேன். ஆனால் மனசு கேட்கலை நீ எப்படியும் அழுதே தீர்ப்பன்னு எனக்கு தெரியும். அதோடு அவங்க மூணு பேரும் உன்னால் எதுக்கு கஷ்டபடனும்னு

நினைத்தேன் போனா போகுது நம்ம நிலா தானேன்னு சமாதானம் பேசவந்தேன்'' என சிரித்தான்.

"எல்லாம் இந்த பேரால வந்த வேதனை. வச்சீங்க பாரு நிலா உலான்னு'' என சொல்லிக்கொண்டே அவன் நெஞ்சில் ஓங்கி குத்தினாள்.

"ஹே... இதெல்லாம் உன் ஸ்டேட்மென்ட் இல்லவே இல்லை'' என சீரியசாக சொல்ல

"என்ன ஸ்டேட்மென்ட்'' என விளங்காமல் அவள் விழிக்க

"அதான் அன்னைக்கு ஹோட்டல்ல உன் ஹப்பி எப்படியெல்லாம் இருக்கணும்னு சொன்னியே'' என நினைவுக்கு கொண்டுவர நாணத்துடன் சிரித்தவளின் கரம்பற்றி,"கூடவே அன்னைக்கு காரில் சொன்னேனே , நீ கோபமாக இருந்தால் உன்னை கெஞ்சி கொஞ்சி கன்னம் வருடி, உன் தலைகோதி, இப்படி ஆதரவாக என் தோளணைத்து'' என சொல்லிகொண்டே அவள் கன்னத்தில் தன்உதடுகளால் கோலமிட நித்திலா தன்னை மறந்து அமர்ந்திருக்க அவள் காதருகில் கிறங்கிய குரலோடு, "நிலா இந்த நிலையில் நம்ம வீட்டு பெரியவங்க நம்மை பார்த்தா என்ன நினைப்பாங்க'' என்றதும் வேகமாக அவனை தள்ளிவிட எதிர்பாராத இந்த சம்பவத்தால் நிலைகுலைந்து சாய்ந்தவன் சுதாரித்து எழுவதற்குள் கட்டிலில் இருந்து எழுந்து கதவருகில் சென்று நின்றாள்.

"நான் ரொம்ப நல்ல பொண்ணு உங்களை மாதிரி பேட் பாய் கூட சேர்ந்தா கெட்டு போய்டுவேன், நான் போறேன்பா'' என சிரிப்புடன் கீழே செல்ல நிரஞ்சன் சிரிப்புடன் அவளை பின்தொடர்ந்து வந்தான்.

நித்திலாவின் வரவை எதிர்பார்த்தது போல ரிஷி படிக்கட்டின் அருகில் நின்றிருக்க சிரிப்புடன் ஓடிவந்தவள் அவனை பார்த்ததும் வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றாள்.



"அடடா இதுவல்லவோ ஒரு பெண்ணுக்கு அழகு. அம்மா சீக்கிரம் ஓடிவந்து நம்ம நித்தி வெட்கப்பட்டு சிரிப்பதை பாருங்க'' என சொல்ல பக்கத்து அறையிலிருந்த பெரியவர்கள் மூவரும் மலர்ந்த முகமும் நிறைந்த மனமுமாக வர

நித்திலா வெட்கத்துடன், "ஐயோ அத்தான் கிண்டல்பண்ணாதீங்க'' என வைதேகியின் தோளில் சாய்ந்துக்கொண்டாள்.

"என் ராஜாத்தி'' என அவள் கன்னம் வழித்த சரசு மனநிறைவுடன் தன் மகனை பார்க்க, அவன் சந்தோஷமாக சிரிப்புடன் ரிஷியுடன் கைக்குலுக்கிக்கொண்டு இருந்தான்.

மனநிறைவுடன் அனைவரும் கலந்து பேசி அடுத்த முகூர்த்த நாளிலேயே நிரஞ்சன் வீட்டு வழக்கப்படி அவர்கள் குலதெய்வம் கோவிலிலேயே நிரஞ்சன் நித்திலாவின் திருமணம் என பெரியோர்களால் நிச்சயம் செய்யப்பட்டது.

## அத்தியாயம் –24

**தி**ருநெல்வேலியில் கல்யாணமும் விருந்தும் முடிந்த அன்றே நித்திலாவை நிரஞ்சன் வீட்டில் விட்டுவிட்டு சகாதேவன், வைதேகி, ரிஷி மூவரும் கிளம்ப ஆயத்தமாயினர். அவர்களருகில் வந்த சகாதேவனும், வைதேகியும் சந்தோஷ கண்ணீருடன் பார்த்தனர். இருவரையும் ஆசிர்வத்துவிட்டு,"நித்திலா, ரஞ்சன் இருவரும் இன்னைக்கு போல என்னிக்கும் சந்தோஷமாக இருங்க. எதுவாக இருந்தாலும், மனம்விட்டு பேசுங்க'' என சொல்ல இருவரும் புன்னகையுடன் தலையசைத்தனர்.

அவர்களருகில் வந்த ரிஷி, நித்திலாவை பார்த்து புன்னகைத்தவன் நிரஞ்சனின் கரத்தை பிடித்து அழுத்திக்கொடுத்தான். "தேங்க்ஸ் ரஞ்சன்'' என்றவன் தன் கையிலிருந்த கவரை நிரஞ்சனிடம் கொடுத்தான்,

"ரஞ்சன் இது நம்ம மயூரா ரிசாட்டின் சார்பாக ஹனிமூன் சூட்டில் நீங்க தங்குவதற்காக கொடுக்கும் கிபிட் வவுச்சர்" என சொல்ல நிரஞ்சன் நித்திலாவை பார்த்து புன்னகைக்க அவள் நாணத்துடன் தலைகுனிந்தாள்.

மதிய உணவுக்குப்பின் ரிஷியின் திருமணத்திற்கு பத்து நாட்களுக்கு முன்பே வந்துவிடவேண்டும் என்ற அன்பு கட்டளையுடன் மூவரும் பிரியாவிடை பெற்றுக்கிளம்ப, நித்திலா கண்ணீருடன் அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

மெல்ல மெல்ல மாலை மயங்கி பால் நிலா வானில் பவனி வர உறவுப்பெண்களின் கேலியும், கிண்டலும் நித்திலாவை சிவக்க வைத்தது. தன் அத்தையின் கால்களில் விழுந்து வணங்கியவள் அவரின் பரிபூரண நல்லாசியுடன் நித்திலா, நிரஞ்சனின் அறைக்குள் மெல்ல நுழைந்தாள். ஏற்கெனவே பழக்கப்பட்ட வீடாக இருந்தாலும் இப்போது அவளுக்கு புதிது போல இருந்தது. அந்த வீட்டில் அவள் எங்கும் சாதாரணமாக போய்வந்தாலும் நிரஞ்சனின் அறைக்குள் நினைவு தெரிந்து இன்றுதான் நுழைகிறாள்.

அறைக்குள் வந்தவளின் பின்னாலிருந்து அணைத்தவன் "வெல்கம் டு அவர் ரூம் நிலா" என மென்மையாக சொல்ல நித்திலா புன்னகையுடன் அவன் கரத்திலிருந்து தன்னை விலக்கிக்கொள்ள எட்டி அவள் கைப்பற்றி அருகில் இழுத்தவன் மார்பில் ஒண்டிக்கொண்டாள். நிரஞ்சனின் மனம் எல்லையில்லா நிம்மதியில் இருக்க, அவள் முகத்தில் தன் முத்திரைகளை பதித்தான்.

சிவந்த முகத்தை மறைக்க அவனிடமிருந்து விலகியவள் கட்டிலில் அமர்ந்து தன் கழுத்தில் இருந்த கல்நகைகளை கழற்றி அதற்குரிய பெட்டியில் வைக்க, கட்டிலின் மறுபுறம் சாய்ந்து வந்து அமர்ந்தவன் எதிரில் கண்ணாடியில் தெரிந்த தன் மனைவியின் அழகையும், அவளின் நாணம் கலந்த சிரிப்பையும் பார்த்து ரசித்தவன், "வா பொன்மயிலே நெஞ்சம் ஏக்கத்தில் தவிக்குது..." என பாட புன்னகையுடன் நகைப்பெட்டியை எடுத்து சென்றவள் பீரோவை திறக்க அப்படியே திகைத்து நின்றாள்.



நகைப்பெட்டியை ஒருபுறமாக வைத்தவள் கண்ணை உறுத்தாத அழகிய வண்ணங்களில் இருந்த புடவை, சல்வார், ஜெய்பூர் மணப்பெண் உடை, அதோடு தான் நிரஞ்சனின் பிறந்தநாளுக்கு வாங்கிக்கொடுத்த, குற்றாலத்திற்கு அவன் அணிந்து வந்த உடை, என இருக்க மறுபுறம், காணாமல் போன தன் தலை கிளிப், பழையது என தூக்கியெறிந்த ப்ளாக்மெட்டல் கழுத்தாரம், என இருக்க கண்கள் கலங்க தன் கணவனை திரும்பி பார்த்தாள்.

"என்னடா நிலா..." என ஒரு கையை நீட்டியவனின் கைகளில் ஓடிவந்து தஞ்சமடைந்தாள்.

"சாரி அத்தான், சாரி..." என அவன் முகம் முழுக்க முத்திரை பதித்தாள்.

"ஹே... போதும்மா அழுதது. இனி இப்படி சின்ன குழந்தை மாதிரி அழக்கூடாது"என கண்டிப்பான குரலில் சொன்னான்.

"ம்ம்..."என தலையசைத்தவள், "இவ்வளவு ஆசையையும் மனதில் வச்சிகிட்டு ஏன் நீங்க ஒண்ணுமே சொல்லவில்லை"

"என்னன்னு சொல்வது? அப்போ நீ படிச்சிகிட்டு இருந்த பொண்ணு, உன் மனதில் காதலை விதைக்க எனக்கு இஷ்டமில்லை. நம்ம நிலாதானே எங்கே போகபோறான்னு நினைத்தேன். ஆனால் நாலு வருஷம் மறைந்திருந்து எனக்கு ஆட்டம் காட்டிட்ட" என சிரித்தான்.

"நீங்க முதலிலேயே சொல்லி இருந்தால் நான் ஏன் சொல்லாமல் போகபோகிறேன்" என உள்ளடங்கிய குழைந்த குரலில் சொன்னாள்.

"எதையும் வெளியே சொல்லாமல் பட்ட அவஸ்தை உனக்கெங்கே தெரியும், என் உள்ளம் தவியா தவிக்கும். அந்த தவிப்பு அடங்காம தானே நீ ஊரிலிருந்து வரேன்னு தெரிந்ததும், உன்னை பார்த்து என் காதலை சொல்லிடணும்னு நீ வரும் முன்னால் நான் ஓடிவந்தேன். இன்னும் நாலு நாளில் வர, மூணு நாளில் வரேன்னு நான் எண்ணிக்கொண்டிருந்தால் நீ ரெண்டு நாளைக்கு முன்னால் வந்து நிக்கிற. நீ அம்மாவிடம் கொஞ்சி கொஞ்சி பேசும்போது என்னிடம் அப்படி பேசமாட்டாயா, உரிமையோடு பழகமாட்டாயான்னு ஏக்கமாக இருக்கும். இதோ பார்" என மேஜை மீதிருந்த தன் பெற்றோரின் போட்டோ இருந்த பிரேமை எடுத்தவன் அந்த போட்டோவின் பின்னாலிருந்து ஒரு போட்டோவை உருவி காட்ட அதில் நிரஞ்சனின் அம்மாவின் கழுத்தை கட்டிக்கொண்டு நித்திலா நின்றிருந்தாள்.

"இது... இந்த போட்டோ எப்படி ?" என் புரியாம விழிக்க

"இது நீ ஊரிலிருந்து வந்த அன்னைக்கு நான் மாடி ஜன்னலில் இருந்து எடுத்தேன். அதான் ஆங்கிள் கொஞ்சம் சரியாக வரவில்லை. நீ அம்மாவிடம் பேசிட்டு புக் எடுக்க வந்தது, என் போட்டோவை யாருக்கும் தெரியாம திருடிட்டு போனது, அதுக்கு நீயே சமாதானம் சொல்லி என்னையும் நடுவில் இழுத்தது எல்லாவற்றையும் பார்த்து ரசித்துக்கொண்டு தான் இருந்தேன்" என சிரிக்க,

"ஹய்யோ...!" என வெட்கத்துடன் முகத்தை மூடி சிரித்தாள்.

"ஆனால் அந்த நிமிடம் நான் அடைந்த சந்தோஷம் சொல்ல வார்த்தைகளே இல்லை நிலா. நீ வந்த ரெண்டு நாளில் இந்து வந்தா. அவளுக்கு மட்டும் நான் உன்னை பற்றி சொல்லி இருந்தேன். அவளுக்கு உன்னை சீண்டி பார்க்கணும்னு ஆசை. அவ உன்னிடம் விளையாடியதை நீ



சீரியசாக எடுத்துக்குவன்னு எதிர்பார்க்கவே இல்லை. என்னுடைய மனதை சொல்வது போலதான் நீ வாங்கி அனுப்பிய உடையை நான் குற்றாலத்திற்கு போட்டுக்கொண்டு வந்தேன். எப்படியும் வீட்டுக்கு வரும் முன் உன்னிடம் சொல்லிவிடவேண்டும். நீ உன் படிப்பை முடித்ததும் அம்மாவிடம் பேசலாம் என்று நினைத்தேன். எல்லாம் நல்லபடியாக நடந்துக்கொண்டே வரும் போது கடைசியில் கோவிலில் வந்து தலைகீழா மாறி போச்சு. உன் மூட் அவுட்க்கு காரணம் புரியாமல் நான் தவிக்க, அது கோபமாக மாறியது. அதான் உன்னிடம் எதுவும் பேசாமல் இந்துவை மட்டும் தேன்மலைக்கு கூட்டிட்டு போயிட்டு வந்தேன். அதன் பிறகு வந்த நாளிலும் நீ என்னிடம் பேசவே இல்லை" என வருத்தத்துடன் சொன்னான்.

"அப்போதான் அத்தை பாட்டிகிட்ட நம்ம கல்யாணத்தை பத்தி பேசினாங்க உங்களை பார்க்க வெட்கமாக இருந்தது. அதை நீங்க வேற மாதிரி புரிஞ்சிகிட்டீங்க"

"நீயும் என்னிடம் சொல்லாமலேயே ஊருக்கு கிளம்பிட்ட. மாமாவும், பாட்டியும் இறந்தது தெரிந்ததும் உன்னை பார்க்க ஓடிவந்தேன், ஆனால் நீ எங்கேன்னு யாருக்கும் தெரியவில்லை. உன் சொந்தங்கள் யாரையும் எனக்கு தெரியாது. அந்த நேரம் நான் பட்ட துன்பம் போதும்" என தலையை உலுக்கி கொண்டான்.

"நான் ஊருக்கு கிளம்பறேன்னு சொல்லிக்கொள்ள வந்த நேரத்தில் தான் நீங்க யாரையோ காதலிப்பதாக அத்தையிடம் சொல்லிக்கொண்டு இருந்தீங்க. நம்ம வாழ்க்கையில் எல்லாமே முடிந்துவிட்டதுன்னு நானே தப்பு கணக்கு போட்டுட்டேன். பாட்டியே உங்களிடம் நேராக கேட்கிறேன்னு சொன்னதையும் நான் மறுத்துவிட்டேன். ஆனால் அன்னைக்கே பாட்டி சொன்னதை கேட்டிருந்தால்

நாம ரெண்டு பேருமே இவ்வளவு கஷ்டம் பட்டிருக்கவேண்டாம். ரிஷி அத்தான் உங்களிடம் ரிசாட் பொறுப்பை ஒப்படைத்ததால் தான் இன்னைக்கு நாம ஒண்ணா சேர்ந்திருக்கோம். நாம அவருக்கு தான் தேங்க்ஸ் சொல்லணும். எதுவாக இருந்தாலும் மனதிலேயே வைத்து கொண்டிருந்தால் இப்படி தான் குழப்பமாகும்னு நமக்கு நாமே பாடம் கத்துகிட்டு இருக்கோம். ஆனால் நம்ம கல்யாணத்தை அப்பாவும், பாட்டியும் இருந்து நடத்தி இருந்தா எவ்வளவு சந்தோஷபட்டிருப்பாங்க" என சொல்லும்போதே கண்கலங்க அவன் தோளில் தலைசாய்த்துக்கொண்டாள்.

ஆதரவாக அவள் முதுகை தடவிக்கொடுத்தான். "தப்பு பண்ணிட்டேன் அத்தான், நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். பாட்டியோட வீட்டையும், அப்பா வாங்கிய வீட்டையும் நான் விற்க சொல்லி இருக்ககூடாது. எதையோ மறக்க நினைத்து அவங்க வாழ்ந்த வீட்டை விற்க சொல்லிட்டேன்" என கலங்கியவளின் கண்ணை துடைத்துவிட்டவன்

எழுந்து சென்றவன் பீரோவிலிருந்து எதையோ எடுத்துக்கொண்டு அவள் கரம் பற்றி, "என்னோடு வா" என அழைத்துக்கொண்டு நித்திலாவின் பாட்டிவீட்டின் முன்னால் வந்து நின்றான்.

"ஐயோ..! அத்தான் என்ன இது ? யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க ? கல்யாண அசதியில் எல்லோரும் நல்லா தூங்கறாங்க. நாம எழுந்து வந்ததை அத்தை பார்த்தால் அவ்வளவு தான் இந்த நேரத்தில் இன்னொரு வீட்டு கதவை தட்டுவாங்களா ?" என கிசுகிசுத்தவள் பயத்துடன் சுற்றும்முற்றும் பார்த்தாள்.

"அவசரகுடுக்க, ஷ்..." என்று சொன்னவன் தன் கையிலிருந்த சாவியால் வீட்டை திறந்து உள்ளே



சென்றவன், "வாங்க மேடம்" என சொல்ல புரிந்தவளுக்கு இதெல்லாம் நிஜமா என தோன்றியது. அவன் முகத்தை பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

ஹாலில் இருந்த ஊஞ்சலை பார்த்ததும் பழைய நினைவுகள் அலையென புரள தன் பாட்டி அமரும் இடத்தை தொட்டு கலங்கியவள், "தேங்க்ஸ் அத்தான் தேங்க்ஸ். எனக்காக என்னவெல்லாம் செய்திருக்கீங்க"

"என்னடா செய்தேன். உன்னை தேடினேன் நீ எங்கே இருக்கேன்னு தெரியவே இல்லை. அப்போதான் இந்த வீட்டை நீ விற்றுவிட்டதாக கேள்விபட்டேன், அவர்களிடம் விசாரித்தும் உன் இடம் தெரியவில்லை. வீட்டை வாங்கியவரிடமே பேசி மேற்கொண்டு பணம் கொடுத்து உன் நினைவாக இருக்கட்டுமேன்னு வாங்கிக்கொண்டேன். கூடிய சீக்கிரமே தாம்புரியில் உங்க வீட்டையும் வாங்கிடலாம்" என்றவனின் கன்னத்தில் மாறிமாறி முத்தமிட்டவள் அவனை இறுக அணைத்துக்கொண்டாள்.

சிறுகுழந்தை போல வீடு முழுவதும் அவனுடன் கைகோர்த்தபடி சுற்றிவந்தாள். "இங்கே இருந்தபடி நான் உங்க ரூமை பார்த்துக்கொண்டிருப்பேன்" என்று தன் அறை ஜன்னலில் இருந்து அவன் அறையை சுட்டிக்காட்டி சொன்னாள். பின்னால் தோட்டத்தில் இருந்த மரத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடியபடி அவனை நினைத்துக்கொண்டு இருந்ததையும், தன் இனிய நினைவுகள் ஒவ்வொன்றையும் அவனிடம் புன்னகையுடன் பகிர்ந்துக்கொண்டு இருந்தாள்.

இருவரும் தங்களை மறந்து இருக்க நிரஞ்சன், "நிலா என்னோடு வருகிறாயா ?" என்றான்

ஊஞ்சலில் அவன் கையணைப்பில் அவன் மீது சாய்ந்து அமர்ந்திருந்தவள் கண்களை

மூடிக்கொண்டே "எங்கே ?" என கேட்டாள்.

"நம்ம ஆபீஸ்க்கு"

திரும்பி அவனை பார்த்து உதட்டை சுழித்தவள், "ஹய்யோடா.... நான் வந்தா உங்களால் என்னை சமாளிக்க முடியாதே" என்றாள் கிண்டலாக.

"யாருடி சொன்னது. நீ என் பக்கத்தில் இருந்தால் உன்னையே பார்த்துக்கொண்டு என்னால் வேலை செய்ய முடியாதுன்னு மறைமுகமா சொன்னேன்."

"இந்த சமாளிப்பில் ஒன்னும் குறைச்ச இல்லை. நாளெல்லாம் பார்த்துக்கொண்டே இருப்பது மாதிரி அவ்வளவு அழகாவா இருக்கேன்" என சிரிப்புடன் அவன் முகம் பார்க்க

அவனோ சலிப்புடன், "திரும்ப திரும்ப என்னை பொய் சொல்ல வைக்காதே நிலா. பொய் சொல்லும் வாய்க்கு போஜனம் கிடைக்காதுன்னு எங்க பாட்டி அடிக்கடி சொல்வாங்க" என சொல்ல

"என்னது" என எழுந்தவளின் தோளை பற்றி அருகில் இழுத்தவன், "சரியான தொட்டாசிணுங்கி" என அவள் மூக்கை பிடித்து ஆட்டியவன், "கோபத்திலும் நீ...." என கிறக்க குரலில் சொல்லி நிறுத்தியவன் ஆர்வமாக தன்னை பார்த்தவளின் கண்ணை உற்றுபார்த்து, "அசிங்கமாதாண்டி இருக்க" என சொல்லிவிட்டு சிரிக்க

திகைத்து விழி விரித்தவள் "அத்தான்..." என சிணுங்கி அவன் நெஞ்சில் சாய அவனின் சிரிப்பு அவளையும் தொற்றிக்கொண்டது.

முற்றம் வழியாக தெரிந்த வானத்தில் இருந்த நிலவு இவர்களின் சிரிப்பு சத்தத்தை கேட்டு தன்னை மூடி இருந்த மேகத்தை விலக்கி வெளியே வந்து எட்டிபார்த்து இருவரின் சிரிப்பையும் அவர்கள் அறியாமல் ரசிக்க தொடங்கியது.

***********


உயிராக வா நிலா
ஷெண்பா